

# பாரத ரத்னா எம்.ஜி.ஆர்

நாகை தருமன்

# பாரத ரத்னா
# எம்.ஜி.ஆர்.



நாகை தருமன்

பேரறிஞர் அண்ணா பதிப்பகம்,
'தமிழ்ச்சோலை'
R-16/1, பீட்டர்சு சாலைக் குடியிருப்பு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.

| | |
|---|---|
| முதல் பதிப்பு: | ஜூன், 1994 |
| உரிமை: | ஆசிரியருக்கு |
| நூல்: | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். சிறப்பியல்புகளைக் கூறும் வரலாற்று வடிவம் |
| வெளியிட்டோர்: | பேரறிஞர் அண்ணா பதிப்பகம், R-16/1, பீட்டர்சு சாலைக் குடியிருப்பு, சென்னை - 600 014. |

**விலை: 15 ரூபாய்**

| | |
|---|---|
| பக்கங்கள்: | 160 |
| எழுத்து: | 10 பாயிண்ட் |
| நூலின் அளவு: | 18.5 x 12.5 செ.மீ. |
| முகப்பு ஓவியம்: | **அமுதோன்** |
| ஒளி எழுத்து வடிவம்: | முருகன், இந்து லேசர்ஸ் சென்னை - 600 028. |
| அச்சிட்டவர்: | தி ஆர்க் பிரிண்டர்ஸ் 196, ஆர்.கே. மடம் சாலை, சென்னை - 600 028. |


அண்ணாவின் அரசைக் காணிக்கையாகப்பெற்ற பெரியார்



# வெள்ளிவிழா காணும் அண்ணா அரசு!

அரசியலில் அன்பையும், பண்பையும் விதைத்தவர் அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா. 'தேர்தலில் போட்டியிடலாமா? வேண்டாமா?' என்பதற்கே மாநாட்டில், மக்கள் தீர்ப்பை... கருத்தை அறிந்து கொண்டு (1957), தேர்தல் களத்தில் இறங்கிய ஒரே தலைவர்!

பேரறிஞர் அண்ணா, 6.3.1967 அன்று சென்னை மாநில முதல் மந்திரியாகப் பொறுப்பேற்றார். தமிழ்நாட்டின் முதலமைச்சரானார்.

**"இந்த அரசைத் தந்தை பெரியாருக்குக் காணிக்கை ஆக்குகிறேன்"** என்றார். அவருக்குப்பின் இயக்கத்தில் ஏற்பட்ட சூறாவளியின் பயனாக...

"அண்ணாவின் அரசை அமைத்தே தீருவேன்" என்று சூளுரைத்துப் புறப்பட்ட புரட்சித்தலைவர், 'தமிழகம் தன்பக்கம்' என்று, 'மக்கள் சக்தி'யெனும் மகத்தான சக்தியின் மூலம், 56 மாதங்களில் நிரூபித்தார். தமிழ்நாடு, முதல் அமைச்சராக 30.6.1977ல் புரட்சித்தலைவர் ஆட்சிபீடத்தில் அமர்ந்தார். அதற்கு முன்பு – அண்ணா சிலையருகில் கூடியிருந்த மக்கள் கடல் மத்தியில்தான் முதன்முதலில், அவர் வாக்குறுதி எடுத்துக் கொண்டார் – வாழ்த்துக்களைப் பெற்றார் என்பதை அனைவரும் அறிவார்கள்!

**"இந்த ஆட்சி... அண்ணாவுக்குக் காணிக்கை! இது அண்ணாவின் அரசு"** என்றார் பொன்மனச்செம்மல்!

கட்சியின் பெயரில்... கொடியில்... கொள்கையில்... இயக்கப் பத்திரிக்கைப் பெயரில்... 'அண்ணா' என்ற முத்திரையைப் பதித்தார். அவர் எண்ணம்... சொல்... செயல்... அனைத்திலும் "அண்ணா" வாழ்ந்தார்! 'அண்ணா நாமம் வாழ்க' என்று சொல்லாமல் புரட்சித்தலைவர் பேச்சு நிறைவெய்தியதில்லை!

மக்களுக்காகவே வாழ்ந்த, மகத்தான தலைவர் டாக்டர் பாரதரத்னா எம்.ஜி.ஆர்.!

"புரட்சித்தலைவர் என் அரசியல் ஆசான்" என்று கூறும் புதுமைப்பெண், **'புரட்சித்தலைவரின் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புகளே'** என்று முழக்கமிடும் புரட்சிப் பெண்மணி புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா, **இன்றைய தமிழக முதல்வர்! கழக ஏடு 'நமது எம்.ஜி.ஆர்.'**

பெண்மை சீற்றங்கொண்டு சிங்கமென சிலிர்த்தெழுந்தால், எதிர்ப்புகள்... 'தூள் தூள்' என்று ஆக்கி, வெற்றி கண்ட வீராங்கனை புரட்சித்தலைவி!

புரட்சித்தலைவரின் படத்தைச் சட்டப் பேரவையில் திறந்துவைத்து, அவர் செய்த சங்கநாதம், மறக்க முடியாத மணிவாசகம்!

புரட்சித்தலைவர் நினைவிடத்தை பெரும் பொருட்செலவில், எத்தனை அற்புதமாகச் சிறப்பாகச் செய்துள்ளார்...! நம் கண்களில் கண்ணீர் அருவி நன்றியோடு சுரக்கின்றது!

உணவுப் பற்றாக்குறைக்காக முதலமைச்சராக இருந்தபோது, புரட்சித்தலைவர் உண்ணா நோன்பிருந்தார்.

காவிரி நீர் வரவேண்டும் என்பதற்காக புரட்சித்தலைவி, தன்னை வருத்திக்கொண்டு, உயிரையும் துச்சமென மதித்து உண்ணா நோன்பிருந்தார், பல நாட்கள்!

சாதனைகள்.... மக்கள் துயர் துடைக்கும் திட்டங்கள் தொடர்கின்றன!

தாயுள்ளம் கொண்டவர் புரட்சித்தலைவர்!

தாயே... தலைவியாகியுள்ளவர்... புரட்சித்தலைவி!

அன்னை தெரசாவும், தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பாசறைத் தளபதி கி. வீரமணியும், சான்றோர்களும் அவரைப் பாராட்டுவதைக் காணும்போது பரவசம் கொள்கிறோம்! கண்கள் பனிக்கின்றன!

வரலாறு வாழ்கிறது! டாக்டர் புரட்சித்தலைவி வரலாறாக வாழ்கிறார்!

**பேரறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் பெரும்புகழ் வளர்க்கும் அவருக்கு, இந்நூலைக் காணிக்கையாக்கி மகிழ்கிறேன்.**

பேரறிஞர் அண்ணா முதலமைச்சராகப் பொறுப்பேற்று (1967-1994), 27 ஆண்டுகள் ஆகின்றன. இடையில்... "கலைப்புகள்" நடந்த காலத்தைக் கழித்துக் கொண்டு பார்த்தால், "அண்ணா ஆட்சி துவங்கிய வெள்ளிவிழா", 'தந்தை பெரியாருக்குக் காணிக்கையாக்கிய திராவிட இயக்க (அண்ணா) ஆட்சி வெள்ளிவிழா' காணுகின்றோம்!

இந்த ஏழைத்தொண்டனால் கோலாகலமாக இதனைக் கொண்டாட இயலாது; குறிப்பிட்டு... குதூகலம் கொள்ள முடியும்! 'அண்ணா ஆட்சி வெள்ளிவிழா'வில் 'பாரதரத்னா எம்.ஜி.ஆர்.' நூல் பவனி வருவது எனக்குக்

கிடைத்தப் பெரும் பேறு என மனநிறைவு கொள்கிறேன். இந்த அரசும் வெள்ளிவிழா கண்டு, அது 'பொன் விழா'வாகத் தொடர வேண்டும்.

'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என்று அண்ணா கூறியது, 'கோரிக்கையற்றுக் கிடக்கும் வேரிற் பழுத்த பலா'வாக உள்ள என்னைப் போன்ற எளியவர்களுக்குத்தானா ?

வாழ்க... அண்ணா...., புரட்சித்தலைவர்.... புரட்சித்தலைவி புகழ்!

விசுவாசம்தான் என் சுவாசம்! நன்றி என்னோடு ஒன்றிவிட்டது! அல்லல் பட்டாலும் அலைபாயாத, நிலைகுலையாத, தடம் மாறாத தொண்டன் வாழ்த்துக்களைக் குவிக்கிறேன் - வணக்கத்துடன்!

'தமிழ்ச்சோலை'
16/1, பீட்டர்சு சாலைக் குடியிருப்பு
சென்னை - 600 014.

அன்புடன்...
நாகை தருமன்



## நன்றி ! நன்றி ! நன்றி !

"பாரத ரத்னா எம்.ஜி.ஆர்." தொடர் கட்டுரையாக "பொம்மை" இதழில் வெளிவரக் காரணமான ஆசிரியர் திரு. விஸ்வம், துணையாசிரியர் திரு. வீரபத்ரன்.......

நான், வாழ்க்கைச் சோதனைகளினால் இடறி விழும்போதெல்லாம், அன்போடு கை கொடுக்கும் பத்திரிக்கையாளர் பலர். அவர்களில் 'அலை ஓசை' எம்.பி. மணி மறக்க முடியாதவர். அவர் மகன், 'இந்து லேசர்ஸ்' முருகன் உதவி, இந்நூலுக்கு முதன்மையானது. 'தினத்தூது' திரு. சுரேஷ் தானே பொறுப்பேற்று, அழகூட்டி புத்தகமாகத் தருகிறார். நண்பர் விஜயன், பிலிம் நியூஸ் ஆனந்தன், இன்னும் பல நண்பர்கள் நட்புக்கு இலக்கணமாக இருந்து உதவியுள்ளனர். அவர்களுக்கெல்லாம் கரம் குவித்து இதய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- நாகை தருமன்

# மகேசன் குரல்...



"எல்லா உலகங்களையும்விடப் பெரியது மனிதமனம். நல்லெண்ணத்தை வழங்குவதில் எந்த அளவும் இருக்கமுடியாது; ஏனென்றால், உலகிலே கேட்பதைவிட அதிகமாகத் தரமுடிந்ததும் – கொடுப்பதைவிட அதிகமாக எடுக்க முடிந்ததும் நல்லெண்ணம் ஒன்றுதான்!

'உங்களுக்காக நான்' என்பதைவிட, 'உங்களால்தான் நான்' என்பதை ஒருபோதும் மறவேன்."

எத்தனையோ கோடி (மனித) உலகங்களைக் கண்டு, நல்லெண்ணத்தை வாரிக்கொண்டு, வானமளந்த புகழ்கொண்ட பேரறிஞர் அண்ணாவின் திருவாசகம் இது!

அந்த மாபெரும் மக்கள் தலைவர்தான்... 'மக்கள் குரலே – மகேசன் குரல்!' என்றார். அண்ணாவின் இதயக்கனியும் 'மக்கள் திலகம்' என்று போற்றப்பட்டவர்தான்!

மக்கள் திலகம் பற்றிய நூலின் அணிந்துரை..... 'மகேசன் குரல்' ஆனது சரிதானே ?

*நல்லெண்ணங்களை எடுத்துத் தொடுக்க முயன்றுள்ளேன்...! மலர்ந்தவை ஏராளம்... தொடுத்தவை கொஞ்சம்...! ஆயினும் எழில் கொஞ்சும்! மணம் நுகரட்டும், உங்கள் நெஞ்சம்!*

*ஒரு படைப்பாளிக்கு மகிழ்ச்சியும் மனநிறைவும் தருவது எது? அவனது எழுத்தைப் படித்துத் திளைத்து பரவசப்பட்டு, நல்லவர்கள் பாராட்டி, வாழ்த்துக்களை வழங்குவதுதான்! என்னைப் போன்றவர்களிடம் இருக்கும் ஈடு இணையிலாச் செல்வமே அதுதான்...!*

*அந்த செல்வக் குவியலில் சிறிது... இதோ...*

* "புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைச் சொல்லோவியங்கள் மூலம் உலகுக்குக் காட்ட அருமை நண்பர் நாகை தருமன் எடுத்துக் கொண்ட முயற்சியே இந்நூல். 'கருத்தோவியக் கண்காட்சி சாலை'யைப் போல் இந்நூலை உருவாக்கிக் காட்டியுள்ளார், நண்பர் நாகை தருமன். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் அறிவுத்திறன் – ஆற்றல் திறன் – பண்பாட்டுத் திறன் – செயலாற்றுந் திறன் – கலைத்திறன் போன்ற பல்வேறு திறன்கள் இந்நூலில் படம்பிடித்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

நண்பர் நாகை தருமன் அவர்கள் அழகிய – இனிய – எளிய தமிழ் நடையால் எல்லோருடைய உள்ளத்தையும் கொள்ளை கொள்ளக் கூடிய தகைமை படைத்தவராவார். அவர் எழுதியுள்ள அரிய நூல்கள் பலப்பலவாகும். அவற்றால் பயன் பெற்றோரும் பலப்பலராவர்.

எதிர்காலத்தைப்பற்றி நல்ல கனவுகள் காண விரும்புகிற ஒவ்வொரு இளைஞருடைய கரத்திலும், இந்த நூல் இருக்க வேண்டியது இன்றியமையாத சிறப்புடையதாகும். அப்படி இந்த நூலை ஏந்தினால், ஒவ்வொருவருடைய இனிய – நல்ல கனவும் எதிர்காலத்தில் நனவாக மாற, இந்த நூல் பெரிதும் துணை புரியும் என்பது திண்ணம்."

- மாண்புமிகு டாக்டர் நாவலர்

*(புரட்சித்தலைவரைப் பற்றிய முதல் நூலுக்கு முத்தான முன்னுரை இது!)*

* "இனிய சகோதரர் நாகை தருமன் அவர்கள் தமிழ் மனம் கொண்டவர். அவர் மேலும் மேலும் புகழ்பெற இதயப்பூர்வமாக வாழ்த்துகின்றேன்."

- மாண்புமிகு **கே.ஏ.கே.**

* "பத்திரிகைத் துறையிலே மிகுந்த அனுபவம் பெற்ற, சிறந்த எழுத்தாளர், அருமைச் சகோதரர் நாகை தருமனை பாராட்டுகிறேன். அவருடைய இலக்கியப்பணி வெற்றி பெற வாழ்த்துகிறேன்."

- மாண்புமிகு **ஆர்.எம்.வீ.**

* "தங்கள் எழுத்து, தமிழக மக்கட்கு ஏற்றம் தரும் எழுச்சிமிகு இலக்கியமாகும்."

- பேராசிரியர் **நா. பாண்டுரங்கன்**

* "சந்திரனைப் போற்றும் நட்சத்திரங்கள் – புத்தகம் கிடைக்கப் பெற்றேன். இந்த நூலை வடித்திருப்பது மிகப்பெரிய சாதனைதான்.

தங்களது கிரீடத்தில் இந்நூல் ஒரு வைரக்கல்!"

- இயக்குநர் சிகரம் **கே. பாலச்சந்தர்**

*(இரண்டாவது நூலுக்கு 'சிகரம்' மகுடம் சூட்டுகின்றது)*

* "திரைத்துறைக்கும், பத்திரிகைத் துறைக்கும் தாங்கள் ஆற்றியுள்ள சேவை மிகப்பெரியது. இலக்கியத்தில் மேன்மேலும் சாதனைகள் படைத்து தங்கள் புகழ் விண்ணளவு உயர என் மனமார்ந்த வாழ்த்துக்கள்."

- மக்கள் திலகம் கலையுலக வாரிசு **கே. பாக்யராஜ்**

* "நாகை தருமன் அவர்கள் நாடறிந்த நல்ல எழுத்தாளர். சிறந்த பத்திரிக்கையாளர். அவர் எழுதிய பல நூல்கள் வெளிவந்துள்ளன.

எம்.ஜி.ஆரிடம் எந்தவிதத் தொடர்பும் இல்லாதவர்கள்கூட, அவரைப்பற்றி நூல்களை எழுதியிருப்பது எனக்குத் தெரியும். சாதனையாளரைச் சந்தித்திருக்கக்கூட மாட்டார், நூலாசிரியர். ஆனால், சேகரிக்கப்பட்ட செய்திகளைக் கொண்டே நூல் தயாராகிவிடும்.

ஆனால், நண்பர் நாகை தருமன் அவர்கள் மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுடன் நேரிடையாக, நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தவர் என்பதை நான் நன்றாக அறிவேன். நாகை தருமன் "நவமணி"யில் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்திலிருந்து மக்கள் திலகத்தை அடிக்கடி சந்திப்பார். இருவரும் நீண்ட நேரம் அன்போடு உரையாடுவர்; அளவளாவுவர். இந்த நெருக்கமும் உறவும் மக்கள் திலகம் கடைசி நாட்கள்வரை நீடித்திருந்தது. ஆனால், அவரிடமிருந்து எந்தவி தமான உதவியோ, ஆதாயமோ நாகை தருமன் அடைந்தவரல்ல.

தனது தொடர்பையும், அனுபவங்களையும் வைத்தே எம்.ஜி.ஆரைப் பற்றி நாகை தருமனால் ஒரு விரிவான நூலை எழுதமுடியும். அதை விரைவில் எழுதுவார்."

- வி. ராமமூர்த்தி, ஆசிரியர், "சினிமா எக்ஸ்பிரஸ்"

*(மூன்றாவதாக இந்த நூல் அருமை நண்பர்கள் எண்ணத்தின்படி உருவாகியுள்ளது. நான்காவதும் வெளிவரும். தொடரும்....)*

* "உலகிலே பல நாடுகளுக்குச் சென்றுள்ளேன். ஆனால் தமிழ்நாட் டிற்கு வரவில்லை. இனிமேல் அந்தக் கவலையில்லை. தமிழ்நாட்டிற்கு நிச்சயம் வருவேன். உங்களுடன் கிடைத்த தொடர்பு, புரட்சித்தலைவ ருடன் ஏற்பட்ட தொடர்பாகக் கருதுகிறேன். புரட்சித்தலைவரைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் உங்களைப்பற்றி நினைப்பேன். உங்கள் புத்தகங்களை இங்கு நூலகத்தில் வைக்க உள்ளேன்."

. SENTHI, TORONTO, ONTARIA, CANADA.

*(அயல்நாடு தந்த அகநக நட்பு...!)*

*"பொம்மை" இதழில் - இதில் இடம்பெற்றுள்ள தொடர் கட்டுரையைப் படித்து மகிழ்ந்த நெஞ்சங்களின் பாராட்டு மடல் கள் சில...*

"இதழுக்கு இதழ் வித்தியாசமான தலைப்புக் கொடுத்து, புதுப்புது குணாதிச யங்கள் உடைய புரட்சித்தலைவரை நம் கண்முன்னே நிறுத்துகிறார், நாகை தருமன்."

சிந்தாமணி, சேதுசமுத்திரம்.

***

"நாகை தருமன் எழுதிய பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர். கட்டுரை படிப்ப தற்கு மட்டுமல்ல, பாதுகாக்க வேண்டியது."

**ஏ. அப்துல் முனிர், ஒசூர்.**

* * *

"பாரதரத்னா எம்.ஜி.ஆர். கட்டுரை, நாகை தருமன் கைவண்ணத்தில் மிளிர்ந்தது."

**கே.எஸ். சுதா, கொடுங்கையூர்.**

* * *

"விருதுகள் தானாக வருவதில்லை. அதற்கு உழைப்பும், உண்மையான தியாகமும் தேவை என்பதை நாகை தருமன் மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டி விட்டார்."

**ஈஸ்வரன், இளையாங்குடி.**

* * *

"குடிசையைக் கோபுரமாக்கினார். நலிந்தவர்களை உயர்ந்தவர்களாக்கினார் என்கின்ற எம்.ஜி.ஆர். வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் தேன்சொட்டு."

**சிவசாமி, சின்னமனூர்.**

* * *

"நான் கடைசி வரையில் நல்லவனாகவே வாழ்ந்து, மக்களுக்குத் தொண்டு புரிந்தபடி சாகவேண்டும் – என்று வேண்டிக் கொண்டேன். அவர் புன்னகை யோடு ஆசி கூறினார்" என்றார். மறைந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். பற்றி நாகை தருமன் எழுதியிருப்பது உள்ளத்தை உருகச் செய்துவிட்டது.

**பி. அண்ணாதுரை, சுந்தரபாண்டிபுரம்.**

* * *

"எம்.ஜி.ஆர். ஒரு பல்கலைக்கழகம் என்பதை, நாகை தருமன் எழுதும் கட்டுரையினால் உணரும்போது, அவர் புகழ் நியாயமானதுதான் என்பது மறுக்க முடியாததாக உள்ளது."

**சே. சேனாபதி, சென்னை – 51**

"எம்.ஜி.ஆர். என்ற மூன்றெழுத்தையும், அந்த மாமனிதரையும் என்றுமே மறக்க முடியாதபடி செய்து விட்டீர்கள்."

**ரவிகாந்த், சென்னை – 15.**

* * *

"தருமத்தின் தலைவனுக்கு - தருமன் அளித்த கண்ணீர் அஞ்சலி, மனதைத் தொட்டது."

**டி.கே. சுப்ரமணியன், திருப்பரங்குன்றம்.**

"நல்ல கட்டுரைகள் உள்ளதுதான் 'பொம்மை' என்பதற்கு இந்தக் கட்டுரையே சான்று."

**வித்யா சங்கர், பம்பாய்.**

* * *

"நாகை தருமன் எழுதிய கட்டுரையைப் படிக்கும்போது எம்.ஜி.ஆர். இன்னும் எங்களுடன் உயிரோடு இருப்பதுபோல் இருக்கிறது. மனதில் அவர் நிலைத்து நிறைந்து நிற்கிறார்."

**எஸ். பாலமுருகன், விழுப்புரம்.**

*(கடித மலர்களின் கருத்து மணம் இன்னும் நிறைய! முடிவே இல்லை - 'மகேசன் குரல்' அல்லவா!?)*







# பாரத ரத்னா எம்.ஜி.ஆர்.

* நாகை தருமன் *

"வெற்றி... வெற்றி... நான் வெற்றி பெற்றுவிட்டேன்"

இதய தெய்வம் புரட்சித்தலைவர் நடிக்கும் படங்களில், முதன் முதலில் எடுக்கும் காட்சியில் இப்படி உரையாடலை முழங்குவார்.

தொடக்கம்... அவர் நினைப்பு... உழைப்பு... எல்லாம் வெற்றி யாகவே முடியும். தளர்ச்சி இல்லாமல் வளர்ச்சிப் படிகளில் வாகை சூடியபடி வெற்றி வீரராக நடைபோடுவது அவருக்கு வாடிக்கை! 'எண்ணம் போல் வாழ்வு' என்பது இதுதான்.

சிந்தனை, செயல், முயற்சி அனைத்திலும் "வெற்றி" என்றே எண்ணி எந்தக் காரியமும் செய்வார் - துவங்குவார்.

செடிகளிலும், கொடிகளிலும் அரும்பி, மலரும் மலர்கள் கோடான கோடி.....! அத்தனை மலர்களும் மணம் தருவதில்லை!

மண்ணில் எத்தனையோ மரங்கள் வளர்கின்றன..... எல்லாமே காய்ப்பதில்லை - கனி தருவதில்லை!

ஆழ்கடலில் மூச்சடக்கி எடுத்து வந்த சிப்பிகள் அனைத்தி லுமே ஒளி உமிழும் உயர் முத்துக்கள் கிடைத்து விடுவதில்லை. அவை யாவும் வலம்புரி முத்தாக இருப்பதில்லை.....!

மணம் தரும் மலர்களில் மனத்திற்கு ரஞ்சிதமாக நாம் எந்த மலரை நினைத்து நுகர்கின்றோமோ, அந்த மலரின் மணம் தருவது மனோரஞ்சிதம் மட்டும்தான்....!

முக்கனியில் மாங்கனி...

முத்துக்களில் வலம்புரி முத்து...

மலர்களில் மனோரஞ்சிதம்...

எண்ணும்போதெல்லாம் குன்றாத எழிலுடன், குறையாத மணத்துடன் நாவினிக்கும் நமது முத்தமிழ்போல் என்றும் இளமையும் இனிமையும் கொண்டவர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். தான்....!

கலையுலகம் கவர்ச்சி நிறைந்தது....! பரபரப்புக்கு இங்கே குறைவே இல்லை. மக்களை வெகு விரைவில் ஈர்க்கும் மாபெரும் சக்திமிகுந்த சாதனம் இது...! இதனைப் பயன்படுத்திக் கொண்டு உயர்வதையே நோக்கமாகக் கொண்டவர்கள்தான் அதிகம்...! மக்களுக்குப் பயன்பட்டவர்கள் மிகவும் குறைவு....! அந்தக் குறைவான பட்டியலில் குறிப்பிடத்தக்க வகையில் முதலிடம் பெற்றதால்தான் எம்.ஜி.ஆர். மக்கள் திலகமாகி, பொன்மனச்செம்மல் என்று போற்றப்படுகின்றார்.

எந்த மனிதனும் உயர்ந்த நிலைக்கு வரும்போது செல்வாக்கு இருப்பதுபோல் தெரியும்...! 'புகழ்' கொண்டு வரப்படும்....! ஆனால், அந்த மனிதனின் உயர்வுக்குக் காரணம் என்னவென்று அடிப்படையை ஆராய்ந்தால்தான் செல்வாக்கு நிற்குமா - புகழ் நிலைக்குமா என்பது தெரியும்...!

எம்.ஜி.ஆர். தன்னுடைய உழைப்பினால், அன்பினால், பண்பினால், திறமையால் உயர்ந்தார்! அதனால் செல்வாக்குக்கு அவரால் செல்வாக்கு கிடைத்தது! 'புகழ்' தன்னை அவரோடு இணைத்துக் கொண்டதால் பெருமை பெற்றது!

அன்பின் வழிதான் உயிர்நிலை; அரத்தைவிடக் கூர்மையான அறிவைப் பெற்றிருந்தாலும் மக்கள் பண்பில்லாதவர் - மரம் போன்றவர் என்றார் வள்ளுவர்!

அந்த மனிதப் பண்புதான் மக்கள் திலகம் எம்.ஜி.ஆரை சரித்திரமாக ஆக்கியது!



## ஏழைப்பிள்ளைகளுக்குக் கல்வி... ஏங்கிய தாய்க்கு விருந்து!

தஞ்சை மாவட்டத்தில் கிராமம் ஒன்றிலிருந்து ஏழ்மையில் வாடும் குடும்பத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவன், எம்.ஜி.ஆருக்குக் கடிதம் எழுதுகிறான். தனது படிக்கும் ஆசையையும், பண வசதியற்ற நிலைமைகளையும் கண்ணீர் வரிகளால் சோக முத்திரையிட்டு, நம்பிக்கையோடு அவன் எழுதியதை எம்.ஜி.ஆர். படிக்கிறார்.

சில நாட்களில் அவன் படிக்கின்ற பள்ளிக்கு எம்.ஜி.ஆரிடமிருந்து கடிதம் ஒன்று வருகின்றது. அந்த மாணவனைப்பற்றிய முழு விவரமும் கேட்டு!

தலைமை ஆசிரியர் விரிவாகப் பதில் எழுதுகின்றார். அதன் பின்பு மாதம்தோறும் அந்த ஏழை மாணவனின் படிப்பிற்காக பணம் தேடிப் போகின்றது! பள்ளியிறுதி வகுப்பு வரை அவனது கல்விச்செலவை எம்.ஜி.ஆர். ஏற்றுக் கொள்கிறார். பொங்கல் நாளில் அவனது குடும்பத்தினர் புத்தாடை அணிந்து பூரிக்கவும் அவர் காரணமாகின்றார்.

இந்தச் சம்பவம் நடந்து நாற்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. பல ஆண்டுகளுக்குப் பின்பு, அந்த மாணவனை இளைஞனாகச் சந்தித்தேன். நல்ல வேலை ஒன்றில், கை நிறைய நியாயமாகச் சம்பாதிக்கும் அவன், பூரிப்போடு காட்சியளித்தான். தன் குடும்பம் தலை நிமிர்ந்து வளமோடு இருக்கக் காரணமானவரை நெஞ்சத்தின் வாயிலான வாயால் வாழ்த்தினான்!

ஒரு ஏழைக்கு எழுத்தறிவிப்பது அன்னசத்திரம், ஆலயம் கட்டு வதைவிடப் புண்ணியம் கோடி என்றானே பாரதி!

எம்.ஜி.ஆர். எத்தனை ஆயிரம் ஏழை மாணவர்களுக்கு வாரிக் கொடுத்து எழுத்தறிவித்திருப்பார்?

எண்ணிக்கொண்டே கொடுத்திருந்தாலல்லவா எண்ணிக்கை தெரியும்? அது கொடுத்தவருக்கும் தெரியாது. அவர் யாருக்குக் கொடுத்தார் என்று அடுத்தவருக்கும் தெரியாதே!

புகழே உருவெடுத்து வந்ததுபோல் திகழும் எம்.ஜி.ஆர்., நடுவூரில் இருக்கும் பழமுதிர்ச்சோலை! அந்தச் சோலைக்குக் காவலும் இல்லை; வேலியும் கிடையாது. மற்றவர்கள் பசியைப் போக்குவதுடன், அனைவருக்கும் அரணாக நின்று காவல் காக்கும் அற்புதச் சோலை அவர்.

'மீனவ நண்பன்' படப்பிடிப்பு மங்களூரில் கடலோரப் பகுதியில் நடைபெற்றது. மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., டைரக்டர்



ஸ்ரீதர், எம்.என். நம்பியார், லதா மற்றும் பலர் மணிபாலில் ஒரு ஓட்டலில் தங்கியிருந்தனர்.

ஒருநாள் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. இடைவேளை யின்போது மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., வழக்கம்போல் ஒவ்வொரு வரிடமும் நலம் வினவினார். தங்கியுள்ள இடம், சாப்பாடு வசதி எப்படி இருக்கின்றது என்று விசாரித்தார்.

'நன்றாக இருக்கின்றது' என்று அனைவரும் தெரிவித்தனர். தாயாக நடித்த மரகதம்மாள் என்பவர் எம்.ஜி.ஆர். அருகில் வந்தார்.

"தம்பி...." என்று ஆரம்பித்து, சொல்லத் தயங்கினார்.

"என்னம்மா.... உங்களுக்கு ஏதாவது வசதிக் குறைவா?" என்று எம்.ஜி.ஆர். பரிவோடு கேட்டார்.

"இல்லை.... தம்பி! ஒரு குறையுமில்லை....! வந்து... நீங்க தங்கி யிருந்த இடத்திலே மீனெல்லாம் சவுகரியமாகக் கிடைக்கிறதா?" என்றார் மரகதம்மாள்.



"என்னம்மா... மீன்... சாப்பிடணும்னு.... ஆசை! இவ்வளவு தானே! நீங்க தங்கியிருக்கிற ஓட்டலிலே மொத்தம் எத்தனைபேர் இருக்கீங்க?" என்று சிரித்தபடி கேட்டார்.

"நாங்க.... இருபத்தைந்து பேர் இருக்கிறோம்."

"சரி.... எல்லாரும் எத்தனை மணிக்குச் சாப்பிடுவீர்கள்?" அவர் மறுபடியும் வினவினார்.

"இரவு எட்டு மணிக்குச் சாப்பிடுவோம் தம்பி" என்றார் மரகதம்மாள்.

"சரி... இன்னைக்குப் பதினைஞ்சு நிமிஷம் தாமதமாக சாப்பிடுங்கள்...." என்று கூறிவிட்டு எம்.ஜி.ஆர். சென்றுவிட்டார்.

மரகதம்மாவுக்கும், மற்ற நடிகர்களுக்கும் ஒன்றும் புரியவில்லை. தான் வேடிக்கையாக ஆசையை வெளியிட்டதை, அவர் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாதே என்கின்ற கவலை அந்த 'அம்மாவுக்கு!

எல்லோரும் படப்பிடிப்பு முடிந்து ஓட்டலுக்குத் திரும்பி ஓய்வெடுத்துக் கொண்டார்கள். சாப்பாட்டு நேரம் நெருங்கியது.

திடீரென்று–

ஒரு கார் வந்து நின்றது. அந்தக் காரில் வந்தவர்கள் ஒரு அண்டாவைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்து, உள்ளே வைத்தனர்.

"சின்னவர் (எம்.ஜி.ஆர்.) கொடுக்கச் சொன்னார்" என்று சொல்லிவிட்டுச் சென்றனர்.

அண்டாவைத் திறந்தால் மீன் குழம்பு வாசனை ஓட்டலில் உள்ளவர்கள் மூக்கை இழுத்தது; நாக்கில் நீர் சுரக்க வைத்தது.

'இன்று பதினைந்து நிமிடம் தாமதமாகச் சாப்பிடுங்கள்' என்று எம்.ஜி.ஆர். சொன்னதன் பொருள் அப்பொழுதுதான் அவர்களுக்குப் புரிந்தது.

ஒருவரைத்தவிர அத்தனை பேருக்கும் அன்று மாபெரும் விருந்து. கடல் மீன்கள் ருசியை அவர்கள் ரசித்து, சுவைத்துச் சாப்பிட்டனர்.

அந்த ஒருவர் - நடிகர் கரிக்கோல் ராஜு. அவர் அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் பக்தர்... சைவம் என்பதால் மீனை மட்டும் சாப்பிடவில்லை!

மரகதம்மாளின் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை! நான் சாதாரணமாகச் சொன்னதை நினைவில் வைத்திருந்து, கவனமாகச் சரியாகச் சாப்பிடும் நேரத்திற்கு எல்லோருக்கும் மீன் விருந்து தந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆரைப் புகழ்ந்த வார்த்தைகளுக்கு அளவில்லை.

பெற்றவர் - ஆசைப்பட்டதைச் சொன்னாலும் காதில் விழாததைப் போல் செல்லும் பிள்ளைகள் உள்ள காலத்தில், தாயாக நடிக்க வந்த தனக்கு, 'எம்.ஜி.ஆர். என்ற தங்கமான பிள்ளை கொடுத்த விருந்து ஆயுளில் மறக்க முடியாதது' என்று கண்கள் பனிக்கக் கூறினார்.

ஈரமுள்ள வளமான பூமியில்தான் பயிர்விளையும். ஈகைப்பண்பும், அன்பும் உள்ள மனிதரிடம்தான் நல்ல உள்ளங்கள் ஒன்றும்!



## உள்ளத்தில் நல்ல உள்ளம்- ஊழியருக்கும் ஊழியன்...!

தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒரு நிகழ்ச்சி! மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளக் காரில் செல்கிறார்.

அவருடன் உதவியாளர்கள் (மறைந்த) சபாபதி, முத்து ஆகியோரும் செல்கின்றனர்.

எம்.ஜி.ஆர். வருவதை எப்படியோ அறிந்துகொண்ட மக்கள் வழிநெடுகப் பெரும் திரளாகக் கூடுகின்றனர். ஆங்காங்கு காரை நிறுத்தி மாலை சூட்டி, குளிர் பானம் வழங்கி மகிழ்கின்றனர்.

அன்புத்தொல்லைக்கு எல்லையே இல்லை என்பதை வாழ்க்கை முழுதும் கண்டு வருகின்ற மக்கள் திலகம், புன்முறுவல் மாறாமல், அவர்கள் அனைவருடைய வரவேற்பையும் ஏற்றுக் கொள்கிறார். குறித்த நேரத்திற்கு நிகழ்ச்சிக்குச் செல்ல வேண்டு மென்று குறிப்பாக உணர்த்திவிட்டு மீண்டும் புறப்படுகின்றார்.

நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு அவர் தாமதமாகத்தான் வருகின்றார். அவர் எப்போது வந்தாலும் காத்திருந்து காணத் தான் மக்கள் மகாசமுத்திரம் எங்கும் காத்திருக்குமே! இங்கு மட்டும் குறைந்தாவிடும்?



சேய் முகம் கண்ட தாயைப்போல் மக்கள் அன்பில், மக்கள் திலகம் திளைக்கிறார். நிகழ்ச்சி சிறப்பாக முடிகின்றது. எம்.ஜி.ஆரை நண்பர்கள் அழைத்துச் செல்கின்றனர்.

திரும்பி வந்து காரில் ஏறுவதற்குமுன் உடன் வந்தவர்களை எம்.ஜி.ஆர். அருகில் அழைக்கிறார்.

"சாப்பிட்டு விட்டீர்களா?" என்று கேட்கிறார்.

"சாப்பிட்டு விட்டோம்" ஒரே குரலில் பதில் வருகிறது.

சென்னையை நோக்கிக் காரின் சக்கரங்கள் சுழல்கின்றன. நகரத்தைக் கடந்து சாலையின் நடுவில் கார் வேகமாகச் செல்கிறது.

சிறிது நேரம் சென்றதும் திடீரென்று–

"காரை ஓரமாக நிறுத்துங்கள்" எம்.ஜி.ஆர். குரலோசை கேட்டு. ஓட்டுநர் சொன்னபடிச் செய்கிறார்.

எதற்காக நிறுத்தச் சொன்னார் என்று ஒருவருக்கும் புரிய வில்லை. அவர் குரலில் தென்பட்ட கடுமை மனதிற்குள் இனம் புரியாத பயத்தை அவர்களுக்கு ஏற்படுத்தியது!

தன்னைப்பற்றியே நினைப்பது விலங்கு குணம். பிறரைப்பற் றியும். அவர்கள் நலன் குறித்தும் சிந்திப்பது மனித குணம்! மனிதரில் மாமனிதர்கள்... புனிதர்கள் பசித்திருப்பவர்களைப் புசிக்க வைத்துப் பார்த்து மகிழ்வார்கள். இந்தப் பெருங்குணம் தாய் உள்ளம் கொண்டவர்களுக்கே உரியது.

திரைப்படம் ஒன்றில் கேட்ட பாடல் வரிகள் காதில் ரீங்காரம் செய்து கொண்டிருக்கின்றன.

'பசிக்கு விருந்தாக
நோய்க்கு மருந்தாக
இருப்பவர் தெய்வமடி!
தன் பசியைக் கருதாது
பிறர்க்குத் தருவோர்கள்
தெய்வத்தின் தெய்வமடி!'

என்ன ஆழமான கருத்துள்ள அழகான பாடல்!

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். காரை நிறுத்தச் சொன்னதும். உள்ளே அமர்ந்திருந்தவர்கள் இதயத்தில் 'எதற்காக?' என்ற கேள்விக்குறி எழாமலில்லை.

சொன்னதைச் செய்து பழக்கப்பட்ட உண்மையான ஊழியர் கள் என்பதால். கேள்வி இதயத்தோடு நின்றது; கார் சாலையில் ஒரு ஓரமாக நின்றது.



தன் அருகில் வைத்திருந்த ஒரு பையை எடுத்து, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். தன்னுடன் வந்தவர்களிடத்தில் நீட்டுகின்றார்.

"ஒரு ஜமுக்காளத்தை எடுத்து விரித்துப் போட்டுக்கொண்டு, உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டு வாருங்கள்"

"நாங்கள்....." சபாபதி முழுதும் சொல்லாமல் இழுக்கின்றார்.

"நீங்கள் சாப்பிடவில்லை என்பது எனக்குத் தெரியும். என்னை வரவேற்று, உபசரிக்கின்ற ஆர்வத்தில் அவர்கள் உங்களை அந்தக் கூட்டத்தில் கவனித்திருக்க முடியாது என்று சந்தேகப்பட்டுத் தான் இட்லியைப் பொட்டலம் கட்டிக்கொண்டு வந்தேன். நான் புறப்படத் தாமதமாகிவிடும் என்று நீங்கள் சாப்பிட்டு விட்டதா கப் பொய் சொன்னால் எனக்குத் தெரியாதா? இரவில் சாப்பி டாமல் இருக்கக்கூடாது...." அவர் கனிவோடு கூறுகிறார்.

"வந்து..." தங்கள் பொய் அவருக்குத் தெரிந்து விட்டதே என்ற அச்சம் அவர்களுக்கு.

"சரி... சரி... நேரமாகிவிட்டது. முதலில் போய் சாப்பிட்டு விட்டு வாருங்கள்" அவர் கண்டிப்பு அவர்களைத் துரத்துகின்றது.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அன்பு நெஞ்சத்தை எண்ணி நெகிழ்ந்த படி, ஜமுக்காளத்தை விரித்து அமர்ந்து, சாப்பிடத் துவங்கு கின்றனர். அவர் காரை நிறுத்திக் கூறிய வார்த்தைகள் மனதில் வலம் வந்ததால், வந்து அமர்ந்து சாப்பிடும்போதுதான் அவசரத் தில் குடிக்கத் தண்ணீர் கொண்டுவர மறந்துவிட்டது அவர்க ளுக்கு நினைவிற்கு வருகின்றது.

இந்தச் சமயத்தில்... இரு கரங்கள் –

தண்ணீர் வைத்திருந்த பாத்திரத்தையும் தம்ளரையும் நீட்டு கின்றன.

அவர்கள் நிமிர்ந்து பார்க்கின்றனர்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். சர்வசாதாரணமாக ஒவ்வொரு வருக்கும் தம்ளரில் தண்ணீர் ஊற்றி வைக்கின்றார்.

ஆம்! ஊழியர்களுக்கு ஊழியம் பார்க்கின்றார் எம்.ஜி.ஆர்.!

*அவர்கள் கண்கள் பனிக்கின்றன!*

லட்சோப லட்சம் பேர் அவரை உபசரிக்க காத்திருக்கும் போது, அந்த மாமனிதரோ சாதாரணமான தங்களுக்காகப் பசியறிந்து உணவு தந்து, தாகம் உணர்ந்து தண்ணீர் வழங்கியதைக் கண்டதும் திக்குமுக்காடிப் போகின்றனர்.

"சாப்பிடுங்கள்... சாப்பிடுங்கள்..." என்று சொல்லிவிட்டு மக்கள் திலகம் காரில் சென்று அமர்ந்து கொள்கின்றார்.

அவர்கள் சாப்பிட்டுவிட்டு வரும் வரையில் காத்திருக்கிறார். அதன் பின்புதான் காரின் சக்கரங்கள் சுழல்கின்றன!

'அன்பின் வழியது உயிர்நிலை' என்பதற்கு உதாரணம் இவர் தானோ!

செல்வம் குவியக் குவிய... செல்வாக்கு பெருகிப் பெருகி மனிதன் உயர்ந்து கொண்டே போகலாம்...! உள்ளம் இருக்க வேண்டுமே! உள்ளம் இருக்க வேண்டிய இடத்தில் பலருக்கு பள்ளமல்லவா இருக்கின்றது!



## அண்ணன் நான்தானே...!
## அன்னையும் எனக்கு நீதானே!

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையில் பஸ் டிரைவர் ஒருவர் விபத்துக்குள்ளாகிவிட்டார். காலில் பலத்த காயம் ஏற்பட்டு விட்டது. அந்த நிலையில் அறுவை சிகிச்சை செய்து அவரது காலை எடுக்காவிட்டால் உயிருக்கே ஆபத்து ஏற்படும்.

'காலை இழந்து ஊனமானவனாக வாழ்வதைவிடச் சாவதே மேல்' என்று பிடிவாதமாக அறுவை சிகிச்சை செய்து கொள்ளவே அந்த டிரைவர் மறுத்தார். அவரது தாய்க்கோ எப்படியாவது தன்

பிள்ளை உயிரோடு இருந்தால் போதும் என்ற துடிப்பு!

ஒவ்வொரு மணித்துளியும் செல்லச் செல்ல சாவு தன் மகனை நெருங்கிக் காவு கொண்டு விடுமோ என்று பதறினார் - கதறினார்!

தாயின் கண்ணீர் பிள்ளையின் மனதை மாற்றவில்லை! 'பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு' என்ற பழமொழிக்கு அந்த டிரைவர் உதாரணமா?

'இல்லை...! வயதான காலத்தில் தாயைப் பரிவோடு கவனிக்க வேண்டியது மகனது கடமை! கால் ஊனமாகி, தாய்க்குத் தானே பாரமாகக்கூடாது' என்பதுதான் அவன் தவிப்பு!

இருவரது உணர்வுகளும் உயர்வானது!

அந்தத் தாய்க்குத் தன் மகனைக் காப்பாற்ற ஒரேவொரு வழிதான் தென்பட்டது!

இந்தப் பிள்ளையைக் காப்பாற்ற இன்னொரு பிள்ளையை அழைத்து வரவேண்டும் - அவர்தான்... "எங்க வீட்டுப் பிள்ளை"!

தள்ளாத வயதில், தளராத உறுதியோடு எப்படியாவது தன் மகனைப் பிழைக்க வைத்துவிட வேண்டும் என்ற எண்ணத்தோடு மக்கள் திலகம் எம்.ஜி.ஆரை சந்தித்தார்.

அந்த அன்னையின் உதடுகள் உச்சரிக்க இயலாமல் போன வார்த்தைகளைக் கண்கள் கண்ணீரின் மூலம், கன்னங்களில் வரி வடிவங்களாய்த் தீட்டிக் காட்டின!

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அந்த மாதாவின் மனத்துயரை அறிந்து கொண்டு, கண்ணீரைத் துடைத்து, உடனே மருத்துவ மனைக்கு விரைந்தார்.

கால்களை இழந்தால் தனக்கு வாழ்வில்லை என்பதுதான் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த அந்த டிரைவரின் அச்சம்! தன் ஆறுதல் மொழிகளாலும், 'ஆதரவு தர நானிருக்கிறேன்' என்ற நம்பிக்கையாலும், அந்த அச்சத்தை மிச்சமில்லாமல் விரட்டினார் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.

டிரைவருக்குத் துணிவு துணையானது! அறுவை சிகிச்சை

செய்து. அவருடைய கால் போய்விட்டது. நம்பிக்கை வலுவாக இருந்தது! அவருக்கு செயற்கைக் கால் பொருத்தப்பட்டது.

உடல்நலமடைந்ததும். அந்த டிரைவர் கடை வைத்து நடத்துவதற்கு மக்கள் திலகம் உதவி செய்தார்.



இவ்வளவு பேருதவி செய்த எம்.ஜி.ஆருக்கு சென்னைக்கு வந்து. நேரில் நன்றி கூற வேண்டுமென்று அந்த 'முன்னாள்' டிரைவர். 'இன்னாள்' கடை முதலாளிக்கு தணியாத வேட்கை! தாய்க்கும் ஆசைதான்!

தாயும் மகனும் சென்னை வர விரும்புவது தெரிவிக்கப்பட்டது. அதற்கு மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். கூறிய பதில் இதுதான்.

"என்னைத் தேடி அந்த அன்னை வந்தபோது தன் பிள்ளைகளில் ஒருவனாகத்தான் கருதினார். ஒரு சகோதரனாகத்தான் அவரை நான் நினைத்தேன். நன்றி சொல்ல அவர்கள் வருவதென்றால் நான் அன்னியனாகி விடுவேன். தாயாக. தம்பியாக எப்போது வேண்டுமானாலும் வரலாம். தாய்க்கு ஒழுங்காக

ஆதரவு காட்டி, அவர் அன்பாக நடத்தினால் போதும். அதுவே என்னைப் பார்ப்பதற்குச் சமம்"

'யாதும் ஊரே... யாவரும் கேளிர்' என்ற பழந்தமிழ்ப் பாடல் ஒன்றுண்டு...!

'எல்லா ஊர்களும் எனது சொந்த ஊர்தான். அனைவரும் என்னுடைய உறவினர்கள்தான்' என்ற பொருளுள்ள அந்தப் பாடல் மக்கள் திலகம் எம்.ஜி.ஆருக்காக எழுதப்பட்டதா?

'ஒருதாய் மக்கள் நாமென்போம்
ஒன்றே எங்கள் குலமென்போம்'

என்ற பாடல் வரிகளுக்கு வாயசைத்து விட்டு மட்டும் போனவரல்ல. மனமிசைந்து அவ்வாறே வாழ்பவர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.



## 'வானம் போல் மனம்' முத்துராமன் சொல்லாரம்!

முன்னணிக் குணச்சித்திர நடிகர் ஒருவர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆருடன் மோதுவதுபோல் ஒரு படத்தின் காட்சியமைப்பு! கதாநாயகியை ஒரு கையால் பிடித்துக்கொண்டு, இன்னொரு கையால் துப்பாக்கியை எடுத்து எம்.ஜி.ஆரை நோக்கிச் சுடவேண்டும். வெளிப்புறப் படப்பிடிப்பில் இருவரும் நடிக்கும் காட்சி படமாக்கப்பட்டது.

டைரக்டர் 'ஸ்டார்ட்' என்று கத்தினார். கேமிரா – பிலிமை விழுங்கத் தொடங்கியது.

டபிள் பேரிங் துப்பாக்கியை எடுத்து அந்த நடிகர் எம்.ஜி.ஆரை நோக்கிச் சுட முயன்றார். நடிப்புதான்...!

திடீரென்று -

குண்டு வெடித்தது...! "அம்மா" என்ற அலறல் மலைகளின் இடையில் எதிரொலித்தது.

நடிப்பு - நடப்பாகிவிட்டது.

கோவளம் அருகில் 'ஒரு தாய் மக்கள்' உச்சக்கட்ட காட்சிகள் படமாக்கப்பட்ட போதுதான் எதிர்பாராத இந்த விபத்து ஏற்பட்டது.

நவரசத்திலகம் முத்துராமனும் ஜெயலலிதாவும் ஒரு இடத்திலும், எதிரில், சற்று தூரத்தில் குன்றின்மீது மக்கள் திலகம் எம்.ஜி.ஆரும் இருந்தனர்.

ஒரு கையால் 'டபுள் பாரல்' துப்பாக்கியுடன் - மற்றொரு கையினால் ஜெயலலிதாவை தூக்குவது போல் முத்துராமன் நடிக்க வேண்டும்.

ஜெயலலிதாவை தூக்கியபடி முத்துராமன் சாதாரணமாக துப்பாக்கியை எடுத்தார். 'டபுள் பாரல்' துப்பாக்கி, 'டிரபிள்' செய்துவிட்டது - திடீரென்று வெடித்துவிட்டது!

முத்துராமன் காலைப் பிடித்துக்கொண்டு சுருண்டு விழுந்தார்.

துப்பாக்கி வெடித்த சத்தமும், அருகில் நின்றவர்கள் "ஐயோ" என்று அலறிய குரல் ஒலியும் குன்றுகளில் எதிரொலித்தது.

எதிரில் சுமார் அரை பர்லாங் தொலைவில் இருந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். குன்றின் மீதிலிருந்து குதித்து பதறித் துடித்து பாய்ந்து ஓடி வந்தார். இடையில் உள்ள தொலைவை எப்படித் தான் அவ்வளவு விரைவில் கடந்து வந்தாரோ ஆச்சரியம்தான்!

முத்துராமன் காலில் காயம்பட்டு விழுந்து கிடந்தார்.

எம்.ஜி.ஆர். அருகில் வந்து, முத்துராமனை ஆசுவாசப்படுத்தினார் என்றாலும், அவருடைய கண்கள் கலங்கி, கண்ணீர் வந்துவிட்டது. அந்த நிலையில் முத்துராமனைப் பார்த்ததும் இளகிய மனம் கொண்ட அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. உடனே படப்பிடிப்பை ரத்து செய்தார்.

எல்லாம் மின்னல் வேகத்தில் நடந்தன.



முத்துராமனுக்கு உடனடியாக செய்ய வேண்டிய முதலுதவி செய்து, உடனே மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்கு ஏற்பாடு செய்தார். கவலைப்படும்படி ஒன்றுமில்லை என்று டாக்டர்கள் கூறிய பின்புதான் அவர் முகத்தில் தென்பட்ட சோர்வு விலகியது. ஒரு சில நாட்களிலேயே முத்துராமன் காலில் ஏற்பட்டக் காயம் குணமாகிவிட்டது. அதுவரையில் எம்.ஜி.ஆர். காட்டிய அக்கறையும், பரிவும் குறித்து முத்துராமன் சொல்லிச் சொல்லி உருகுவார்.

மக்கள் திலகத்தைப்பற்றி - அவர் கூறியவை ஏதாவது சொல்லி வைப்போம் என்கின்ற ரகமோ, எதையாவது எதிர்பார்த்து பன்னீர் தெளிக்கும் தரமோ கொண்டவையல்ல!

வாய்ச் சொற்களல்ல... இதய மொழி!

வெறும் வார்த்தைகளல்ல... கல்வெட்டாகச் செய்ய வேண்டிய மனத்தால் உணர்ந்த கருத்தாரம்!

"ஒவ்வொரு துறையிலும் திறமை மிகுந்தவர்கள்

எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் திறமையையும், புகழையும் மேலும் மேலும் வளர்த்துக் கொண்டு, பொருள் சேர்க்க என்னென்ன செய்ய வேண்டுமோ, அவைகளையெல்லாம் செய்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

அவர்களுக்கும் அண்ணன் எம்.ஜி.ஆருக்கும் மிகப்பெ ரிய வித்தியாசம் உண்டு!

திறமை என்பதனை ஒரு கோடு போட்டுக் கூறிவிட முடியாது. இதுதான், இவ்வளவுதான் என்று அளவு கோல் கொண்டு அளக்க முடியாது. அதற்கு எல்லையே இல்லை.

திறமையை மேலும் மேலும் வளர்த்துக் கொள்ள சிறிதும் தயக்கம் காட்டாது, கடுமையாக உழைக்கின்ற அண்ணன் எம்.ஜி.ஆரைப் பார்த்து இந்த உண்மையைப் புரிந்து கொள்ளலாம்.

திறமை வளர வளர, புகழ் பெருகப் பெருக, தகுதி உயர உயர பலருக்கு இதயம் சுருங்கிவிடும்.

ஆனால், அண்ணன் எம்.ஜி.ஆர். திறமையைப் பெருக் கிக் கொள்ளும்போது, புகழும் தகுதியும் உயரும்போது இயல்பாகவே அவருடைய இதயமும் விரிவடைந்து கொண்டே போகின்றது. அன்பு, பண்பு, பாசம் வளர்ந்து கொண்டே இருக்கின்றது.

திறமையை மட்டும் வளர்த்துக்கொள்ள ஆர்வம் காட்டு கின்ற திறமைசாலிகள் மத்தியில் இதயத்தையும் வானத் தைப் போல் விரிவாக, உயர்வாக வைத்துக் கொள்பவர் அண்ணன் எம்.ஜி.ஆர்." என்று குறிப்பிட்டார்.

*படிப்பு அறிவைக் கொடுக்கும்.*

*அந்த அறிவில் தெளிவையும், முழுமையையும் தருவது அனு பவம்தான்.*



முத்துராமனின் முத்தார வார்த்தைகளிலே முழுமை இருப்ப தற்கு அனுபவம்தான் காரணம்!

'பதிலுக்கு பதில்' படத்தில் முத்துராமன் நடிக்கும் காட்சிகள் விஜயா தோட்டத்தில் படமாக்கப்பட்டன.

அடுத்து-

முத்துராமன் குதிரை மீது அமர்ந்து செல்வதுபோல் ஒரு காட்சி எடுக்கப்பட வேண்டும். முத்துராமன் குதிரை சவாரி செய்து பழக்கப்பட்டவர்தான். முன்பு பல படங்களில் இப்படிப் பட்டக் காட்சிகளில் நடித்துள்ளார். ஆகையால் தயக்கமோ அச்சமோ இல்லாமல் குதிரை மீது தாவி ஏறி அமர்ந்தார்.

அந்தக் குதிரைக்கு அன்று என்ன 'குஷி' ஏற்பட்டதோ தெரி யவில்லை. வானத்தில் பறக்க நினைத்ததுபோல், வாயு வேகத்தில் பாய்ந்து ஓட ஆரம்பித்தது.

குதிரை மீது அமர்ந்திருந்த முத்துராமன் லகானை இழுத்துப் பிடித்து, வேகத்தைக் கட்டுப்படுத்தி நிறுத்த முயன்றார். முடிய

வில்லை.

வில்லிலிருந்து விடுபட்ட அம்புபோல் வேகமாக ஓடிக்கொண் டிருந்தது! படப்பிடிப்பு நடந்த விஜயா தோட்டத்திலிருந்து குதிரை வெளியில் பாய்ந்து சென்றது.

சாலையில் வேகமாக ஓடிவந்த குதிரை மீது - திடீரென்று எதிரே வந்த கார் ஒன்று மோதியது!

அவ்வளவுதான்! எல்லாம் கண் இமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்துவிட்டது.

வெறிகொண்டது போல் வேகமாக ஓடிவந்த குதிரை - காரில் மோதி, கால்கள் மடங்கி சாய்ந்து சரிந்து விழுந்தது. குதிரையின் மீது சவாரி செய்த முத்துராமன் தூக்கி எறியப்பட்டார்.

மிகப்பெரிய விபத்துதான்! கெட்டதிலும் ஒரு நல்லது என்பார் களே, அப்படி முத்துராமன் ஆச்சரியப்படும் வகையில் தப்பிப் பிழைத்தவர் என்று சொல்ல வேண்டும். அவர் கால்களிலும் கையிலும் சிறிய காயம்தான் ஏற்பட்டது. அந்த அதிர்ச்சியிலிருந்து படப்பிடிப்புக் குழுவினர் மீளவே நீண்ட நேரம் பிடித்தது.

எவ்வளவுதான் சிரமம் என்றாலும், 'செய்யும் தொழிலே தெய்வம்' என்று கருதும் கலைஞர்களில் முத்துராமன் முக்கியமா னவர். படப்பிடிப்புக்கு தாமதமாக வருவதையோ, அனாவசியமா கக் கொடுத்த 'கால்ஷீட்'படி வராமல் திடீரென்று ரத்து செய்வதையோ விரும்பாதவர். தொழிலில் அவர் கொண்டிருந்த அக்கறையும், பக்தியும்தான் அவருக்குப் பெருமையைக் குவித்தது.

இவ்வளவு பெரிய விபத்திலிருந்து தப்பிப் பிழைத்திருந்தாலும், உடலில் காயம் ஏற்பட்டிருந்தாலும் ஓய்வு எடுத்துக் கொள்ளாமல் மறுநாளே ஒகேனேக்கலில் நடந்த படப்பிடிப்பில் கலந்து கொள்ளச் சென்றுவிட்டார்.

அங்கே-

படப்பிடிப்பில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, குரு சாமி நம்பியார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முத்துராமன் வருகையை எதிர்பார்த்தபடி மருத்துவர்கள்

காத்துக் கொண்டிருந்தனர். முதல் நாள் அவர் குதிரையிலிருந்து விழுந்து உயிர் பிழைத்ததும், காயமடைந்ததும் எப்படியோ எம்.ஜி.ஆருக்குத் தெரிந்துவிட்டது. அதனால்தான் முத்துராமனுக்கு வைத்தியம் செய்ய மருத்துவர்களை முன்பே அவர் ஏற்பாடு செய்து, தயாராக வைத்திருந்தார்.

நடிக்க வந்த முத்துராமனை 'காயங்கள் குணமாகும்வரை நடக்கவே கூடாது' என்று எம்.ஜி.ஆர். உரிமையோடு அன்புக் கட்டளையிட்டார்.

ஓய்வு எடுத்துக் கொள்ளாமல் படப்பிடிப்புக்கு வந்தவருக்கு, ஓய்வு அளிக்கப்பட்டது. வைத்தியர்களிடம் அவரை ஒப்படைத்தது மட்டுமல்ல, அவ்வப்போது வந்து அருகிலிருந்து கவனித்துக் கொண்டதையும் கண்ணீர் மல்க, முத்துராமன் கூறுவார்.

அந்த அன்பெனும் பிடியுள் அகப்பட்ட அவர், தகுந்த சிகிச்சை பெற்ற பின்புதான் படப்பிடிப்பில் கலந்து கொண்டார். இந்த விசாலமான இதயத்தை, அடுத்தவர் துன்பத்தை தன் வேதனையாகக் கருதுகின்ற மனநிலையை எல்லோரிடமும் காண முடியுமா?

முகத்தைப் பார்க்கின்றோம் - உருவத்தைக் காணுகின்றோம்....

அடையாளம் கண்டு கொண்டு பெயரைச் சொல்லி விடுகின்றோம்.

எலும்பும் தோலும் போர்த்திய உடம்புக்கு அடையாளம் இருக்கின்றது. ஆனால், அதற்குள் கருணை பொங்கும் இதயம் உள்ளது என்று கண்டுகொள்வது எப்படி?

வேதனைப்படுபவர்களைக் கண்டு கண்ணீர் மல்கி, துன்பத்தைத் துடைக்கும் தூய உள்ளமும், பண்புகளும் குடிகொண்ட அழகிய கட்டான உருவத்தைக் காண்கின்றபோதுதான் அங்கே முழுமையான ஒரு மனிதனைப் பார்க்க முடிகின்றது.

'அன்புற்று அமர்ந்து இன்புற்றார்' என்ற வள்ளுவரின் குறள் மொழிக்கு ஏற்ப, மனிதர்களில் புனிதராக வாழ்ந்து வருபவர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.



## எதிர்காலத்தைக் கணிப்பவர், எந்த நாளும் நிலைப்பவர்!

முதன்முதலாக எம்.ஜி.ஆரை முத்துராமன் சந்தித்துப் பேசியது ஒரு சுவையான நிகழ்ச்சி!

குணசித்திர நடிகர் எஸ்.வி. சகஸ்ரநாமம் அவர்களின் சேவா ஸ்டேஜ் நாடகக் கம்பெனி நடத்திய 'வடிவேலு வாத்தியார்' நாடகத்திற்கு மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். தலைமை வகிக்கச் சென்றிருந்தார்.

முத்துராமன் அந்த நாடகத்தில் ஒரு புதுமையான வில்லன் வேடத்தில் நடித்தார்.

நாடகம் முழுதும் ரசித்துப் பார்த்துவிட்டு, மேடைக்குச் சென்று எம்.ஜி.ஆர்., நாடகக் கலைஞர்களைப் பாராட்டிப் பேசினார்.

முத்துராமனைப் பற்றிப் பேசும்போது, "வில்லன் வேடம் என்றால் ஆர்ப்பாட்டம் செய்வது, அட்டகாசம் புரிவது என்று தான் சித்தரிக்கப்படுகின்றது. இந்த நாடகத்தில் நேரில் ஒருவரைச் சந்திப்பதைப்போல் முத்துராமனின் நடிப்பு வெகு இயற்கையாக இருந்தது" என்றார்.

அனைவரிடமும் விடை பெற்றுக்கொண்டு மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அரங்கை விட்டு வெளியில் வந்தார்.

அவரை வழியனுப்பி வைப்பதற்காக முத்துராமன் மகிழ்ச்சியுடன் கார் அருகில் சென்றார்.

காரில் ஏறுவதற்கு முன்பு மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். தன் பக்கத்திலிருந்த முத்துராமன் காதில் ரகசியமாக ஏதோ சொன்னார்.



"நான் அவரிடத்திலே நேரில் இதைச் சொல்கிறேன்" என்று சிரித்தபடி கூறியது மட்டும் மற்றவர்கள் காதுகளிலும் கேட்டது.

அவ்வளவுதான்! முத்துராமன் திடுக்கிட்டுப் போய்விட்டார். யாருக்கும் தெரியாத, எளிதில் கண்டுகொள்ள முடியாத ஒன்றை அவர் சர்வசாதாரணமாகப் புரிந்து கொண்டு சொன்னது முத்து ராமனுக்கு ஆச்சரியம் மட்டுமல்ல- பெரும் அதிர்ச்சி!

"ஐயோ... அண்ணே... அண்ணே... வேண்டாம்... அண்ணே! சொல்லி வீடாதீர்கள்!" என்று மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். கைகளைப் பிடித்துக் கொண்டு அவர் கெஞ்சினார்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். தன் அருகில் நின்ற நவரசத்திலகம் முத்துராமனைப் பார்த்து கலகலவென்று சிரித்தார்.

"திரையுலகில் பிரபலமான ஒருவரைப் பார்த்து, அவரைப் போலவே நீ நடிக்கிறாய். அவர் ஒரு டைரக்டர், தயாரிப்பாளர். அவரிடத்தில் நானே நேரில் சொல்லப்போகிறேன்."

இப்படிப் பொன்மனச்செம்மல் புன்னகையோடு சொன்ன

தைக் கேட்டவுடன்தான் முத்துராமன் பயந்துவிட்டார்.

"அண்ணே... வேண்டாம்! தயவு செய்து அவரைப்போல் நடித்தேன் என்பதைச் சொல்லிவிடாதீர்கள் என்றார் முத்துராமன் மீண்டும், மீண்டும்!

நடிக மாமன்னன், தன் செந்தாமரை முகம் விரித்து, முத்தாரம் காட்டி வீணையின் நாதமோ, வேய்குழலின் கீதமோ எனும்படி நகைத்துவிட்டு, "பயப்பட வேண்டாம்... சொல்ல மாட்டேன்" என்று முத்துராமனை தட்டிக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டார்.

திரையுலகில் புகுமுன்பு நாடகங்களில் மட்டும் நடித்துக் கொண்டிருந்த முத்துராமனுக்கு, கலைச் சக்கரவர்த்தியாக விளங்கிய மக்கள் திலகம் பாராட்டுரை - எத்தகைய மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தந்திருக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ?

இந்த வேடிக்கையான நிகழ்ச்சியை சகோதரர் முத்துராமன் பலமுறை சொல்லிச் சொல்லி அவருக்கே உரிய ஐ.எஸ்.ஐ. முத்திரை இடி சிரிப்பைச் சிரிப்பார். நினைத்து நினைத்துத்தானே தனிமையில் சிரித்துக் கொள்வதாகவும் சொல்வார். எத்தனையோ முறை நானும் 'யார் அந்த டைரக்டர்' என்று கேட்டு விட்டேன். அத்தனை முறையும் அந்த இடி சிரிப்புதான் பதில்!

அதைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டால் சரி! அந்த இயக்குநர் தன்னைக் கேலி செய்ததாக எண்ணி, விரோதமாக எடுத்துக் கொண்டால் என்ன செய்வது என்ற கருத்துதான். எவர் மனத்தையும் புண்படுத்தும் வகையில் அமைந்துவிடக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தார் முத்துராமன்!

எந்த வேடத்தைக் கண்டு பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர்., முத்துராமனின் நடிப்பைப் பாராட்டினாரோ - அந்த வேடத்தையும், நடிப்பையும் பார்த்துவிட்டுத்தான் டைரக்டர் ஸ்ரீதர், அவரை 'நெஞ்சில் ஓர் ஆலயம்' படத்தில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்தார்.

ஆனால், அதற்கு முன்பே மக்கள் திலகம் எம்.ஜி.ஆருடன் இணைந்து, 'அரசிளங்குமரி படத்தில் முத்துராமன் நடித்துவிட்டார்.

முதல் நாள் படப்பிடிப்பில் எம்.ஜி.ஆரும், முத்துராமனும் ஏற்றம் இறைத்தபடி பாட்டுப்பாடுவது போல் காட்சி படமாக்கப்



பட்டது. அப்போது -

மக்கள் திலகம் தன்னுடைய ஒப்பனைக் கலைஞரிடம் கூறிய வார்த்தைகள் முத்துராமனின் செவி வழியே நெஞ்சில் நிறைந்து, விழிகளைப் பனிக்க வைத்தன.

"அண்ணனுக்கு எவ்வளவு பெரிய மனசு" என்று சொல்லிச் சொல்லி ஆனந்தப்படுவார்.

"முத்துராமன் சாதாரணமாக இருக்கிறார் என்று நினைக் காதே! எதிர்காலத்தில் மிகச்சிறந்த நடிகராக வரக்கூடியவர் என்ப தற்கான அறிகுறிகள் தெரிகின்றன. எல்லோருடைய பாராட்டு தல்களையும் பெற்று, புகழுடன் விளங்குவார்" என்று எம்.ஜி.ஆர். கூறினார்.

அவர் தீர்க்கதரிசனம் எப்போதும் பலிக்கும் என்பதற்கு முத்து ராமன் பெற்றுக் குவித்த பரிசுகளும், புகழுமே உதாரணம்!

"அண்ணன் எம்.ஜி.ஆர். நாடக மேடையில் அருமையாக நடிப்பார். அத்துடன் மக்கள் மத்தியில் நடிகர்களுக்கு

ஒரு பெரிய கௌரவத்தை ஏற்படுத்திக் கொடுத்தவர். நாம், நமக்கு மட்டுமல்ல, மக்களுக்குச் சொந்தமானவர் கள் என்று கலைஞர்களுக்கு ஒரு புதுத் தத்துவத்தை வகுத்துத் தந்தவர். எவ்வளவோ படங்களில் அண்ணன் அருமையாக நடித்துள்ளார். 'என் தங்கை', 'குடியிருந்த கோயில்', 'அடிமைப்பெண்', 'எங்கவீட்டுப் பிள்ளை' ஆகிய படங்களில் அவர் பிரமாதமாக நடித்திருப்பது எனக்குப் பிடிக்கும். வெளிநாடு சென்று பலர் படம் எடுக்கின்றனர். அதற்கு முன்னோடியாக இருந்தவர் அவர்தான். உலகம் முழுவதும் படம் எடுத்துக்கொண்டு வந்து, கதையாக்கி, 'எடிட்' செய்து யாராலும் அந்த அளவு படமாகக் கொடுக்க முடியாது என்று கூறாத வர்களே இல்லை. ஒரு போஸ்டர்கூட ஒட்டாமல் சாத னைச் சரித்திரம் படைத்த படம் – 'உலகம் சுற்றும் வாலிபன்'. நடிகர்கள் எல்லாத் துறைகளையும் கற்றுக் கொண்டு, அதில் புகழ்பெற முடியும் என்பதற்கு உதா ரணம் அவர். ஒரு துறையில் ஈடுபட்டு, அதைக் கற்றுக்கொண்டு தன்னை வளர்த்துக் கொள்வது என்பது வேறு, அந்தத் துறையிலேயே மாஸ்டராக இருப் பது வேறு! எந்தத் துறையாக இருந்தாலும், 'தெரியும்' என்ற அளவில் இல்லாமல் அந்தத் துறையில் மாஸ்ட ராக விளங்குகிறார். படம் உருவாகும்போதும், வெளி யாகும்போதும் எந்த நடிகருக்காகவும் அவ்வளவு பரபரப்பு, எதிர்பார்ப்பு இருக்காது. அண்ணன் படங்க ளுக்குத்தான் அத்தகைய பரபரப்பு, எதிர்பார்ப்பு இருக் கும். நம்பிக்கை இருபக்கமும் வேண்டும். அதற்கு நாணயம் மிக அவசியம். நாமும் ஒரு காரியத்தை நம்பிக்கையோடு செய்யணும்; மக்களும் நம்பணும். அப்படிப்பட்ட நம்பிக்கை நட்சத்திரமாக அண்ணன் எம்.ஜி.ஆர். விளங்குகிறார்."

*இது முத்துராமன் சொல்லாரம்!*

*'அலைகள் ஓய்வதில்லை' படத்தில் தன் மகன் கார்த்திக்*

முதன்முதலாக கதாநாயகனாக நடித்து. அறிமுகமானதும், அந்தப் படத்தை மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். முதலில் பார்த்துவிட்டு ஆசி வழங்கவேண்டுமென்று துடித்தார் முத்துராமன்! எண்ணியது போலவே தன் அண்ணனாகக் கருதிய எம்.ஜி.ஆரைப் படம் பார்க்கச் செய்து, அவருடைய நல்வாழ்த்தை கார்த்திக், டைரக்டர் பாரதிராஜா பெறும்படி செய்தார்.

"படம் பார்த்துவிட்டு, உடலை எப்படிக் கட்டாக வைத்திருக்க வேண்டுமென்றும், நல்ல கதாபாத்திரங்களில் நடிக்க வேண்டுமென்றும் தன் மகனிடம் அறிவுரை கூறியதையும், 'பாரதிராஜா ஒரு சமுதாயப் புரட்சியே செய்துள்ளார்' என்று பூரித்துப்போய் புகழ்ந்ததையும் எத்தனை முறைதான் இருவரும் பேசிக் கொண்டிருந்திருப்போம் என்பதற்குக் கணக்கே இல்லை!"



## டாக்டர் எம்.ஜி.ஆர். ஸ்டேடியம்

முத்துராமன் மனதில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். மீது மிகுந்த மதிப்பு, மரியாதை மட்டுமல்ல; அதனை முறையாக வெளிப்படுத்த ஒரு பெரிய ஆசை... திட்டம் இருந்தது.

என்ன... அது?

முத்துராமன் விளையாட்டுப் போட்டிகளில் மிகுந்த ஆர்வம் உள்ளவர். அவருடன் நெருங்கிப் பழகியவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். சிறந்த கால்பந்தாட்ட விளையாட்டு வீரராக விளங்கிய அவரை, எங்கேயாவது விளையாட்டுப் போட்டியென்றால் அங்கே காணலாம். உடற்பயிற்சி தினசரி செய்து, உடலைக் கட்டாக வைத்திருந்தார். ஓய்வு கிடைத்தால் மாலை வேளைகளில் நீச்சல் குளங்களில் காணலாம்! அப்படிப்பட்டவர் ஒருநாள் தனிமையில் நெஞ்சம் திறந்து தன் விருப்பத்தைத் தெரிவித்தார்.



"விளையாட்டுப் போட்டிகளிலும், உடற்பயிற்சியிலும் அண்ணன் எம்.ஜி.ஆர். காட்டும் ஆர்வம் பெரிது. எத்தனையோ விளையாட்டு வீரர்களுக்கு உற்சாகம் தரும் வகையில் உதவியுள்ளார். தமிழகத்தை, இந்தியாவைச் சேர்ந்தவர்கள் உலகில் முன்னணியில் நிற்க வேண்டும் என்பதில் அவருடைய ஆர்வம் சாதாரணமானதல்ல! அப்படிப் பெருமை தேடித் தந்தவர்களுக்கு பரிசுகளை அள்ளித் தந்திருக்கின்றார். இத்தகைய இதயம் கொண்டவருக்கு காலத்தால் என்றும் அழியாத நன்றிச் சின்னமாக தமிழக மக்கள் சார்பில் ஒன்று செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் "எம்.ஜி.ஆர். ஸ்டேடியம்" என்று ஒன்று அமைக்க வேண்டும். திருச்சி, கோவை, மதுரை ஆகிய நகரங்களில் எங்கு வேண்டுமானாலும் இதனை உருவாக்கலாம். நாம் அண்ணனைச் சென்று பார்த்து, அவருடைய அனுமதியைப் பெறவேண்டும். அவர் சம்மதிக்கமாட்டார். நாம்தான் சம்மதிக்க வைக்க

வேண்டும், எப்படியாவது! அதன்பின்பு நாம் இந்த முயற்சியில் ஆர்வம் உள்ளவர்கள் துணையோடு இத னைச் செய்து முடிக்கவேண்டும் பிரம்மாண்டமாக!" என்றார் சகோதரர் முத்துராமன்.

தூய்மையான அன்புள்ள சிறந்த கலைஞனின் அடிப்படை யுள்ள மாசற்ற ஆசை இது! அந்த உயில் இத்தனை நாளாக என் உள்ளத்திலேயே இருந்தது.

இதோ...

பொன்மனச்செம்மல் "மக்கள் திலகம்" புரட்சித் தலைவரை நெஞ்சார நேசிக்கும் தமிழ்மக்களின் பார்வையில் வைத்துவிட்டேன்.

"டாக்டர் எம்.ஜி.ஆர். ஸ்டேடியம்" - இது முத்தான ஒரு நடிகரும், மக்கள் திலகம் மீது பித்துகொண்ட நானும் கண்ட கனவாக இல்லாமல், தமிழகம் ஏற்று செய்யப்போகும் அரிய நினைவுச் சின்னங்களில் ஒன்றாக அமைய வேண்டும்!

அவரிடம் பக்தி கொண்டவர்கள் இந்த நேர்த்தியான விருப் பத்தை நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குள்ளது! காலம் கனிந்து, இதயக்கனியின் பெயரால் ஸ்டேடியம் உருவா கட்டும்!

## பட்டம் பெற்ற பல்கலைக்கழகம்



பொன்னை உருக்கி வார்த்து, கண்களைக் கவரும் காந்தம் போல் அழகோடு நடமாடும் உருவம் கொண்டவன் மட்டுமே என்பதால் மட்டுமே ஒரு மனிதனுக்குப் பெருமை வந்துவிடாது!

ஆயிரம் கோடி சூரியப் பிரகாசம் முகத்தில் தென்பட்டு, அகம்,

காரிருள் அரசாளும் பேய்க் குகைபோல் இருந்து பயன் என்ன?

உள்ளத்தில் ஒளி உண்டானால்தான் வாக்கினில் ஒளி உண்டா கும்! அதனால் மனிதகுலம் சிறப்புக்கு உரியதாக மதிக்கப்படும்!

அன்பு எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும்?

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று அருட்பெருஞ்சோதி வள்ளலார் கூறியதைப் போன்ற உணர்வுள்ள உள்ளத்திலிருந்துதான் அத்தகைய அன்பு வெளிப்படும்!

மகாகவி பாரதியார்.

'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவர் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கனுமே கண்டதில்லை' என்று நெஞ்சில் நிலைத்த மூவரைக் குறிப்பிட்டார். ஆனால் மொழியைப் பற்றித் தெரிவித்தபோது –

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று அமிழ்தினும் இனிய தமிழை மட்டுமே சுட்டிக் காட்டினார்!

பல மொழிகளில் புலமைபெற்ற கவிமேகம் பாரதி உணர்ந்து, உயர்ந்த மொழியைக் கண்டுகொண்டதைப் போல...

தமிழ்த் திரையுலக வரலாற்றிலும், அரசியலிலும் உலகமே தமிழகத்தை உற்றுப் பார்க்கும் வகையில், தன் சாதனைகளை பொன்னேட்டில் வைர வரிகளாய் மின்னி என்றும் புகழ் ஒளி பரப்பவைத்தவர்...

மனித குலத்திற்கே பெருமை தேடித்தரும் வகையில் மாபெரும் மனிதராக வாழ்ந்து, அன்பினால், ஈகைப் பண்பினால், இனிய தன்மையினால், கோடானகோடி மக்கள் இதயங்களில் கொலுவி ருக்கும் புனிதர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் ஒருவர்தான்!

அதனால்தான் அந்த அற்புத மனிதரை சென்னைப் பல்க லைக்கழகம் பெருமைப்படுத்தி, பெருமை பெற்றது!

பல்கலைக்கழகம் (டாக்டர் பட்டம் தந்து) பாராட்டிய பல்க லைக்கழகம் பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்.!



"மன்பதையின் நலத்திற்காக எம்.ஜி.ஆர். எப்போதும் போராடி வந்திருக்கிறார். திரைப்படங்களையும் அரசிய லையும் இந்நன்னோக்கத்திற்காக அவர் பயன்படுத்தத் தயங்கியதில்லை.

மக்கள் திலகம், புரட்சித்தலைவர், பொன்மனச் செம்மல் என்ற பட்டங்களால் மக்கள் அவரைப் பாராட்டி வரு கின்றனர்.

அருச்சுனனை ஒத்த அறப்போர்வீரர் என்று மூதறிஞர் ராஜாஜியும், விரிந்து பரந்த மனங்கொண்டவர் என்று தந்தை பெரியாரும், 'அமைதியான அழகும், ஆழ்ந்த உணர்ச்சியும் அலைபுரளும் கவிதையின் வடிவம்' என்று பேரறிஞர் அண்ணாவும் பாராட்டி மகிழ்ந்தனர்.

தமது வாழ்வில் அவர் எய்தியுள்ள பீடார்ந்த தகுதிக்கா கவும், சலியாத சாதனைகளுக்காகவும், சமூகக் குறை பாடுகளைக் களைய முற்படும் வீரமாட்சிக்காகவும், கொடுத்து சிவந்த கொடைப் பண்புக்காகவும், கலைத்தி றத்திற்காகவும், மனித இனப்பண்புகளின் வளமேம்பாட் டிற்கு அவர் காட்டி வரும் ஈடுபாட்டிற்காகவும், டாக்டர் (சிறப்பு) பட்டத்தைப் பெறுவதற்குத் தகுதி வாய்ந்த பெருந் தகையாகத் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களைச் சென்னைப் பல்கலைக்கழகம் பாராட்டுகிறது."

*நவமணிகளை தங்க மகுடத்தில் பதித்ததுபோல் தன்னிகரற்ற தனிப்பெரும் தமிழகத்தின் செல்வமான எம்.ஜி.ஆருக்கு சென்னை பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் சூட்டி மகிழ்ந்ததை மறக்க முடியுமா?*



# கடன் வாங்கித் தர்மம்...?...?

காஷ்மீரில் படப்பிடிப்பிற்குச் சென்றிருந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். பெரிய ஓட்டல் ஒன்றில் தங்கியிருந்தார்.

அவருடன் சென்றிருந்த உதவியாளர்களும் அதே ஓட்டலில் இன்னொரு பகுதியில் தங்கியிருந்தனர். அது மிகவும் பிரபலமான ஓட்டல். அங்கு உணவு வகைகள் மட்டுமல்ல, ஐஸ்கிரீம் கூட தனிச்சுவையுடன் இருக்கும்.

ஒரு நாள் உணவுண்டதும் பணியாளிடம் ஐஸ்கிரீம்பற்றி எம்.ஜி.ஆரின் உதவியாளர்கள் கேட்டனர்.

ஐஸ்கிரீம்கள் பட்டியலை அடுக்கிவிட்டு, அதன் (அடுக்காத) விலையைப் பணியாள் தெரிவித்தபோது, கேட்டவர்களுக்கு ஐஸ்கிரீம் மீது இருந்த ஆசையே போய்விட்டது. அதோடு அவர் கள் அந்த நிகழ்ச்சியையே மறந்துவிட்டனர்.

மறுநாள் மாலையில் படப்பிடிப்பு முடிந்து ஓட்டலுக்கு அவர் கள் திரும்பி வந்தனர். இரவு உணவுக்குப் பின்பு, கதவைத் தாளிட்டுவிட்டு அவர்கள் படுத்துவிட்டனர். திடீரென்று அழைப்பு மணி ஓசைகேட்டு, பரபரப்போடு எழுந்து சென்று கதவைத் திறக்கின்றனர். எதிரே -

ஒரு பெரிய தட்டில் ஐஸ்கிரீம் துண்டுகள் தனித்தனியே கோப்பைகளில் வைக்கப்பட்டு - ஓட்டல் பணியாளர், தான் எடுத்து வந்ததை உள்ளே வைத்துவிட்டு வெளியே சென்றார்.

தாங்கள் ஆர்டர் கொடுக்கவில்லை என்பது நன்றாகத் தெரிந் ததால், கதவைச் சாத்திவிட்டு வந்து அவர்கள் சிரிக்கின்றனர்.

யாருடைய அறைக்கோ செல்லவேண்டிய ஐஸ்கிரீம் தங்களு



டைய அறைக்கு வந்திருக்கின்றது என்கின்ற நினைப்புதான் அவர்கள் சிரிப்புக்குக் காரணம்!

பணியாளரிடம் விவரத்தைச் சொல்லி, எடுத்துக்கொண்டு போகச் சொல்வதென்றாலும், அவர்களுக்குத் தெரிந்த அரைகுறை மொழி கைகொடுக்கவில்லை!

'வந்ததை வரவில் வைப்போம்' என்று ஐஸ்கிரீம் சுவையை அனுபவித்தனர்!

எப்படியோ, யார் தயவினாலோ தங்கள் ஆசை நிறைவேறியதில் அவர்களுக்கு குழந்தைகளைப் போல் ஒருவித மகிழ்ச்சி!

மறுநாள் காலையில் படப்பிடிப்பில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆரை உதவியாளர்கள் சந்திக்கின்றனர்.

"என்ன... நேற்று ஐஸ்கிரீம் அனுப்பினேனே... வந்ததா? எப்படியிருந்தது...?" என்று கேட்கிறார் எம்.ஜி.ஆர்.

இரவு சாப்பிட்ட ஐஸ்கிரீம் இப்போது அவர்கள் உடலை

ஜில்லிட்டுப் போக வைக்கிறது.

"வந்தது... நன்றாக இருந்தது..." எப்படியோ ஒருவர், அவருக்கு பதில் கூறுகிறார்.

"தெரியாத்தனமாகப் பணியாளர் வேறு எந்த அறைக்கோ கொடுக்க வேண்டியதை உங்கள் அறையில் வைத்துவிட்டதாக நினைத்தீர்களா?" அவர் கேள்வித் தூண்டில் போட்டார்.

"இல்லை..." அவர்கள் மென்று விழுங்கினர்.

எம்.ஜி.ஆர். தனக்கே உரிய புன்சிரிப்போடு சென்றுவிட்டார்.

பணியாளரிடம் தட்டுத் தடுமாறி அவர்கள் கேட்டதையோ, வெளியில் பேசிக் கொண்டிருந்ததையோ தெரிந்துகொண்டு, எம்.ஜி.ஆர்.தான் தங்களுக்கு ஐஸ்கிரீம் அனுப்பி வைத்திருக்கின்றார் என்ற செய்தி உதவியாளர்களுக்கே அதன்பின்புதான் தெரிந்தது.

இதைப்பற்றிச் சொல்லிச் சொல்லி சபாபதியும், மற்றவர்களும் 'எப்படித்தான் மனதில் உள்ளது அந்த அதிசய மனிதருக்குத் தெரிகிறதோ' என்று வியந்தனர்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். காஷ்மீரில் தங்கியிருந்த சமயத்தில் அங்கிருந்த ராணுவத்தினர் அவருக்கு வரவேற்பு வழங்கவேண்டு மென்று விரும்பினர்.

சென்னையைச் சேர்ந்த தொழிலதிபரும், கலையுலகோடு நெருங்கிய தொடர்பு கொண்டவருமான ஒருவர் இதனை எம்.ஜி.ஆரிடம் தெரிவித்தார்.

மக்கள் திலகம் மறுப்பு கூறவா போகின்றார்?

எம்.ஜி.ஆருக்கு இராணுவ வீரர்கள் கோலாகலமாக வரவேற் பளிக்கின்றனர். அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை! அந்த ஆனந்தத்தின் விளைவாக தங்கள் ராணுவநல அமைப்பு ஒன்றுக்கு வருகை தரவேண்டுமென்று மீண்டும் அழைப்பு விடுக் கின்றனர்.

ஓட்டலில் தங்கியிருந்த தனது நண்பரான தொழிலதிபரிடம் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ஓர் வேண்டுகோள் விடுக்கின்றார்.

தொழிலதிபருக்கு அவர் சொன்னதைக் கேட்டதும் தாங்க முடியாத அதிர்ச்சி!

'இப்படியும் ஒரு மனிதரா?' இமையாமல் எம்.ஜி.ஆரையே பார்க்கின்றார்.

"இங்கே... எனக்குப் பணம் தேவைப்படுகிறது.. யாரிடமாவது வாங்க முடியுமா?"

"எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கலாம். ஆமாம்... அப்படி யென்ன தேவை உங்களுக்கு?"

"இராணுவ நல சங்கத்திற்கு 25 ஆயிரம் ரூபாய் நிதியாகக் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். அதற்குத்தான் பணம் தேவைப்படுகிறது!"

"அவர்கள் விரும்பி அழைத்தார்கள். போய்விட்டு வந்தீர்கள். மீண்டும் ஆசைப்படுகிறார்கள் என்பதால் போகப் போகின்றீர் கள். ஏதாவது நிதி கொடுக்க விரும்பினால் கொடுங்கள். ஆனால், இவ்வளவு பெரிய தொகை வழங்குவது தேவைதானா என்று யோசியுங்கள். ரொம்ப அதிகம் என்பது என் எண்ணம்."

"நீங்களும் நானும் சென்னையில் லட்சம், லட்சமாக சம்பா தித்துக் கொண்டு பாதுகாப்பாக இருப்பதற்கு, எல்லையோரப் பகுதியில் நம் நாட்டைப் பாதுகாக்கும் இதைப்போன்ற இராணு வத்தினர்தான் காரணம். அவர்கள் தியாகத்திற்கும், உழைப்பிற் கும் முன்பு, இந்தத் தொகை மிகவும் குறைவு. நன்றாக யோசித்துதான் முடிவு செய்திருக்கிறேன். நீங்கள் பணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்."

எம்.ஜி.ஆரின் உறுதியான சொற்கள், தொழிலதிபரை ஊமை யாக்கி, முடுக்கிவிட்ட பம்பரமாய் அவர் சொன்னதைச் செய்ய வைத்தன!

இராணுவத்தினர் நல சங்கத்திற்கு எம்.ஜி.ஆர். நிதி வழங்கி னார்.

இராணுவ வீரர்கள் இதனை எதிர்பார்க்கவில்லை. இப்படி அவர்களிடம் எவரும் அன்போடு பழகியதுமில்லை; அள்ளித்

தந்ததுமில்லை!

எம்.ஜி.ஆர். அவர்களிடம் விடைபெற்று திரும்பி வந்தபோது, சிலர் குழந்தைகள் போல் தேம்பிக் கொண்டிருந்தனர்!

அன்பு ஒன்றினால்தான் எத்தகைய வலிமையானவர்களையும் வலுவிழக்கச் செய்து நெகிழவைக்க முடியும்!




ஓட்டலுக்குத் திரும்பிவந்த தொழிலதிபரிடம், மீண்டும் கடனாகப் பணம் வேண்டுமென்று கேட்டார் எம்.ஜி.ஆர்.

மறுநாள் அவர்கள் அனைவரும் காஷ்மீரிலிருந்து புறப்பட வேண்டும் என்பதனால், ஏதாவது செலவுக்குத் தேவைப்படும் என்று பணம் கொண்டு வந்து தொழிலதிபர் தந்தார்.

ஓட்டலில் உள்ள பணியாட்கள் மொத்தம் எத்தனை பேர் என்று எம்.ஜி.ஆர். விசாரித்தார். அவர்கள் அனைவரையும் தனது அறைக்கு வரச்சொல்லி பணம் கொடுக்கிறார். இப்படி அன்பளிப்பாகக் கொடுத்தது மட்டும் ஏழாயிரம் ரூபாய்!

இப்போதும் வியப்போடு அந்தத் தொழிலதிபர் சொல்லிச் சொல்லி நெஞ்சாரப் போற்றும் சொற்கள் இவை...

"சம்பாதிப்பதில் ஒரு பகுதியைத் தர்மம் செய்வதைக் கண்டிருக்கிறேன். கடன் வாங்கி தன் வீட்டுக் கல்யாணத்தை முடித்துக் கொள்வோர் உண்டு. கடன் வாங்கி இப்படி வாரி வாரி நிதி வழங்கும் ஒருவரை நான் பார்த்ததில்லை. மற்றவர்களுக்குக் கொடுத்து உதவி செய்து, அவர்கள் மகிழ்ச்சி அடைவதைக் கண்டு ஆனந்தப்படுவதில் எம்.ஜி.ஆர். போல் ஒரு மனிதரைக் காண முடியாது.

உண்பது, உறங்குவதுபோல் அவருக்கு கொடுப்பதும் ஒரு அன்றாடச் செயல். உணவு இல்லாவிட்டாலும் அவர் இருந்து விடுவார். தர்மம் செய்யாமல் அவரால் இருக்க முடியாது. இப்படி ஒரு அதிசயமான அற்புத மனிதர்தான் எம்.ஜி.ஆர்."



## கை அசைவுகள் வெற்றிக்குறிப்புகள்

மக்களுக்குப் பயன்படும் செயற்கரிய செயல்களை எத்தனையோபேர் செய்ததினால் உலகம் மகத்தான வளர்ச்சியைக் கண்டிருக்கிறது.

வரலாற்று ஆசிரியர்கள் எழுதிவைத்த எழுத்துக்களைப் படித்து, பல கலை மாமேதைகளை, அரசியல் தலைவர்களை, அறிவியலில் வல்லவர்களைத் தெரிந்து கொள்கின்றோம். அப்படிக் காலம் எனும் வரலாற்று வழித்தடத்தில் தங்கள் காலடிச் சுவடுகளைப் பதித்தவர்கள் கணக்கற்றோர்.

சுவடுகளைக் காண்கின்றோம் - அதற்கு உரியவர்களைப் பார்த்ததில்லை!

சாதனைகளைச் சந்திக்கின்றோம் - சாதனை புரிந்தவர்களை சந்தித்ததில்லை! அந்த வாய்ப்பு அந்தந்த காலகட்டங்களில் வாழும் மக்களின் ஒரு பகுதியினருக்கு மட்டுமே கிடைக்கின்றது.

அதைப்போல்....

இந்த நூற்றாண்டின் நிறைவுப் பகுதியில் நின்று கொண்டிருக்கும் நாம் எத்தனையோ மேதைகளை, தலைவர்களைக் கண்டு மகிழ்கிறோம். எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகள் நாளைய வரலாறாகப் போகின்றன. இந்தக் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பது நமக்குப் பெருமைதானே!

ஒரு மனிதன் தான் வாழும் நாளெல்லாம் வரலாற்றில் இடம்பெறும் நாளாகச் செய்ய முடியுமா?

நடைபோடுவதெல்லாம் மக்களுக்கு வழிகாட்ட, கை அசைவெல்லாம் வெற்றிக்கான குறிப்புகள் என்று எவரேனும் சரித்திரம் படைத்ததுண்டா?

"உண்டு" என்ற பதில் பிறந்தால், அதற்கு உரியவர் ஒருவர்தான் உண்டு! அவர்.. அந்த வாழும் வரலாறு.. சாதனைகளின் சரித்திரம்....

மக்கள் திலகம் டாக்டர் எம்.ஜி.ஆர்.தான் என்று மக்களுக்குச் சொல்லவும் வேண்டுமோ?

கலைத்தாயின் தலைமகனாக, மக்கள் திலகமாகத் திகழ்ந்தவர், மக்கள் தலைவராகி, ஆட்சி பீடத்தில், அரியணையில் தமிழக முதல்வராக அமர்ந்தார்.

கலைத்துறையின் மூலமாக மக்கள் செல்வாக்கைத் திரட்ட முடியும். அவர்கள் மனத்தில் நற்பணிகள் மூலம் நீங்காத இடம் பிடிக்கமுடியும் என்பதை நிரூபித்தவர் பேரறிஞர் அண்ணா!

அவரது அடியொற்றி நடைபோடுகின்ற மக்கள் திலகம் டாக்டர் எம்.ஜி.ஆர் சின்னஞ்சிறு வயதில் நடிகனாக மதுரை பாய்ஸ் நாடகக் கம்பெனியில் காலடி எடுத்துவைத்தார்.

திரையுலகம் 'சதிலீலாவதி' படம் மூலம் அவருக்கு நல்வரவு கூறியது! 'மந்திரிகுமாரி' மக்கள் மனதில் அவரைப் பதித்து வைத்தது.



'சதிலீலாவதி' படத்தில் (இன்ஸ்பெக்டர்) அமைதியைக் காக்கும் காவலராக அறிமுகமானார்; பின்பு அவர் நாட்டைக் காக்கும் காவலராக விளங்கினார்! 'மந்திரிகுமாரி'யின் கதாநாய கன்தான் தமிழகத்தின் முதல் மந்திரியானார்.

மக்களைச் சந்தித்தால், பழகினால் தங்கள் 'இமேஜ்' போய் விடும் என்று நட்சத்திரங்கள் பயந்து, விலகி இருந்த காலத்தில் 'உங்களில் ஒருவன்' என்று உள்ளன்போடு பழகியவர் எம்.ஜி.ஆர்.

நல்ல ஊற்றுக்கண் உள்ள கிணற்றில்தான் இறைக்க, இறைக்க தண்ணீர் சுரக்கும். மக்களுக்கும், தங்களுக்கும் இடையில் இடை வெளியே இல்லாமல் பார்த்துக் கொள்ளும் கலைஞர்கள், தலை வர்கள் என்றைக்குமே சரிவதில்லை, சாய்வதில்லை...



# கலைக்கடலின் கரைகள்
# மக்கள் திலகம் - நடிகர் திலகம்

எகிப்தில் நடைபெற்ற திரைப்பட விழாவில் பத்மினி பிக்சர்ஸ் தயாரித்த 'வீரபாண்டிய கட்டபொம்மன்' திரையிடப்படுகின்றது. பி.ஆர். பந்துலு இயக்கத்தில் சக்தி கிருஷ்ணசாமியின் உரையாடல் களை அனல்கக்க பேசி, கட்டபொம்மனாக நடித்த நடிக மாமன் னன் டாக்டர் சிவாஜியின் நடிப்பு, அனைவரையும் ஒரே குரலில் 'இவர்தான் சிறந்த நடிகர்' என்று சொல்ல வைக்கின்றது.

வெள்ளையரை எதிர்த்து மாவீரனாக வாழ்ந்து, கயத்தாற்றில் தூக்குக் கயிற்றை முத்தமிட்டு மாண்ட அந்த மறவனை அப்ப டியே கண்முன்னே கொண்டுவந்து நிறுத்தி, மீண்டும் திரைப்படம் மூலம் நடமாடவிட்ட சிவாஜிக்கு கிழக்காசியாவிலேயே சிறந்த நடிகர் என்பதற்கான பரிசு கிடைக்கின்றது!

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவராக மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். பொறுப்பேற்றிருந்த சமயம் அது! தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் ஏதாவது பரிசு பெற்றுவிட்டாலே அவர்களைவிட அதிகமாக மகிழ்ந்து, பாராட்டுபவர் எம்.ஜி.ஆர் என்பதை நாட றியும். தம்பிக்குப் பரிசு கிடைத்துவிட்டதென்றால் கேட்க வேண்டுமா? எகிப்து படவிழாவில் பெறுதற்கரிய பரிசை நடிகர் திலகம் சிவாஜி பெற்று, தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார் என்றால் எம்.ஜி.ஆர். எப்படியெல்லாம் சிறப்பாக ஏற்பாடு செய்வார் என்பதை சென்னை மாநகர் கண்டது.

ஆபட்ஸ்பரி மாளிகையை அலங்கரித்திருந்த அழகும், வர வேற்பு வளைவுகளும் கண்கொள்ளாத காட்சி!

நடிகர் திலகம் சிவாஜி விழா என்பதால் கரைபுரண்டு வரும்

வெள்ளம் போல் சாலைகளின் இருபுறமும் மக்கள் கூட்டம்!

நடிகர், நடிகையர் கார்களில் வரிசையாக வந்த வண்ணம் உள்ளனர். மக்கள் திரண்டு நிற்பதைக் கண்டு சிலர், காரின் கண்ணாடியை இறக்கிவிட்டு முகதரிசனம் தருகின்றனர்! உடனே மக்களின் மகிழ்ச்சி, ஆரவாரமாக ஒலிக்கிறது.

பெரும்பாலோரின் கார்கள் தங்கள் கதவுகளின் கண்ணாடி களை இறக்க மறுத்துவிடுகின்றன. 'திரையில் விலை தந்து பார்க்கும் தங்கள் முகத்தைத் தெருவில் நிற்கும் இந்த மக்கள் பார்ப்பதா?' என்ற வரவு செலவு கணக்கு தெரிந்த நட்சத்திரங்கள் அந்தக் கார்களில் இருந்திருக்கக் கூடும்!

விழா நடக்கும் நேரம் நெருங்க நெருங்கக் கூட்டம் பெருகி வழியத் தொடங்குகின்றது. நடிகர், நடிகையர், கலையுலகப் பெரி யோர் வந்தவண்ணம் உள்ளனர். அவர்களை காணக்காண மக்கள் ஆர்வம் அதிகமாகின்றது. கூட்டம் அலைமோதுகின்றது.

இந்த சமயத்தில் -

மக்கள் திலகத்தின் கார் வருகின்றது. தொலைதூரத்தில் பிளை மவுத் கார் வரும்போதே, மக்கள் வாழ்த்தொலி எதிர்கொண்டு வரவேற்கின்றது. அவரைக் காணவேண்டும் என்கின்ற ஆவல்... அருகில் நெருங்கிச் சென்று, முடிந்தால் தொட்டுப் பார்த்துவிட வேண்டும் என்கிற ஆசை!

அவரோ காரில் வருகிறார். வேண்டுமானால் ஆசைதீரப் பார்க்கலாம் - கதவின் கண்ணாடிகள் எப்போதுமே மக்களுக்கும், அவருக்கும் இடையில் தடையாக இருப்பதில்லை என்பதினால்! ஆனால்... எப்படித் தொடமுடியும்?

கார் நெருங்கி வர வர மக்கள் சிதறி ஓடுகின்றனர். கார் மீது விழுந்துவிடப் போகின்றார்கள் என்று காவல் துறையினர் தடி யால் தாக்குவதற்கு ஓடுகின்றனர்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். காரை நிறுத்தச் சொல்லி, அண்ணா சாலையின் (அப்போது மவுண்ட் ரோடு) நடுவில் இறங்கிக் கொண்டு, காரை முன்னால் அனுப்பி விடுகிறார்.

பதறியபடி காவல் துறையினரிடம் ஓடோடிச் சென்று, "யாரையும் அடிக்காதீர்கள். அவர்கள் அமைதியாக இருப்பார்கள்" என்று கூறுகின்றார்.

காவல் துறையினரே வியக்கும் வண்ணம் மக்கள் பெருங்கடல் எம்.ஜி.ஆரின் மந்திரச்சொல் கேட்டதும் அமைதியாக நிற்கின்றது.

எம்.ஜி.ஆர். புன்முறுவலுடன் இருபுறமும் கையசைத்தபடி சாலையில் நெடுந்தூரம் நடந்து வருகின்றார். மக்களின் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை! ஆரவாரத்திற்கு அளவில்லை! ஆபட்ஸ்பரி மாளிகைக்குள் நடந்தே செல்கின்றார்.

விழா தொடங்குகின்றது. இந்தியத் திரைஉலகின் முன்னணிக் கலைஞர்கள் அனைவரும் நடிகர்திலகம் சிவாஜிக்குப் பாராட்டு மழை பொழிகின்றனர்! வாழ்த்துரை சொரிகின்றனர்!

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். உரையாற்றும் போது, "தம்பி" என்று சிவாஜியை அழைத்து, தாங்கள் பழகிய பழைய நாட்களை நினைவுகூர்கின்றார். இருவரும் ஒன்றாக அமர்ந்து தாய் அமுது



படைத்த காட்சியை விவரிக்கிறார். 'கூண்டுக்கிளி' படத்தில் இரு வரும் சேர்ந்து நடித்தபோது தான் அடைந்த மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறார். எகிப்தில் சிறந்த நடிகராக சிவாஜி பரிசு பெற்றிருப்பது தமிழகத்துக்கே பெருமை என்று கூறி, கட்டி அணைத்துக் கொள்கிறார் தம்பியை!

*அண்ணன் எம்.ஜி.ஆர். ஓர் சரித்திரம்!*

*தம்பி சிவாஜி ஒரு சகாப்தம்!*

*எந்த ஆறு வேண்டுமானாலும் எங்கேயும், எப்படியும், எவரையும் ஒதுக்கிவிட்டு ஓடலாம்! எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன் என்ற இரு கரைகள் இல்லாமல் கலையுலக வரலாறு என்பதே இல்லை!*

அருட்செல்வர் ஏ.பி.என். அவர்களுடன் நான் பணிபுரிந்து கொண்டிருந்த சமயம்.

"இன்று சின்னவர் போன் செய்தார். தில்லானா மோகனாம்பாள் படம் பார்த்தார்" என்று கூறினார்.

"என்ன சொன்னார்...?" ஆவலோடு கேட்டேன்.

"படம் முடிகின்ற வரையில் யாரிடமும் எதுவும் பேசவில்லை. சிவாஜி, மனோரமா, பத்மினி, பாலையா அண்ணன், நாகேஷ் நடிப்பை மிகவும் ரசித்துப் பார்த்தார். சில இடங்களில் 'அட...டா' என்று ஒன்றிப்போய் பாராட்டினார்."

"படம் முடிந்ததும் அதைப்பற்றி என்னதான் சொன்னார்?" கொஞ்சம் அவசரப்பட்டுத்தான் கேட்டேன்.

"சிக்கல்தம்பி பிரமாதம்! சிவாஜியின்னா சிவாஜிதான்!" ஒரே வரியில் அகமும், முகமும் மலர ஓராயிரம் பாராட்டுரைகளை உள்ளடக்கிச் சொல்லிவிட்டார் என்று கலை இலக்கியத்தென்றலாக விளங்கிய ஏ.பி.என். மகிழ்ச்சியோடு கூறினார்.

இன்னொரு சமயம் -

சத்யா ஸ்டுடியோவில் பத்திரிகையாளர்கள் - மக்கள் திலகம் எம்.ஜி.ஆரைச் சந்தித்தோம்.

பத்திரிகையாளர்கள் இடையில் புகுந்த ஒருவர், சிவாஜியைக்

கேலி செய்வதைப் போல் கேள்வி கேட்டார். அதைக் கண்டு எம்.ஜி.ஆர். மகிழ்வார் என்கின்ற அவரது கணிப்பு புஸ்வானமானது.

"நீங்கள் இப்படியெல்லாம் கேள்வி கேட்காதீர்கள். சிவாஜி என்னுடைய தம்பி! மனதினால் நாங்கள் வேறுபடவில்லை. அவரைக் குறை கூறினால் என்னைக் குறை சொல்வதாகத்தான் அர்த்தம்!" என்றார் முகம் சிவக்க!

'சிவாஜிமீது எம்.ஜி.ஆர். தாக்கு' என்று பரபரப்பான செய்தி போடலாம் என்று கேள்வி கேட்டவர், அதன் பின்பு வாயைத் திறக்கவே இல்லை.

கலைஞர்களுக்கும், மக்களுக்கும் மத்தியில் மட்டுமல்ல, ஒரு கலைஞனுக்கும், இன்னொரு கலைஞனுக்கும் மத்தியில்கூட இடைவெளி இருக்கக்கூடாது!

"ஊர் ரெண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்று முன்பெல்லாம் சொல்வார்கள். இப்போது கூத்தாடி ரெண்டு



பட்டால் ஊருக்குக் கொண்டாட்டம் என்று ஆகிவிட்டது."

இதேபோல் இன்னொரு சந்தர்ப்பத்தில் வினா எழுப்பப்பட்ட போது, சற்று உணர்ச்சிவசப்பட்ட நிலையில், அருகில் சிவாஜியை யும் வைத்துக்கொண்டு, எம்.ஜி.ஆர். கூறிய இந்த பதில்... கோடையிடிபோல் நிலைகுலைய வைத்தது.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். முதல் அமைச்சரானதும், அண்ண னுக்கு நேரு விளையாட்டு அரங்கில் - தம்பி நடிகர் திலகம் டாக்டர் சிவாஜி தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவராக இருந்து சென்னையில் மாபெரும் விழா எடுத்ததும், கலைஞர்களும், மக்க ளும் திரண்டதும் மறக்கக் கூடியதா?

சிறந்த கலைஞர்களுக்குப் பரிசு வழங்கும் விழாவில் (16.8.87) கலந்து கொண்டு, முதலமைச்சர் தமிழ்த் திரையுலகைப் பற்றியும், கலைஞர்களைப் பற்றியும் தனக்கே உரிய பாணியில் விமர்சித்து, பாராட்டிப் பேசினார். அப்போது நடிகர் திலகம் சிவாஜியைப் பற்றி தெரிவித்தவை வைர வரிகள்...!

> "சிலர் மட்டும்தான், அதுவும் ஓரிருவர் இல்லை; ஒருவர் மட்டும்தான் – கொஞ்சம் அதிகமாக நடிப்பதாகச் சிலர் பேசினாலும்கூட – தனக்கென்று முத்திரை பதித்த ஒரே நடிகர் சிவாஜி கணேசன் என்பதை இங்கே நான் குறிப்பிட்டாக வேண்டும்.
>
> இயற்கைக்குக் கொஞ்சம் அப்பாற்பட்டு, தனக்கென்று ஒரு பாணி அமைத்துக்கொண்ட சிவாஜி கணேசனைப் போல் யாராவது பின்பற்ற முனைந்தால் அவர்கள் நிச்சயமாக தோற்றுப் போவார்கள்; ஏமாந்து விடுவார்கள்.
>
> அது அவருக்கு மட்டும் வந்த கலை; கைவந்த கலை; அவருக்கு மட்டுமே சொந்தமான கலை.
>
> எப்போது இந்த சினிமாத் துறையைவிட்டு விலக அவராக முடிவு செய்கிறாரோ அதுவரைக்கும் மட்டு மல்ல – அதற்குப் பிறகும்கூட – பல நூற்றாண்டுக ளுக்குப் பிறகும்கூட – சிவாஜி கணேசனுடைய அந்த

இடம் அவருக்கு மட்டுமே இருக்கும் என்பதை சொல்லிக் கொள்கிறேன்."

திறமை உள்ளவர்களைப் பாராட்டினால், தன் பெருமைக்குக் குறைவு வந்துவிடுமோ என்கின்ற பலகீனம் அணுவளவும் இல்லாத ஒரு கலைமேதையிடமிருந்துதான் - கலையை ஒன்றி ரசித்து, அதனை வளர்க்கும் எண்ணமுள்ள நல்ல இதயத்திற்குச் சொந்தமானவர்களிடமிருந்துதான் இத்தகைய மணியான புகழுரையை எதிர்பார்க்க முடியும்.

பொன்மனச் செம்மல், மக்கள் திலகம் என்று போற்றப்படும் எம்.ஜி.ஆர். இவ்வாறு கூற வல்லவர் - நல்லவர் என்பதால் கலையுலகினர் மத்தியில் இதனைக் கூறினார்.



## கண்ணீரைத் துடைக்கும் கருணைக்கரம்!

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். வெற்றி தேவதையின் வீர மைந்தன்!

தர்மத்தாயின் தலைமகன்!

அவர் கண்ட வெற்றிகளை, படைத்த சாதனைகளை உலகமே கண்டு வியக்கின்றது.

தமிழ்க் கலையுலகில் அவர் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்து, திசையறியாது வாழ்க்கைக் கடலில் தத்தளித்த பல மனிதக் கப்பல்களைக் கரை சேர்த்திருக்கின்றார்.

"எம்.ஜி.ஆருக்கு போன் செய்து பாருங்கள்" மனைவியின் உடல்நிலை கண்டு துடித்துக்கொண்டு, என்ன செய்வதென்று புரியாமல் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்த பத்திரிகையாளர் ஒரு

வரிடம் அவருடைய உறவினர் ஆலோசனை கூறினார்.

"இரவு இரண்டு மணி ஆகின்றது. அவர் களைத்துப் போய் நன்றாகத் தூங்கிக் கொண்டிருப்பார். இந்த நேரத்தில் அவரைத் தொந்தரவு பண்ண வேண்டாம்." அவர் தழுதழுத்த குரலில் கூறினார்.

"ஆபத்துக்குக்... காலமில்லை.. நேரமில்லை! வேறு வழியில்லா மல்தானே தெரிவிக்கிறோம். விஷயம் தெரிந்தால் அவரே ஏன் சொல்லவில்லை என்று கோபப்படுவார். தயங்காதீர்கள்..."

"நான் சொல்லும் தகவல் அவருக்குக் கிடைக்க வேண்டுமே! காதுக்கு எட்டினாலல்லவா கருணை காட்ட! அவரை எழுப்பி நமக்காகச் சொல்ல அங்கே யார் இருக்கிறார்கள்? அதுவும் இந்த நேரத்தில் என்னை எழுப்பினால்கூட எரிச்சல்தான் வரும். வற்பு றுத்தாதீர்கள். விதி விட்ட வழியில் நடப்பது நடக்கட்டும்" பத்தி ரிகையாளர் வேதனையோடு கூறுகின்றார்.

வேறு வழியே இல்லை என்கின்ற நிலையில், வீட்டில் உயிரோடு போராடிக் கொண்டிருந்த கர்ப்பிணிப் பெண்ணை ஒரு டாக்ஸியில் அமர்த்தி மருத்துவமனைக்குக் கொண்டு செல்கின்றனர்.

டாக்டர்கள் அவரைப் பரிசோதனை செய்து, மிகவும் அபா யகரமான நிலை என்று தெரிவித்து, கணவனிடம் முன்ஜாக்கிர தையாகக் கையெழுத்து வாங்கிக் கொள்கின்றனர்.

பாவம்! அவர் வேண்டாத தெய்வங்களே பாக்கியில்லை!

நிறைமாத கர்ப்பவதியான அவர் மனைவி புழுவாய்ப் படுக் கையில் நெளிந்து கொண்டிருந்தாள்.

அந்தப் பெண் கழுத்தில் தாலி மட்டும்தான் தங்கியிருந்தது. மற்ற நகைகள் பத்திரிகையாளரின் இலக்கிய சேவைக்கும், குடும் பத் தேவைக்கும் பயன்பட்ட திருப்தியில் பாதுகாப்பாக அடகுக் கடையில் தங்கியிருந்தன.

தரித்திரத்திலிருந்து தன்னையே மீட்டுக்கொள்ள முடியாத நிலை யில், அந்த நகைகளை எப்படி பத்திரிகையாளர் மீட்க முடியும்? தன் மனைவியை சாவின் பிடியிலிருந்து எப்படி மீட்பார்...?



மருத்துவச் செலவுக்கு என்ன செய்வது?

அவர் தன்னுடைய உறவினரின் கைகளைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் பெருக்கினார். இன்னும் சிறிது நேரத்தில் அவர் நினைவிழந்து மயங்கி விழுந்து விடும் நிலை...! அப்போது.

மருத்துவமனை டாக்டர் ஒருவர், அவசர அவசரமாக பத்திரிகையாளரை அழைத்தார். என்ன 'அடி'யோ என்று பதறியடித்துக்கொண்டு அவர் ஓடினார். அவருக்குக் கொஞ்சநஞ்சமிருந்த நம்பிக்கையும் நழுவிக் கொண்டிருந்தது. அவரைத் தாங்கிப் பிடித்தபடி உறவினரும் உடன் சென்றார்.

டாக்டர் தன்னுடைய அறைக்குள் சென்றதும், டெலிபோனை எடுத்து பத்திரிகையாளர் கையில் திணித்தார்.

அவருக்கு ஒன்றும் புரியவில்லை. 'நம்மை எதற்காக அழைத்தார்? எதற்காக கையில் டெலிபோனைக் கொடுக்கிறார்?' வேதனைக்கு நடுவில் வியப்போடு டாக்டரைப் பார்த்தார்.

"எம்.ஜி.ஆர். லைனில் இருக்கிறார். உங்களைக் கூப்பிடச் சொன்னார். பேசுங்கள்!" டாக்டர் பரபரப்போடு கூறினார்.

நடப்பது கனவா... நனவா என்ற ஆச்சரியத்தோடு அவர் டெலிபோனை எடுத்து, "ஹலோ.... வணக்கண்ணே..." என்றார்.

"நான்தான்... எம்.ஜி.ஆர். பேசுறேன்! டாக்டரிடம் எல்லாம் பேசிவிட்டேன். உங்கள் மனைவிக்கு ஒரு ஆபத்தும் வராது... தைரியமாக இருங்கள். எவ்வளவு செலவானாலும் நான் பார்த்துக் கொள்கிறேன். என்னிடம் சொல்வதற்கு உங்களுக்கு என்ன கூச்சம்? உங்கள் உறவினர்தான் சற்று முன்பு எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னார். ஆபத்தான சமயத்தில் உதவி செய்வதற்கு, நேரமும் காலமும் பார்க்கலாமா? கவலைப்படாமல் இருங்கள். டாக்டரிடம் சொல்லியிருக்கிறேன். தேவையானால் நானே அங்கு புறப்பட்டு வருகிறேன். டாக்டரிடம் போனைக் கொடுங்கள்".

"நன்றி...." அவர் தேம்புகிறார்.

"ஹூ...ம்... என்ன இது... குழந்தை போல்..." எம்.ஜி.ஆர். குரல் ஆதரவோடு அணைத்து அவருக்கு ஆறுதல் தருகின்றது.

மந்திரத்துக்குக் கட்டுப்பட்டவர் போல் அருகிலிருந்த டாக்டரிடம் போனைக் கொடுக்கிறார்.

டாக்டர் சில மணித்துளிகள் எம்.ஜி.ஆர். கூறுவதைக் கேட்டு விட்டுப் போனை வைக்கிறார்.

இதற்குள் நர்ஸ் ஒருவர் ஓடோடி வந்து அவரை அழைக்கறார்.

"அமைதியாக இருங்கள்... இதோ வந்து விடுகிறேன்..." என்று கூறிவிட்டு வேகமாக டாக்டர் செல்கிறார்.

எழுத்தாளர் உடம்பில் ஏதோ ஆயிரம் யானைகளின் பலம் ஓடிவந்து உள்ளே புகுந்து விட்டது போல் ஒருவித உணர்வு! மனதில் இருந்த கவலையில் பெரும்பகுதி காற்றின் முன் புகையாய்க் கரைவது போல் ஒருவித நிம்மதி! கண்கள் கலங்க அருகில் இருந்த உறவினரின் கைகளைப் பிடித்துக் கொள்கிறார் அவர் ஆதரவோடு தட்டிக் கொடுக்கிறார்.

"நான்தான் ராமாவரம் தோட்டத்துக்கு போன் செய்து, விவரத்தைக் கூறினேன். அவரே பேசினார். 'புறப்பட்டு வரட்டுமா?' என்றுதான் உடனே கேட்டார். 'டாக்டரிடம் சொன்னாலே பெரிய உதவியாக இருக்கும்' என்றேன். நான் வீட்டை விட்டுப் புறப்படுவதற்கு முன்பு உனக்குத் தெரியாமல் போன் செய்தேன். இங்கே ஆஸ்பத்திரிக்கு வருவதற்குள், அவர் டாக்டரிடம் சொல்லி எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டார். இப்போது பேசியது இரண்டாவது முறை. டாக்டரிடத்தில் தானே புறப்பட்டு வருவதாகச் சொல்லியிருக்கிறார். 'அவசியமானால் தெரிவிக்கிறேன்' என்று டாக்டர் கூறியதால்தான் வரவில்லை. இல்லாவிட்டால் இங்கே வந்திருப்பார்" உறவினர் நடந்ததைத் தெரிவித்தார்.

பத்திரிகையாளர், எழுத்தாளர் இதுவரையில் எவ்வளவோ எழுதிக் குவித்திருக்கிறார்.

அவர் எழுதிய செய்திகளை, படைத்த கதாபாத்திரங்களைக் கதைகளில் படித்துவிட்டுப் பாராட்டாதவர்களே கிடையாது.

ஆமாம்! ஒரு படைப்பாளிக்கு பாராட்டுரைகள்தான் பாதி உயிரைத் தந்து, நாட்டில் நடமாட வைத்துக் கொண்டிருக்கின்றன. வறுமை தாண்டவமாடினாலும், வளமாக வாழ்வது போல், தன்

சொல்வளத்தினால், வெளியில் அவனால் காண்பித்துக் கொள்ள அதனால்தான் முடிகின்றது!

சிறிது நேரத்தில், ஒரு உயிர் ஓசை எழுப்பி, தன் வருகையை அருகில் உள்ளவர்கள் மூலம் உலகிற்கு அறிவிக்கின்றது.

ஆம்! பத்திரிகையாளர் தந்தையாகி விட்டார்! டாக்டர் விரைந்து வந்து செய்தியைக் கூறிவிட்டு, அவர் கையைப் பிடித்துக் குலுக்குகிறார்.

"எல்லாம்... நல்லவிதமாக நடந்து விட்டது. உங்கள் மனைவி ஒரு பெரிய கண்டத்திலிருந்து பிழைத்துவிட்டார்கள். தாயும், சேயும் நன்றாக இருக்கிறார்கள். இன்னும் சிறிது நேரத்தில் நீங்கள் அவர்களைப் பார்க்கலாம்" என்று சொல்லிவிட்டு ராமாவரத் துக்கு டயல் செய்கிறார்.

தொடர்பு கிடைக்கின்றது.

நல்ல செய்தியைத் தெளிவாகத் தெரிவிக்கிறார்.



மறுபக்கம் கேள்விகள் தொடுக்கப்படுகின்றன. அதற்கெல்லாம் டாக்டர் அமைதியாக பதில் கூறுகிறார். பின்பு டெலிபோன் பத்திரிகையாளர் கைக்கு வருகிறது - செவியில் தேனாறு பாய்கின்றது.

"வாழ்த்துக்கள்! உங்கள் மனைவியையும், குழந்தையையும் சென்று பார்த்துவிட்டு, நிம்மதியாக ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்" எம்.ஜி.ஆர். தாயாகின்றார்.

அப்போது விடிவெள்ளி முளைக்கும் வேளை!

"அண்ணே... நீங்கள் செய்த உதவியை நான் உயிருள்ள வரை மறக்கமாட்டேன்" குரல் தழுதழுக்கிறது. உணர்ச்சிவயப்பட்டு எழுத்தாளர் அழுகிறார்.

"அட...டா... மறுபடியும் குழந்தையைப் போல்... நீங்கள்.. அழலாமா? நீங்க இப்போது ஒரு குழந்தைக்குத் தந்தை... குழந்தையல்ல! மகிழ்ச்சியாக இருக்க வேண்டிய நேரம். உங்கள் மகிழ்ச்சியில் பங்குபெற எனக்கொரு சந்தர்ப்பம் கொடுத்ததற்கு நான்தான் நன்றி சொல்ல வேண்டும். விரைவில் சந்திப்போம்." எம்.ஜி.ஆர். ரிஸீவரை வைத்துவிட்டார்.

பத்திரிகையாளர் மெல்ல எழுந்து மனைவியையும், குழந்தையையும் காண்பதற்குக் களிப்போடு செல்கிறார்.

எழுத்தோவியக் குழந்தைகளைப் பத்திரிகைகளில் தவழ விட்டவர், பேசும் ஓவியமான தன் பிள்ளைச் செல்வத்தைக்கண்டு மகிழ்கிறார்.

ஒரு உதயத்தை பிள்ளை உருவில் கண்ட பின்பு, அண்ணாவின் இதயக்கனி என்று அழைக்கப்படும் எம்.ஜி.ஆர். என்ற ஒரு அபூர்வ மனிதரின் இதயத்தை எண்ணியெண்ணி வியக்கின்றார்.



## ஆச்சி மனோரமா கண்ட அதிசயக் காட்சி!

*அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து*
*இன்புற்றார் எய்துஞ் சிறப்பு*

உலகத்தில் இன்பமுடன் வாழ்கின்றவர் அடையும் சிறப்பு, அன்பு உடையவராகிப் பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று அருமறை தந்த திருவள்ளுவர் கூறுகின்றார்.

ஈரமுள்ள வளமான மண்ணில்தான் பயிர் விளையும்; மக்களுக்கு உணவாகப் பயன்படும்!

இரக்கமுள்ள மனிதரால்தான் மற்றவர்களுக்கு வாழ்வு கிடைக்கும்!

நல்ல மனிதனாகப் பண்புகளோடு வாழத் தெரியாத ஒருவன், நல்ல கலைஞனாக முடியாது.

உருகி, உருகிப் புடமிடப்படாத தங்கம் உயர்வு பெறாது! பட்டை தீட்டப்படாத வைரம் ஒளிவிடாது!

மகிழ்ச்சியடைபவர்களைக் கண்டு மகிழ்ந்து, நெகிழ்ச்சியடைபவர்களைக் கண்டு நெகிழ்ந்து, துன்பத்தால் துடிப்பவர்களைக் கண்டு துடித்து, அடுத்தவர் உணர்ச்சிகளை உணர்ந்து கொள்ளவே தெரியாதவன் எப்படி மனிதனாவான்? மனிதனாகவே வாழத் தெரியாதவன் எப்படிக் கலைஞனாக உயர்வான்?

'தேர்த் திருவிழா' வெளிப்புறப் படப்பிடிப்பிற்காக மக்கள் திலகம் எம்.ஜி.ஆருடன் மனோரமா கும்பகோணத்திற்குச் சென்றிருந்தார். அங்கிருந்து ஏழு மைல் தொலைவில் காவிரி ஆற்றில்தான் படப்பிடிப்பு.

வெய்யில் காலமாதலால் எங்கும் ஒரே மணல்வெளிதான்! மணல்வெளிக்கு மறுபக்கம் தண்ணீர் இருக்கும். அங்கேதான் மக்கள் திலகமும், நடிகர், நடிகையரும் இருந்தனர்.

இக்கரையில் அந்த மணல்வெளியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் நின்று கொண்டிருந்தனர். அந்தக் கோடை வெய்யிலில் ஒதுங்கக்கூட நிழலே கிடையாது.



"படப்பிடிப்பு நடந்து கொண்டிருக்கும் இந்தப் பக்கத்தில் யாரும் வந்து தொந்தரவு கொடுக்கக் கூடாது" என்று ஒலிபெருக்கி மூலம் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அங்கு நின்று கொண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அன்புக்கட்டளையிட்டார்.

அவ்வளவுதான்! அவர் சொல்லுக்குக் கட்டுப்பட்டு, அத்தனை பேரும் அங்கேயே கடுமையாகத் தகிக்கும் வெய்யிலில், தணல்போல் சுடும் மணலில் அப்படியே அசையாது நின்றார்கள்.

தமிழகத்தின் கலைப்பொக்கிஷமாகத் திகழ்பவரும், ஆயிரம் படங்களுக்கு மேல் நடித்து அரிய சாதனை நிகழ்த்தியிருப்பவரு

மான நகைச்சுவை, குணச்சித்திர நடிகை மனோரமா நெஞ்சில் பதிந்த அந்த நினைவை விட்டு அகலாத காட்சியை அப்படியே விவரிக்கிறார் கேளுங்கள்...

"அடடா... எவ்வளவு கட்டுப்பாடு? அண்ணன் மக்கள் திலகம் ஆணைக்கு எத்தனை மதிப்பு? எப்படித்தான் அந்த சுடுமணலில் காலையிலிருந்து மாலை வரை அவர்களால் நிற்க முடிந்ததோ! பெரிய அதிசயம்! நாங்கள் படப்பிடிப்பு முடிந்ததும் ஒரு வேன் மீது அமர்ந்து கொண்டு வந்தோம். வெய்யிலில் நின்று கொண்டிருந்த மக்கள், எங்களை நன்றாகப் பார்க்க வேண்டுமென்பதற்காக அண்ணன்தான் இவ்வாறு ஏற்பாடு செய்தார்.

அந்தக் காட்சியையும் அண்ணன் எம்.ஜி.ஆர். சொன்னவுடன் மக்கள் அசையாது நின்ற நிகழ்ச்சியையும் இப்போது நினைத்துக் கொண்டாலும் ஒரு பாட்டுதான் நினைவுக்கு வருகிறது.

'திருவிளையாடல்' படத்தில், 'நான் அசைந்தால் அசையும் அகிலமெல்லாமே' என்று ஒரு பாடல் காட்சி வரும்.

அந்தப் பாடல் வரி வரும்போது அருட்செல்வர் ஏ.பி.என். ஒரு ஷாட் போடுவார்.

அசைகின்றவைகளெல்லாம் ஒருகணம் அசையாது நின்று, மறுகணம் அசையும்.

சத்தியமா... என் தொழில்மேல் சாட்சியாகச் சொல்றேன். இந்தச் சம்பவத்தை நினைத்தால தோன்றும் பாடல் வரி இது தான். ஏதோ நாமும் சொல்லி வைப்போம்னு அதிகப்படுத்திச் சொல்லவில்லை. உண்மையைச் சொல்கிறேன்.

மக்கள் திலகம் கை அசைத்து ஒரு வார்த்தை சொன்னார் - மக்கள் அப்படியே நின்றார்கள். மக்கள் எவ்வளவு நல்ல அபிப்பிராயம் அவர் மீது வைத்திருக்கிறார்கள் என்பதைக் கண்ணெதிரில் கண்டு வியந்து போனேன்.

அந்த இடத்திலிருந்து அவர் கூடவேதான் நான் கும்பகோணத்திற்குத் திரும்பினேன். ஏழு மைல்கள் அவருடன் வேனில் வந்தேன். வழியெங்கும் மக்கள் இருபுறமும் கூடி நின்றனர். பெண்கள்கூடக் காரை நிறுத்தச் சொல்லி, வேன் பேனட் மீது



ஏறி அவருக்கு மாலை போட்டதையும், ஆரத்தி எடுத்ததையும் நேரிலேயே பார்த்தேன்.

கும்பகோணத்திற்கு நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு வந்ததும், எங்கள் அறைக்கு அம்மாவுடன் சென்று மேக்கப்பைக் கலைத்தேன்.

திடீரென்று - ஏதோவொரு எண்ணம் - மனதில் தூண்டுதல்!

மீண்டும் அம்மாவை அழைத்துக் கொண்டு அண்ணனைப் பார்க்க மக்கள் திலகம் தங்கியிருந்த அறைக்குச் சென்றேன்.

என்னையும், அம்மாவையும் கண்டவுடன்...

"என்னம்மா... வாங்க.. வாங்க...! ஏதாவது வேணுமா?" என்று அண்ணன் எம்.ஜி.ஆர். கேட்டார்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லை! என்னமோ மறுபடியும் அண்ணனைப் பார்க்கணும்போல எனக்கு இருந்துச்சு. அம்மாவுக்கும் பிள்ளையைப் பார்க்கணும் போலத் தோணிச்சு" என்று சொல்லிவிட்டு அம்மாவுடன் திரும்பி வந்தேன்.

புன்சிரிப்புடன் அவர் எங்களை வழியனுப்பி வைத்தார்.

அவருடன் பல படங்களில் நடித்திருக்கிறேன். அன்று படப்பிடிப்பில் அவருடனேயே பல மணி நேரம் இருந்திருக்கிறேன். அவரோடுதான் திரும்பினேன். இந்த நிலையில் எனக்கே மீண்டும் பார்க்க வேண்டும் என்று அப்போதே தோன்றும்போது மக்களுக்கு அவர்மீது பற்று ஏற்படுவது அதிசயமா?

அவர் சண்டைக்காட்சிகளில் நடிக்கின்ற அந்த 'ஸ்டைல்' யாருக்குமே வராது. இனிமேல் ஒருவர் புதிதாய்ப் பிறக்கணும்! பிறக்கலாம்... அந்த ஸ்டைல் வருமா?

அண்ணன் எம்.ஜி.ஆர். நவரசமும் நன்றாக நடிப்பார். எனக்கென்னமோ அவர் காமெடி நடிப்பு ரொம்பப் பிடிக்கும்.

'நாடோடி மன்னன்', 'அடிமைப்பெண்', 'புதுமைப்பித்தன்', 'எங்கவீட்டுப் பிள்ளை' போன்ற பல படங்களில் அவருடைய இயற்கையான நடிப்பு பிடிக்கும்.

எவ்வளவோ வேலைகளுக்கு மத்தியில், எப்படி உடலைக் கட்டாக வைத்துக் கொண்டு சுறுசுறுப்பாக இருந்தார் என்பது எனக்கு மிகமிக வியப்பு! அவரைப்போல சுறுசுறுப்பாக ஒவ்வொருவரும் இருக்க வேண்டும் என்று சொல்வதைவிட, முதலில் அதுபோல் இருக்க நானும் முயற்சிக்கிறேன்..."

மனோரமா பல ஆண்டுகளுக்குமுன் மனம் திறந்து மக்கள் திலகத்தைக் குறித்து வெளியிட்ட கருத்தாரத்தைத் தொடுத்துள்ளேன்.



# விண்ணளந்த புகழ் கொண்ட வித்தகர்!



தமிழகத்தில் அரசியல், கலை ஆகிய இரு துறைகளிலும் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். பெற்ற வெற்றிகளும், குவித்த புகழும் உலகமே வியந்து உற்றுப் பார்க்கும் வகையில் செய்தன.

சந்தர்ப்பக் காற்றினால் கோபுரக் கலசத்தின்மீது ஒட்டிக் கொண்ட சருகுகள், காலச் சூறாவளியினால் ‘பொலபொல’ வெனக் கீழே விழுந்துவிடும்.

எந்த மனிதனின் உயர்வுக்கும், தாழ்வுக்கும் அவன்தான் காரண மாக இருக்க முடியுமே தவிர, அடுத்தவன் அல்ல!

தன்னை உருவாக்கிக் கொண்டு, மற்றவர்களை மனத்தால் விரும்பி நேசிக்கும் போது, அவர்கள் வளர்ச்சியில் தன் வளர்ச்சி யைக் காணுகின்றபோது, புகழ் அவனைப் புரிந்து கொண்டு ஆலிங்கனம் செய்து கொள்கிறது.

கலைத்துறையின் முன்னணி நடிகராக மட்டுமின்றி, இயக்குந ராக, தயாரிப்பாளராக, கதாசிரியராக, எடிட்டிங் நிபுணராக, மக்கள் ரசனைக்கேற்ப இசையை வழங்கச் செய்யும் அறிவுரை கூறுபவராக, சமுதாய மறுமலர்ச்சிக் கருத்துகளை பாடல்களிலும், உரையாடல்களிலும் எளிமையாக எடுத்துச் சொல்ல ஆலோ சனை வழங்குபவராக, நடனம், அரங்க அமைப்பு, ஒளிப்பதிவு என்று ஒவ்வொரு பிரிவிலும் ஆற்றல் மிக்கவராக விளங்கியவர் எம்.ஜி.ஆர்.

அரசியலில் தொண்டராக இருந்து, தலைவராக மக்களால் உருவாக்கப்பட்டு, முதல்வராக தமிழகத்தில் பத்து ஆண்டுகளுக்கு மேல் வீற்றிருக்க செய்த முதல்வர் எம்.ஜி.ஆர்.தானே!

இவ்வாறு, எத்துறையாக இருந்தாலும் அங்கே முத்திரை பதித்து முதன்மையான இடம் பெற்றவர் உலக அரங்கில்கூட ஒருவரும் இருக்க முடியாது!

அவருக்குக் கிடைத்த புகழ், தகுதி, திறமைக்கு மீறியதல்ல - மிகவும் குறைவானதுதான்!

அவர் திறமையாகப் பேசும் ஆற்றல் மிக்கவர்! அடுக்கடுக்காக எடுத்து வைக்கப்படும் வாதங்களுக்கு அழகாகப் பதிலளிப்பதில் வல்லவர்! அகில உலகப் பிரச்சினைகளிலிருந்து, அன்றாடப் பிரச்னைகள் வரை கூர்மையாகக் கவனித்து விளக்கம் அளிப்பவர். இலக்கியத்தின் இலக்கை அறிந்தவர்; நல்ல சொற்பொழிவாளர்.

அரசியல் மேடைகளில் மட்டுமல்ல, எந்தத் தலைப்பிலும் சுவையாகப் பேசும் ஆற்றலுள்ளவர் என்பதனைக் கல்லூரிகளில் நிகழ்ந்த விழாக்கள் - பொது அமைப்புகளின் விழாக்களில் பேசிய சொற்பொழிவுகள் அறிவுறுத்தும். விடிய விடியப் பல நகரங்களில், ஊர்க



ளில் அவர் வருகைக்காகக் காத்திருந்து உரையாற்றுவதைக் கேட்டு மகிழ்ந்த லட்சோபலட்சம் உள்ளங்கள் அறிந்த உண்மை இது!

சென்னை, மியூசிக் அகாடமி விழாவில் இசையின் நுட்பங் களை, கர்நாடக சங்கீதத்தின் சிறப்பினைக் குறித்து அவர் உரை யாற்றியதைக் கேட்டுவிட்டு, வியந்து பாராட்டிய மேதைகள் பலர்!

சட்டப்பேரவையில் எதிர்க்கட்சியினரின் சரமாரியான கேள்விக் கணைகளுக்கு அயராமல் பதில்கூறி முதலமைச்சர் என்ற முறையில எம்.ஜி.ஆர். 8 மணி நேரம் உரையாற்றியது ஒரு பெரும் சாதனை என்று கூறாதவர்களே இல்லை.

**எம்.ஜி.ஆர். ஒரு பத்திரிக்கையாளர்!**

'நடிகன் குரல்', 'சமநீதி', 'அண்ணா' இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றியவர்!

ஒருமுறை சத்யா ஸ்டுடியோர்விலிருந்து மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அழைப்பு விடுத்தார். மிகவும் அவசரம் என்றதனால் விரைந்து சென்றேன். இருபெரும் இயக்கங்களிலிருந்து இரண்டு தலைவர்கள், மக்கள் திலகத்தின் தலைமையிலுள்ள இயக்கத்தில் இணைந்தனர். அவர்களை எனக்கு அவர் அறிமுகம் செய்து வைத்தார். பின்பு தனிமையில் ஆசிரியர் என்கின்ற நிலையில், துணையாசிரியராக 'அண்ணா'வில் அவருடன் பணியாற்றும் பேறு பெற்ற என்னிடம் அவர் கூறிய சொற்கள் இன்றும் பசுமை யாக நினைவிலுள்ளன.

"இருவரைப்பற்றிய செய்திகளையும் தனித்தனியே, உரிய முக்கி யத்துவம் தந்து வெளியிடுங்கள். ஒருவர் பெயர் பெரிதாக, இன்னொருவர் பெயர் சிறியதாக வந்துவிடக்கூடாது. ஒரே மாதி ரியாக இடம்பெற வேண்டும்." இப்படி அவர் மற்றவர்களை மதித்தது மட்டுமல்ல, எவருடைய மனமும் புண்படக்கூடாது, நாமே ஒருவரை உயர்வாக, இன்னொருவரைத் தாழ்வாக எண்ணு கிறோம் என்று நினைத்துவிடக்கூடாது என்பதிலே கவனமாக இருந்தார்.



பம்பாயில் 'பிலிம்பேர்' பத்திரிகையின் பரிசளிப்பு விழாவிற்குச் சென்றிருந்த அவரை, தாஜ் ஓட்டலில் தனியாகச் சந்தித்து பத்திரிக்கை குறித்து விவாதிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

அந்த அறையில் நாங்கள் இருவர் மட்டும்தான் இருந்தோம். எல்லோரையும் வெளியே அனுப்பிவிட்டார். பேசிக்கொண்டே இருந்தவர், எழுந்து சென்று சில நாளிதழ்களையும், வார இதழ்களையும் கொண்டு வந்து பிரித்து, என்னிடம் விரிவாக விளக்கம் தந்தபோது, நான் அயர்ந்துபோய் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். என்னால் அப்போது அதைத்தவிர ஏதும் பேசமுடியாதபடி அவர் செய்துவிட்டார்.

கலவரம் ஒன்றின்போது கண்ணீர்ப்புகைக்குண்டு வெடிக்கப்பட்டு, மக்கள் சிதறி ஓடுவதையும், துப்பாக்கிச் சூட்டின்போது எடுக்கப்பட்ட காட்சிகளையும் துணிவுடன் படம் எடுத்து சிறப்பாக வெளியிட்டிருந்தனர். 'படங்கள் இருக்க வேண்டும் என்பதற்காக எதையாவது போடுகின்ற நிலைமை மாற வேண்டும்' என்று தெரிவித்தார். பத்திரிக்கைத்துறையில் பல்வேறு மாற்றம் குறித்து பல சந்தர்ப்பங்களில் அவரிடம் உரையாடியதிலிருந்து நான் பெற்ற பாடங்கள் பல!

அவர் ஒரு நல்ல **எழுத்தாளர்!**

யாரோ சொல்லக் கேட்டு அல்ல, நானே கண்ணெதிரில் கண்டு, படித்து மகிழ்ந்து, அனுபவித்து உணர்ந்த உண்மை இது!

'நெஞ்சோடு நெஞ்சம்' என்ற தலைப்பில் நாள்தோறும் அவர் எழுதித்தரும் கட்டுரையை வாங்கச் செல்வேன் நான்! ஒரு நாள்!

'இன்று போல் என்றும் வாழ்க' படப்பிடிப்பு சத்யா ஸ்டுடியோவில் நடந்து கொண்டிருந்தது.

கட்டுரை வாங்கச்சென்ற என்னைக் கண்டதும்...

செந்தாமரை முகம் மலர்ந்தது; சிரிப்பு நாதம் எழுந்தது.

"கட்டுரை.... நாளைக்குத் தருகிறேனே!" என்றார் மெல்ல.

"தொடர்ந்து வருவது... இடையில் நின்றால் ஆவலோடு படிக்க விரும்புபவர்கள் ஏமாற்றமடைவார்கள். இன்னும் இரண்டு மணி

நேரத்தில் நீங்கள் கொடுத்தால் போதும்." நானும் விடாமல் வலியுறுத்தினேன்.

அவர் கலகலவென்று சிரித்தார்.

"நீங்கள் என்ன சொல்வீர்களென்று எனக்குத் தெரியும். இவர்களிடம் 'விடாக்கண்டர் வந்துவிட்டார். கட்டுரையை வாங்காமல் போகமாட்டார். தப்பிக்க முடியாது' என்று சொல்லிக் கொண்டிருந்தேன்" என்று சொல்லியபடி திரும்பிப் பார்த்தார்.

அவர் பார்வையின் பொருள் புரிந்த சபாபதி, ஒரு கிளிப் பேடில் வெள்ளைத்தாள்களை வைத்துக் கொடுத்துவிட்டு, பேனாவை நீட்டினார்.

அருகில் நான் அமர்ந்திருந்தேன். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். எழுத ஆரம்பித்தார்.

ஒரு தங்கு தடையில்லாமல் அவர் எழுதிக் கொண்டேயிருந்தார். அவர் கை எழுதிச் செல்லும் வேகத்தைக் கொண்டு சிந்தனையோட்டம் எத்தனை வேகமாக இருக்கும் என்று எண்ணி வியந்தபடி அசையாத பதுமையாக அமர்ந்திருந்தேன்.

இடையில்-

உதவி இயக்குநர் ஒருவர் அருகில் வந்து தயங்கி நின்றார். அவர் அழைப்பதற்கு முன்பு என்னிடத்தில் எழுதிய தாள்களைக் கொடுத்துவிட்டு எழுந்தார்.

"நான் ரெடி." என்று நடந்தார்.

எதிரில் இருந்த கரும்பலகையில் திருக்குறள் ஒன்று எழுதப்பட்டிருந்தது.

அந்தக் குறள் தவறாக எழுதப்பட்டிருந்தது. போகிற போக்கில் இதைக் கவனித்துவிட்டு நின்ற எம்.ஜி.ஆர்., தவறான வாக்கியத்தைத் திருத்தினார்.

'இவருக்கென்ன தெரியும்?' என்று எவ்வளவு சாதாரணமாகச் சிலர் விமர்சனம் செய்கிறார்கள்.

'ஆமாம்.... இவருக்கு என்ன தெரியாது?' என்று எனக்குள் நானே கேட்டுக் கொண்டேன்.

காட்சி எடுக்கப்பட்டு முடித்து வந்ததும், என்னிடம் இருந்த கிளிப் பேடை வாங்கி மீண்டும் எழுதத் தொடங்கினார். அடுத்து-

"ஷாட் ரெடி...." என்ற அழைப்பு.

நடித்து விட்டு வந்ததும் மீண்டும் எழுத்து! இப்படியே 90 மணித்துளிகளுக்குள் ஒரு அருமையான கட்டுரையை எழுதி முடித்து என் கையில் கொடுத்தார்.

"அப்பாடா இன்று.... உங்களிடமிருந்து விடுதலை" என்ற கூறி விட்டுச் சிரித்தார் வேடிக்கையாக.

என்னை அவரிடமிருந்து திரும்பப்பெற முடியாமலே எப்ப டியோ விடைபெற்றுக் கொண்டு புறப்படுகிறேன்.

இப்படிப் பல சந்தர்ப்பங்கள் அவர் ஒரு சிறந்த எழுத்தாளர் என்பதைக் கண்டு உணரும் வாய்ப்பைத் தந்துள்ளன.

'சதி லீலாவதி' படத்தில் நடிக்கத் துவங்கி, 'மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்' வரையில் 136 படங்களில் நடித்துள்ள அவர் படைத்த சாதனைகள் சாதாரணமானதா?

முதல் வண்ணப்படமான 'அலிபாபாவும் 40 திருடர்களும்' படத்தில் நடித்த முதல் கதாநாயகர் அவர்தான்! 40 வண்ணப் படங்களில் அவர் நடித்துள்ளார்.

31 வாரங்களை வரை ஓடி வெற்றி கண்டு, வசூலில் பெரும் சாதனை படைத்த படம், 'உலகம் சுற்றும் வாலிபன்'.

தக்ஷயக்ஞம், அசோக்குமார், மதுரைவீரன், எங்க வீட்டுப் பிள்ளை, ஒளிவிளக்கு, அடிமைப்பெண், மாட்டுக்கார வேலன், நாடோடி மன்னன், ரிக்ஷாக்காரன், அன்பே வா, உரிமைக்குரல் ஆகிய படங்கள் - 25 வாரங்கள் ஓடி, வெள்ளிவிழா கொண்டாடி யுள்ளன. 100 நாட்கள் ஓடிய படங்கள் 68.

'ரிக்ஷாக்காரன்' படத்தில் நடித்ததற்காக இந்தியாவிலேயே சிறந்த நடிகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 'பாரத்' பரிசு பெற்றார்.



நடிகர் என்ற முறையில் அவருக்குக் குவிந்த பரிசுகள் ஏராளம். மக்கள் சக்தி என்ற மகத்தான பரிசு, அவர் பெற்ற பரிசுகளில் அரியது, பெரியது.

எம்.ஜி.ஆர். படங்களில் பாடல்கள் கருத்தாழத்துடனும், இனிய இசையமைப்புடன் இருக்கக் காரணம் என்ன?

முன்னணி இசையமைப்பாளர்களைக் கேட்டால் 'அந்த சிதம்பர ரகசியத்தை'ச் சொல்லுவார்கள்.

எம்.ஜி.ஆருக்கு நல்ல இசைஞானம் உண்டு. ஒரு பாடலுக்கு நல்ல 'டியூன்' அமைகிற வரையில், அவர் மேலும் மேலும் கேட்டுக் கொண்டே இருப்பார்.

ஒரு பாடலுக்கு இருபதுக்கும் மேல் டியூன் போட்ட இசையமைப்பாளரும் உண்டு.

வெளிப்புறப் படப்பிடிப்பிலிருந்த எம்.ஜி.ஆரிடம் அனுமதி பெற இசையமைப்பாளர் ஒருவர், தான் இசையமைத்திருந்த ட்யூன்களை 'டேப்'பில் பதிவு செய்து எடுத்துச் சென்றார்.

அமைதியாக அதைக் கேட்டுவிட்டு, இந்தக் காட்சியில் இந்த ராகத்தில் இசையமைத்தால் சிறப்பாக இருக்கும் என்று விளக்கமாக எம்.ஜி.ஆர். கூறினார். -

அதைக்கேட்ட இசையமைப்பாளர் அயர்ந்து போய்விட்டார். மக்கள் ரசனையை நன்கு புரிந்துகொண்டு, அதற்கேற்ற வகையில் பாடல்கள் இடம்பெறச் செய்வதில் எம்.ஜி.ஆருக்கு இணை அவர் தான்!

'உலகம் சுற்றும் வாலிபன்' படத்திற்காக ஜப்பானில் நடைபெற்ற எக்ஸ்போ கண்காட்சியில், படமாக்கச் சென்றிருந்தனர். இரு வேடங்களில் நடித்தார் என்பதுடன் அந்தப் படத்தின் இயக்குநரும் அவர்தான்!

எக்ஸ்போ கண்காட்சியில், இருந்த கூட்டத்தில் எம்.ஜி.ஆரால் படப்பிடிப்பை நடத்த முடியாது. இது விஷப்பரிட்சை என்று கருதாதவர்களே இல்லை. அவருடன் சென்றிருந்தவர்களே எப்படி இங்கு படமாக்கப் போகின்றார் என்று நினைத்தனர்.



பாடலை போடச் செய்துவிட்டு, தன்னைப் பார்த்து தான் எப்படி மூவ்மெண்ட் கொடுக்கிறாரோ அப்படி மூவ்மெண்ட் கொடுத்தால் போதுமென்று எம்.ஜி.ஆர் கூறியுள்ளார். அங்கே ரிகர்சல் செய்வதற்கெல்லாம் வசதியோ நேரமோ, சூழ்நிலையோ அமையாததுதான் காரணம்.

அவர் கூறியதுபோலவே உடன் நடித்த நடிகையர் செய்துள்ளனர். அவைகளெல்லாம் படத்தில் பார்க்கும்போது எவ்வளவு அற்புதமாக இருந்தது எனப் பலர் பலமுறை கூறக் கேட்டுள்ளேன்.

'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தின் திரைக்கதையமைப்பு என்ன என்பது மக்கள் திலகம் எம்.ஜி.ஆரைத் தவிர, வேறு எவருக்கும் தெரியுமா என்பது சந்தேகமே!

'எடிட்டிங்' மேஜையில் அமர்ந்து, எடுக்கப்பட்ட படத்தை அழகாக இணைத்துத் தந்த பின்புதான், 'உலகம் சுற்றும் வாலிபன்' கதையும், காட்சியமைப்பும், சிறப்பும் அந்தப் படத்தில் பணியாற்றியவர்களுக்கே புரிந்தது!

'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தில் புத்தர் கோவில் ஒன்றில் எம்.ஜி.ஆரும், எம்.என். நம்பியாரும் மோதுவது போன்ற காட்சி இடம்பெற்றிருக்கும். அந்த பிரம்மாண்டமான அரங்கு சத்யா ஸ்டுடியோவில் போடப்பட்டு படமாக்கப்பட்டது. தமிழில் எத்த னையோ படங்கள் வெளிநாட்டில் படமாக்கப்பட்டு வெளிவந் துள்ளன. ஆனால், இன்றும் 'உல்கம் சுற்றும் வாலிபன்' படத்தின் சிறப்பினை வியந்து பாராட்டாதவர்களே இலலை! நாடோடி மன்னன், அடிமைப்பெண் ஆகிய படங்களின் தரத்தினை போற்றாதவர்களே இல்லை.

கலைத்துறையில் எல்லா நுணுக்கங்களையும் அறிந்து, தகுந்த முறையில் தன் ஆற்றலைப் பயன்படுத்தி வெற்றி கண்டு, விண்ண ளாவ உயர்ந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆரை அஷ்டாவதானி என்பதில் என்ன தவறு?

அரசியலில், தன் அறிவுத்திறமையை, நாட்டுப்பற்றை, மக்கள் நல்வாழ்வில் ஆர்வத்தை, அரிய திட்டங்களைப் செயல்படுத்தி மாபெரும் தலைவராக விளங்கியவர் எம்.ஜி.ஆர்.

## அன்று சொன்னவை அர்த்தமுள்ளவை....?



நிர்வாணமாக சாமியார் ஒருவர், வீட்டின் திண்ணையில் அமர்ந்திருந்தார். பிறந்த மேனியோடு இருந்த அவரை விரட்டுவ தற்குத் தெருவில் இருந்தவர்களுக்குப் பயம்...! காரணம்-அவர் முற்றும் துறந்த பற்றற்ற துறவியாக இருந்ததுதான்.

வீதியில் செல்வோர்களையெல்லாம் கூர்ந்து அவர் பார்ப்பார்.

'இதோ.... குரங்கு போகின்றது.'

'இதோ.... கரடி செல்கின்றது.'

'நரி நடமாடுகின்றது....'

'அட....டா.... ஓனாய் வருகின்றது'

என்று ஒவ்வொருவரையும் விலங்குகளின் பெயரைச் சொல்லி அழைத்து விட்டுச் சிரிப்பார். குணத்தை வைத்து உருவத்தை கண்டு கொண்டார். இவ்வாறு சொல்லிக்கொண்டும், சிரித்துக் கொண்டும், மேலே ஆடை ஏதும் இல்லை என்கின்ற உணர்வே இல்லாமல் அமர்ந்திருந்த அந்தத்துறவி அச்சத்தோடு ஒரு திசை யில் பார்த்தார்.

"அதோ மனிதர்.... மாபெரும் மனிதர் ஒருவர் வருகிறார்" என்று கூச்சலிட்டபடி, வெட்கத்தோடு கைகளால் முடிந்தவரை மறைக்க வேண்டிய இடங்களை மறைத்தபடி எழுந்தார்.

மனிதர்களையே காணாத நிலையில் தன்னுடைய நிர்வாணம் அவருக்கு வெட்கத்தைத் தரவில்லை! இன்னொரு மாமனிதரைக் கண்ட பின்புதான், தான் ஆதி மனிதனாகக் காட்சியளிப்பது புரிந்தது. ஞானியை இன்னொரு ஞானியால்தானே அறிந்து கொள்ள முடியும்.

மனிதர் என்று அவர் அச்சத்தோடும், கூச்சத்தோடும் சுட்டிக் காட்டியது அருட்பெருஞ் ஜோதி திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளார்தான்!

இது நடந்த சம்பவம்!

இதனைத்தான் வான்புகழ் வள்ளுவர் மிக அழகாக ஒரு திருக்குறளில் முன்பே அறிவுறுத்தி விட்டார்.

*'விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்*
*கற்றாரோடு ஏனையவர்.'*

வள்ளலார் இராமலிங்க அடிகளார், 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்றார்.

கும்பகோணத்தில் பட்டினியால் வாடிய தன்னுடைய பிள்ளைகளுக்கு, அடுத்த வீட்டிலிருந்த பெண்மணி தந்த அரிசி யைக் கொண்டு அன்னை சத்தியவதி அம்மையார் ஒரு காலத்தில் அமுது படைத்தார்.



அன்று வாடிய பயிராக இருந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். தன் வாழ்நாளில் வான்மழையாக மாறி, மக்கள் வாழ்வுப்பயிர் செழிக்கக் காரணமாக இருந்தார்.

அறியாச் சிறுவனாக இருந்த காலத்தில் தான் பசியால் பட்ட துன்பம், படிக்க முடியாமல் போன சூழ்நிலை, ஏழ்மையில் சிக்குண்ட எந்தச் சிறுவனுக்கும் ஏற்பட்டு விடக்கூடாது என்கின்ற நல்லெண்ணம் உருவாக்கியதுதான் சத்துணவுத்திட்டம்.

இந்தத் திட்டத்தினால் 63 லட்சம் மாணவர்கள், உதவித் தொகை பெறும் முதியோர் 2 லட்சம் பேர் பயனடைந்தனர். இதனால் சுமார் இரண்டு லட்சம் பேர் வேலை வாய்ப்பு பெற்றனர். அவர்களில் 38 ஆயிரம் பேர் விதவைகள், ஆதரவற்றவர்கள். 37 ஆயிரம் பேர் ஆதிதிராவிடர்கள் என்று அழைக்கப்படும் தாழ்த்தப்பட்டவர்கள். ஒரு லட்சத்து 78 ஆயிரம் பேர் அவர்களில் பெண்கள்.

குழந்தைகளுக்கும், கிராமப்புறங்களில் பணியாற்றும் ஏழைத் தாய்மார்களுக்கும் இலவசக் காலணிகள் வழங்கும் திட்டத்தால்

பயனடைந்தோர் எத்தனையோ லட்சம் பேர்! இதற்கு 30 கோடி ரூபாய் செலவு.

ஏழை மாணவ மாணவியருக்கு ஆண்டுதோறும் இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுவதற்கு ரூ. 13 கோடி செலவு. இதனால் பயனடைந்தோர் 70 லட்சம் பேர். மாணவ மாணவி யருக்குச் சீருடை வழங்கும் திட்டம்.

ஆதரவற்ற முதியோர் அனைவருக்கும் மாதந்தோறும் முப்பந் தைந்து ரூபாய் உதவித்தொகையும், ஆண்டுதோறும் இருமுறை வேட்டி சேலையுடன் சத்துணவும் வழங்கப்படுகின்ற திட்டம்!

'வயிற்றுக்குச் சோறிட வேண்டும். இங்கு வாழும் மனிதருக் கெல்லாம்' என்ற பாரதியின் கனவை நனவாக்கிய கருணையின் வடிவம் எம்.ஜி.ஆர்.

"அன்று பசியால் வாடிய போது பக்கத்து வீட்டிலிருந்த அந்தத் தாய், எங்கள் அன்னையிடம் அரிசி வழங்கியிராவிட்டால் நாங்கள் உயிரோடு இருந்திருப்போம் என்று எப்படி நிச்சயமாகச் சொல்ல முடியும்."



அடிக்கடி மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். மனம் உருகச் சொல்லும் வார்த்தைகள் இவை.

பசி வந்திடப் பற்றும் பறந்து விடும் என்கின்றபோது, படிப்பு பறக்காமல் நிலைத்து நிற்குமா?

குழந்தைப் பருவத்தில், இளமையில் வறுமையின் கோரப்பிடி யில் வாட்டமுற்ற நிலைமையை நினைத்து, இனி தான் வளமாக இருக்க வேண்டும், தன் சுற்றமும், நட்பும் சுகமாக வாழ வேண்டும் என்கின்ற எண்ணம்தான் சாதாரணமாக எல்லோருக்கும் எழும்.

தன்னைப்பற்றி மட்டுமே தன்னல நோக்கில் எதையும் சிந்திக் காமல், 'சுற்றமும் சொந்தமும் மக்கள்தான்' என்று கருதி, அவர்கள் வாட்டத்தைப் போக்குவதில் நாட்டம் கொண்டதால்தான் எம்.ஜி.ஆர். மக்கள் திலகமானார்.

மக்கள் அவர் உள்ளத்தைப் புரிந்து கொண்டு, தங்கள் இதயத் தில் இருக்க வேண்டிய இனிய தலைவர் அவர்தான் என்று ஏற்றுக்கொண்டு, தங்கள் (மக்கள்) சக்தியினால் ஆட்சி பீடத்தில் முதல்வராக ஆக்கினார்கள்.

முதலமைச்சரான எம்.ஜி.ஆர்., தாய் உள்ளத்தோடு குழந்தைப் பருவத்தில் எந்தக் குழந்தையும் பட்டினியால் துன்பப்படக்கூ டாது என்று சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். கல்விக் கண் திறந்து அறிவு ஒளி பெற வழி வகுத்தார்.

எம்.ஜி.ஆர். உள்ளத்தில் - தனது வாழ்வில் தன் தாயும், தாங்களும் சந்தித்த துன்பம் எவருக்கும் வரக் கூடாது என்கின்ற எண்ணம் ஆழமாக இருந்தது என்பதை அவர் இயக்கி, நடித்து, தயாரித்த 'நாடோடி மன்னன்' படத்தின் உரையாடலில் காண லாம்.

நாடோடி வீராங்கன், மன்னன் மார்த்தாண்டனாக முடிசூட் டிக் கொண்டதும் முதல் அறிவிப்பே நம் சிந்தனையைத் தூண்டு வதாகும்.

> "மற்றவர்கள் பின்பற்றுவதற்காக, முதலில் நானே செய்து காண்பிக்க விரும்புகிறேன். வேலை செய்ய முடியாத வயோதிகர்களுக்காகவும், கூன், குருடு, முடம்

> போன்றவர்களுக்காகவும்; வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கத் தொழில் நிலையங்கள் அமைப்பதற்காகவும், பள்ளிகள் கட்டுவதற்காகவும் என் சொந்தச் சொத்தில் பாதியை வழங்குகிறேன்.
>
> முன்பு இருந்தவர் நேற்று இல்லை. நேற்று இருந்தவர் இன்று இல்லை. இன்று இருப்பவர்... நாளை...? ஹூ...ம் இருக்கும் நேரம் கொஞ்சமாக இருந்தாலும் ஏழைகளுக்கு ஏதாவது செய்வதுதான் என் முதல் வேலை."

*இன்னொரு காட்சியில், அதிகாரத்தை நாடோடியான வீராங்கன் கையில் கொடுப்பதே ஆபத்து என்று கூறுபவர்களுக்கு அவர் மறுமொழியாகச் சொல்லும் வார்த்தைகள் கல்வெட்டுகளாக வடிக்கத்தக்கவை!*

> "நீங்கள் மாளிகையிலிருந்து மக்களைப் பார்க்கிறவர்கள். நான் மக்களோடு இருந்து மாளிகையைக் கவனிக்கிறவன். பெரிய இடத்தின் உள்ளே புகுந்து என் உலகம் மாறியிருக்கிறது. என் உள்ளம் மாறவில்லை. கொஞ்ச நாட்களே பதவியில் இருந்தாலும் மக்களின் குறைகளைத் தீர்ப்பவனே அறிவாளி."

*அரச அவையில் சில திட்டங்களை மன்னனாக இருந்து, நாடோடி வீராங்கன் அறிவிக்கின்றான். அதில் மாதிரிக்கு இரண்டு... இதோ-*

> "ஐந்து வயது ஆனவுடனேயே குழந்தைகளைக் கட்டாயமாகப் பள்ளியில் சேர்த்து விடவேண்டும். தவறினால் பெற்றோருக்குத் தண்டனை உண்டு.
>
> பள்ளிப்படிப்பு முடிந்து தொழிலில் ஈடுபடும் வரையில் மாணவர்களைப் பராமரிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது."

*மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நாளைய உலகை உருவாக்கும் நல்ல குழந்தைச் செல்வங்களை எப்படியெல்லாம் வளர்த்து நாட்டுக்கு*



நன்னெறி காட்டுபவர்களாக ஆக்க வேண்டும் என்று விரும்பினார் என்பதற்கு இது போல் பல சான்றுகளைக் காட்டமுடியும்.

அன்னை தெரசாவும், அகில உலகமும் வியந்து பாராட்டியது, சத்துணவுத் திட்டம் போன்ற பல சமுதாயத் தொலைநோக்குத் திட்டங்களைத் தந்த மனிதரில் மாமணியாக விளங்கிய பாரத ரத்னா எம்.ஜி.ஆரைத்தான்.

தன்னைப்பற்றி ஒரு சமயம் அவரே கூறிய கருத்து இது-

> "என்னை எதிரியாக நினைக்க வேண்டும் என்ற கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டவர்கள் கூட, என்னை நேரில் சந்திக்கும்போது அன்போடு பேசுவதற்குக் காரணமே- அவர்களது ஒலிகளையும், எதிரொலிகளையும் நான் என்றும் தடுக்க முயலாதவன் என்பதோடு, அத்தகைய எண்ணத்திற்கும், எனக்கும் வெகுதூரம் என்பதனாலும்தான்.

ஜனநாயகத்தின் அடிப்படையே சிந்திப்பதும், பேசுவதும், எழுதுவதும் ஆகும். ஆனால், ஜனநாயகத்திற்கு ஆபத்து ஏற்படுவதற்கு சிந்திக்கவும், பேசவும், எழுதவும் உள்ள உரிமையைப் பயன்படுத்த அதே ஜனநாயகம் அனும திக்க முடியாது.

நாம் இந்த இரண்டு உண்மைகளையும் புரிந்து அரசி யலை, வாழ்க்கையை நடத்துகிறோம்.

மக்கள் முன் பேச விரும்புகிறவர்கள் பேசட்டும். மக்கள் ஏற்றுக் கொண்டார்களாயின் அதைத் தடுக்கும் சக்தி, யாருக்கும் இந்த உலகில் கிடையாது.

வதந்தி எந்த நேரத்திலும் பரப்பக்கூடாத ஒரு ஆபத் தான, பயங்கர விஷவாயு ஆகும் என்பதை மட்டும் நாம் நன்கு அறிவோம்.

பிறருக்குச் சொல்லுமுன் முதலில் என்னையே பல முறை அந்தக் கேள்விக்கு பதிலளிக்கும் கட்டாயத் திற்கு உட்படுத்தி, தக்க பதிலைப்பெற்ற பிறகுதான் வெளியிடுகிறேன்.

ஒரு கட்சியின் தலைவன் என்று வேண்டாம். ஒரு சராசரி மனிதனாக எண்ணிப் பார்த்தே எந்த முடிவிற்கும் வரு கிறேன்.

சராசரி மனிதனின் எண்ணங்களையும், அவன் தேவை களின் வற்புறுத்தலையும், அவன் உள்ளத்தின் உரிமை ஒலியையும் எதிரொலிக்காத எவனும் ஒரு அரசியல் கட்சிக்குச் சொந்தம் கொண்டாடத் தகுதியோ, உரி மையோ கிடையாது.

எந்தக் கோணத்திலிருந்து என்னைப்பற்றி விமர்சிப்பவர் கள் ஆயினும், அவர்கள் அனைவருக்கும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

உண்மையின் அடிப்படையில் விமர்சியுங்கள்.




முடிவில் உண்மைதான் நிலைக்கும் என்பதை மனதிற் கொண்டு விமர்சியுங்கள்."

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். கூறிய மணி வாசகங்கள் இவை!

'தன்னை உணர்ந்தவன் தரணி ஆள்வான்' என்பதற்கு உதாரணமாக, இந்தத் தமிழகத்தை ஆண்ட முதலமைச்சர் அவர்!

ஆமாம். அவர்தான் பாரத ரத்னா எம்.ஜி.ஆர்.!





## பண்புள்ள 'அண்ணா' நால்வர்!
## ராதா அண்ணன் ஒருவர்!

"அவர் தந்த வாழ்க்கைங்க இது. அவர் எங்களைக் கிணற்றில் விழச் சொன்னாலும் விழத் தயாராக இருக்கிறோம். அவர் இங்கேயே வந்து எங்ககூட எவ்வளவுநாள் வேண்டுமானாலும் இருக்கலாம்... எங்களோடயே அவர் இருந்துட்டார்னா... ரொம்பவும் பெருமையாகவும், சந்தோஷமாகவும் இருக்கும்."

இப்படியெல்லாம் தன் அருமைத் தம்பியைப்பற்றி செவிகுளிர, இதயம் மகிழ்ச்சியால் பூரிக்கப் பலர் சொல்வதைக் கேட்டு, ஆனந்தக் கண்ணீர்விட்ட உடன்பிறவா அண்ணன் ஒருவர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆருக்கு இருந்தார்.

அவருடைய தந்தைதான் ஆசானாகவும், அன்னையாகவும் இருந்து அன்பைப் பொழிந்து, தர்ம தேவன் எம்.ஜி.ஆர். வளர்ச்சிக்கு ஆரம்பகாலத்தில் ஆதாரமாக இருந்தார்.

"ராமச்சந்திரன் சாதாரணமாக இப்போது இருக்கிறான் என்பதை வைத்து எந்த முடிவுக்கும் வந்துவிடாதே. ராமுவுக்கு மிகவும் பிரகாசமான எதிர்காலம் இருக்கின்றது. அவன் ஒரு காலத்தில் ரொம்பப் பிரமாதமாக வரப்போகிறான் பார்."

இப்படித் தான் பெற்ற அருமை மகனிடம், வளர்ப்புப் பிள்ளையைப்பற்றி தீர்க்க தரிசனத்துடன் கூறியவர், நாடகப் பேராசிரியர் எம். கந்தசாமி முதலியார். மலர்ந்த பின்பு அதன் மகத்துவம் பற்றிக் கூறவில்லை. அரும்பும்போதே அதன் மணத்தைப்பற்றித் தெளிவாகக் கூறினார் அந்த மாமேதை! அவருடைய ஒரே பிள்ளைதான் குணச்சித்திரப் பெருநடிகர் எம்.கே. ராதா.

'பண்புள்ள குகனோடு ஐவரானோம்' என்று ராமாயணத்தில் ஆரண்ய காண்டத்தில் அயோத்தி ராமன் கூறுவான்.

அதைப்போல -

தமிழகத்தை அரசாண்டு, மக்கள் இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் தர்மதேவன் நம் ராமனும் அடிக்கடி கூறுவார்...

> "என்னைப் பெற்ற அன்னை, பெரும் செல்வமாக எனக்கு ஒரு அண்ணனைத் தந்தார்கள். கலைத்தாய் எனக்கு இரண்டு அண்ணன்களைத் தந்தார்கள். ராதா அண்ணனும், கலைவாணரும்தான் அந்த இருவர். அரசியல் – அறிவுச் செல்வமான பேரறிஞர் அண்ணாவை எனக்குப் பெரும் சொத்தாக, வழிகாட்டியாக, இணையற்ற தலைவராக, எல்லாமுமாக ஒரு அண்ணனைத் தந்தது. ஒரே தாய் வயிற்றில் பிறந்தால்தான் பாசம் இருக்கும் என்பது இல்லை."

மக்கள் திலகத்தின் மணிமொழிகள் இவை.



பதவியும், செல்வமும், புகழும் வரும் வரையில் உதவி செய்தவர்களையும், உறுதுணையாக இருந்தவர்களையும் மறக்காத பண்பு சிலரிடம் இருக்கத்தான் செய்கின்றது.

ஆனால்...

செல்வம் குவிந்து, செல்வாக்குப் பெருகி, பதவி தேடி வந்த பின்பு -

'அண்ணன் என்னடா, தம்பி என்னடா அவசரமான உலகத்திலே' என்று எல்லாவற்றையும் மறந்து, தன்னைப் பற்றியே நினைப்பதுதான் பெரும்பாலானவர்களிடம் தென்படும் குணம்.

அவர்களுக்கெல்லாம் மாறுபட்டு, உயர்ந்த பண்பாளராக எம்.ஜி.ஆர். விளங்கினார் என்பதற்கு எத்தனையோ சம்பவங்களை அடுக்கிக் கொண்டே செல்லலாம். அவைகள் அத்தனைக்கும் மகுடமாக ஒரு நிகழ்ச்சி... நெஞ்சில் நெகிழ்ச்சி ஏற்படுத்தக் கூடியது... இதோ...

தம்பியைப்பற்றிப் புகழ்ச்சியாக யாரும் கூறுவதைக் கேட்டாலே ஒரு தாய்போல் கண்களில் நீர்தளும்பக் களிப்படையும், அண்ணன் எம்.கே. ராதாவுக்கு அந்த அருமைத் தம்பி முதலமைச்சராகிவிட்டார் என்கின்ற செய்தி எத்தகைய இன்பத்தைத் தந்திருக்கும் என்பதை வார்த்தைகளால் சித்தரித்துக் காட்டமுடியுமா?

உடனே ராமாவரம் தோட்டத்திற்குச் சென்று, தம்பி எம்.ஜி.ஆரை வாரியணைத்து, முத்தங்களைச் சொரிய வேண்டுமென்று வாஞ்சை மிக கொண்ட அந்த இதயம் துடியாய்த் துடித்தது.

தம்பி முதல்வராய்ப் பதவியேற்கும் காட்சியைக் காணக் கண்கள் தவித்தன.

உடல்நிலையும், அப்போதைய பரபரப்பான சூழ்நிலையில் தான் நேரில் சென்று தொல்லை தரவேண்டாம் என்கின்ற உண்மையான பாசமும், குடும்பத்தினரின் வற்புறுத்தலும் வீட்டிலேயே அவரைக் கட்டிப்போட்டன.

இல்லத்தில் உடல் இருந்தாலும், ராதா அண்ணனின் இதயம் இறக்கை முளைத்துப் பறந்து சென்று, தம்பியை ஆலிங்கனம் செய்து நல்வாழ்த்துக் கூறிவிட்டது. பாசமும், பண்பும் குடி கொண்ட பெருந்தகை அவர்!

மறுநாள் காலையில் - சென்னையில்,

ஜிம்மி பில்டிங் அருகில் உள்ள அவர் வீட்டின் முன்னால் காவல் துறையினரின் கார் ஒன்று வந்து நின்றது.

அதிகாரி ஒருவர், மாடியில் இருந்த ராதா அண்ணனிடம் சென்று வணக்கம் தெரிவித்தார்.

ராதா அண்ணன் வியப்போடு அவருக்கு வணக்கம் தெரிவித்து விட்டுப் பார்த்தார். இதற்குள் குடும்பத்தினர் அனைவரும் வந்து எட்டிப் பார்த்தனர்.

"முதலமைச்சர் உங்களைப் பார்ப்பதற்காக இங்கு வருகிறார். முன்பே செய்தி தெரிவிக்கும்படிக் கூறினார். இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடுவார். உங்களுக்கு உடல்நிலை சரியில்லாத தால் நீங்கள் மாடியிலேயே இருக்கும்படி சொல்லச் சொன்னார்."

வந்த அதிகாரி ஒரு இன்ப அதிர்ச்சியை ராதா அண்ணனுக்கு உண்டாக்கினார். இதய நோயாளியாக, பலவீனமான நிலையில் இருந்த அண்ணனுக்கு, இப்படி ஒரு இனிப்பான செய்தியைக் கேட்டுக்கொண்டு சாய்வு நாற்காலியில் ஓய்வாக அமர்ந்திருக்க இயலுமா?

மாடியில் கிழக்குப் பார்த்தார்ப்போல் உள்ள முன்கூடத்தின் ஒரு பாதியில் பூஜை அறை. அதனை ஒட்டிய வாசலைக் கடந்து சென்றால் வரவேற்பு அறை. அங்கேதான் ராதா அண்ணன் அமர்ந்திருப்பார். அவரோடு உள்ளன்போடு நெருங்கிப் பழகுப வர்களைக் கண்டால் கட்டியணைத்துக் கொள்வார். களங்கமில் லாத வெள்ளை உள்ளத்தோடு சிறு பிள்ளைபோல் கையைப் பிடித்து அழைத்துச் சென்று, பூஜை அறையில் அமரச் செய்வார். பிரார்த்தனை செய்து, விபூதி பிரசாதம் கொடுத்து வாழ்த்திவிட் டுத்தான் உள்ளே அழைத்துச் செல்வார்.

ஒரு குழந்தையைக் கொஞ்சுவதைப்போல், "என் கண்ணு... தங்கக்கட்டி..." என்று அன்பைப் பொழிவார். இது என் அனுபவம்; நான் பெற்ற பெறும் பேறு.

இந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் சாதாரணப் பழக்கமேற்பட்ட ஒருவனுக்கே இத்தகைய கனிவான இதய தரிசனம் கிட்டியதென்றால்....



## அண்ணனைக் காணத் தேடிவந்த நம் மன்னன்

சிறு வயது முதல் ஒரே இலையில் சாப்பிட்டு, ஒரே பாயில் படுத்துறங்கிய இருவரும் சந்திப்பது, முதல்வராய்த் தம்பியை அண்ணன் வரவேற்பது, காவிரியும் கங்கையும் சங்கமமாவதைப் போன்ற உன்னதக் காட்சியல்லவா!

தம்பியைக் காணப்போகின்றோம் என்கிற ஆவலில், படிகளில் அவர் பாய்ந்து இறங்கினார். பிள்ளைகளால் அப்பாவைக் கட்டுப் படுத்த இயலவில்லை. எந்தக் கட்டுக்கும் அடங்காத காளைபோல அல்லவா, பள்ளத்தில் பாயும் வெள்ளம்போல அவர் ஓடிக் கொண்டிருந்தார். அவர்கள் அதிசயமாக அவரையே இமையாமல் நோக்கிக் கொண்டிருந்தனர்.

ராதா அண்ணன், தன் தம்பி முதலமைச்சர் எம்.ஜி.ஆர். வரும் வரையில் வீட்டிற்கு முன்புறமிருந்த தோட்டத்தில் குறுக்கும் நெடுக்குமாக உலவிக் கொண்டிருந்தார். வெளிக்கதவு அருகில் நின்று பார்ப்பதும், பின்பு பரபரப்புடன் நடப்பதுமாக இருந்தார்.

திடீரென்று –

காவல் துறையினரின் பாதுகாப்பு ஜீப், ஒலி எழுப்பியபடி வீட்டின் முன்னால் வந்து நின்றது. அதனைத் தொடர்ந்து நீலநிற 4777 அம்பாசிடர் கார் வந்து நின்றது.

இந்த ராமன், காருக்கு நீல நிறத்தைத் தந்துவிட்டு, அங்கத்தால் தங்கத்திற்கு நிறத்தைத் தந்து கொண்டிருந்தார்.

காரிலிருந்து இளம் மான் ஒன்று துள்ளி வந்ததுபோல் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். உள்ளே நுழைய முயன்றார்.

"தம்பி...." வாசலிலேயே இமையாமல் நோக்கிக் கொண்டிருந்த ராதா அண்ணன், மக்கள் திலகத்தை ஓடிவந்து ஆரத்தழுவிக் கொண்டார்.

இதயங்களின் சங்கமத்தில் இமைகள் நனைந்தன. ஈருடலும் ஒருடல்போல் இணைந்தன.

சில மணித்துளிகள் மௌனமாயின.

"உடம்பு சரியில்லாமல் இருக்கின்ற நீங்கள், என்னை வரவேற்பதற்காக மாடிப்படிகளில் கீழே இறங்கி வரவேண்டுமா? நீங்கள் மாடியிலேயே இருந்தால் நான் மேலே வந்து உங்களைப் பார்க்க மாட்டேனா? அதனால்தான் முதலிலேயே சொல்லியனுப்பினேன். சொல்வதைக் கேட்க மாட்டீர்கள்..." கண்டிப்போடும், பரிவோடும் அண்ணனைக் கடிந்து கொள்கிறார் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.

"இல்லை... தம்பி...! நீ வருவதாகக் கேட்டவுடனேயே என்னையறியாமலே கீழே ஓடி வந்துவிட்டேன். என்னுடைய தம்பி முதலமைச்சராகி, முதன்முதலாக இந்த அண்ணனை மறவாமல் பார்க்க வீடு தேடிவரும்போது, மாடியில் உட்கார்ந்திருக்க மனம் இடம் கொடுக்குமா தம்பி! இப்படி உன்னைப் பார்த்து வரவேற்க தெய்வம் எனக்கு ஆயுளைக் கொடுத்ததே, இதுவே... போதும்! இந்தக் கோலத்தில் உன்னை என் தந்தையும், உன்னுடைய தாயும் பார்க்கவில்லையே என்கின்ற எண்ணம்தான் இப்போது எழுகிறது" ராதா அண்ணன் தழுதழுத்த குரலில் கூறினார்.

"அவர்கள் இருவருடைய இதயங்களோடு நீங்கள் இருவரும் எனக்கு (பெரியவர் எம்.ஜி. சக்ரபாணி, எம்.கே. ராதா) இருக்கிறீர்

களே!" என்று அண்ணனுக்கு ஆறுதலாக வார்த்தைகளை எம்.ஜி.ஆர். கூறினாலும், அவர்கள் இல்லையே என்கின்ற ஆதங்கம் இருக்கத்தான் செய்கின்றது. கலங்காத இதயத்துக்கு உரியவரின் கண்களிலும் கண்ணீர் அருவியாக உருவாகிறது.

அண்ணன் எம்.கே. ராதாவை அணைத்தபடி, முதல்வர் எம்.ஜி.ஆர். மாடிக்கு மெல்ல அழைத்துச் செல்கிறார்.

வீட்டிற்குள் நுழைந்ததும் பூஜை அறையில் தம்பியை அழைத்துச் சென்று நிற்கவைத்து, பயபக்தியுடன் வேண்டிக் கொள்கிறார். தம்பியின் நெற்றியில் திலகமிடுகிறார் ராதா அண்ணன்.

"அண்ணே... அப்படியே நில்லுங்கள்" எம்.ஜி.ஆர். அன்போடு கேட்டுக் கொள்கிறார். திடீரென்று யாரும் எதிர்பாராத வகையில் நாடாளும் முதலமைச்சர், மக்கள் திலகம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தனது உடன்பிறவா அண்ணன் எம்.கே. ராதா கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்து கும்பிடுகின்றார்.

ஒரு கணம் ராதா அண்ணன் உடல் சிலிர்க்கின்றது. அவரது குடும்பத்தினர் ஆச்சரியத்தோடு, எளியார்க்கு எளிய ஏந்தலை விழிகளால் வாழ்த்துகின்றனர்.

"தம்பி..." ராதா அண்ணன் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் குனிந்து முதல்வர் எம்.ஜி.ஆரைத் தூக்கி, மீண்டும் அணைத்துக் கொள்கிறார்.

'செம்புலப் பெயல் நீர்போல்' அன்புடைய நெஞ்சங்கள் கலக்கின்றன.

இருவரும் தங்கள் உணர்ச்சிகளை ஆளுகைக்குக் கொண்டு வந்து, ஆசுவாசப்படுத்திக் கொண்டு உள்ளே செல்கின்றனர்.

அண்ணன் குடும்பத்தினர் ஒவ்வொருவரையும் பாசத்தோடு அழைத்து, நலம் வினவுகின்றார். பால் வருகிறது. பருகுகிறார். குடும்பத்தினரோடு புகைப்படம் எடுத்துக்கொண்டு பிரியாவிடை பெற்று புறப்படுகின்றார். மாடிப்படிகளில் தன்னைத் தொடர்ந்து இறங்கி, வழியனுப்ப வருவதாகக் கூறும் அண்ணனைக் கண்டித்து நாற்காலியில் உட்கார வைக்கிறார். கண்களில் இதயத்தின் நிறைவு தென்படப் படிகளில் வேகமாக இறங்கிச் செல்கிறார்.

இந்தச் சம்பவத்திற்குப் பின்பு நான், ராதா அண்ணன் இல்லத் திற்குச் சென்றிருந்தேன். நடந்ததையெல்லாம் அறிவேன் என்றா லும் அவர் கூறியதைக் கேட்கும்போது, தாய்ப்பசு தன் கன்றினை நாவால் வருடுவதுபோல் தனியாக ஒரு சுகம்.

எல்லாவற்றையும் சொல்லிவிட்டு, முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தன் குடும்பத்தினருடன் எடுத்துக் கொண்ட படத்தைக் காண்பித்து விட்டு,

"இன்னொரு படம் இருக்கிறது. அதைப் பார்த்துவிட்டுக் கொடுத்துவிட வேண்டும். இப்படி ஒரு படம் இருக்கிறது என்பதே யாருக்கும் தெரியக்கூடாது" என்றார் விடுகதை போடுவதைப் போல ராதா அண்ணன்!

எனக்கு ஒன்றும் புரியவில்லை. அப்படியென்ன ரகசியமான படம் என்று ஆவலோடு நோக்கினேன்.

அவர் அடுத்து காண்பித்த படத்தில், முதலமைச்சர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., தன் அண்ணன் எம்.கே. ராதா காலில் விழுந்து வணங்கிய காட்சி இருந்தது.

"இப்படி ஒரு படம் எடுக்கலாமா தம்பி! எனக்குத் தெரியா மலே படம் எடுக்கிற புள்ளே, இதையும் எடுத்திருக்கு!" என்று உள்ளபடியே வருத்தத்துடன் ராதா அண்ணன் கூறினார்.

"இதிலென்ன தவறு? இதைப் பார்த்தால் அவர் பண்பும், மதிப்பும், உங்கள் அன்பும் எல்லோருக்கும் தெரியும். அண்ண னைத் தம்பி வணங்குவதில் என்ன தவறு? இதனால அவருக்குக் குறைவு வந்துவிடாது!" என்றேன்.

"அந்தத் தம்பியும் அப்படித்தான் சொல்லிச்சு...! நீங்க என்ன தான் சமாதானம் சொன்னாலும் இது சரியென்று எனக்குப் படவில்லை. நான் மட்டும் என் தம்பியின் உயர்ந்த உள்ளத்தைப் பார்த்துப் பூரிக்க, இதைப் பொக்கிஷம் போல் பாதுகாத்திருப் பேன்". அவர் வார்த்தைகளில் அவருடைய உன்னதமான உள்ளத் தையும், மக்கள் திலகம் மீது சிறுதூசுகூட விழக்கூடாது என்பதில் இருந்த கவனத்தையும் கண்டுகொள்ள முடிந்தது. அந்தப் படத்



அன்னை

ஆசான்



எம். கந்தசாமி முதலியார்



தைக் கொடுத்தால் பத்திரிகையில் வெளியிட்டுவிடுவேன் என்று கடைசிவரை மறுத்துவிட்டார்.

இந்த உலகத்தில் இப்படியும் ஒரு அபூர்வமான மனிதரா என்று அயர்ந்து போனேன். அவர் ஒரு அற்புதமான கலைஞராக இருந்து, மக்கள் திலகம் எம்.ஜி.ஆரைப் பற்றிக் கூறிய கருத்துக்கள் இருவருமே கலைத்திறமையில் இமயத்தையும் விஞ்சிய மேதைகள் என்பதைப் புரிந்து கொள்ளச் செய்கின்றன!

ஒரு மேதையை இன்னொரு மேதையினால்தான் இனம் கண்டுகொள்ள முடியும் என்கின்ற உண்மைக்கு உதாரணம் அவர்கள் இருவரும்!

"தம்பி நடித்துள்ள வேடங்களில் அவரைப்போல் யாரும் நடிக்கவே முடியாது. அவருடைய பாணியே தனி. அதற்குக் கிடைத்த மகத்தான பரிசுதான் மக்கள் ஆதரவு. அவர் நடித்த படங்கள் யாவுமே என்றைக்கும் வெற்றிப்படங்கள்தான். சண்டைக் காட்சிகளைப் பற்றிப் பேசினால், அந்த மூன்று எழுத்துக்கள்தான் (எம்.ஜி.ஆர்.) முன்னால் வரும். அவர் பெயருக்கும், வாழ்விற்கும் எத்தனையோ பொருத்தங்கள். ஜானகி ராமச்சந்திரன் மனைவியாக அமைந்தது எவ்வளவு பொருத்தம்" எம்.கே. ராதா அண்ணன் இவ்வாறு கூறிவிட்டு, முதன்முதலாக மக்கள் திலகம் எம்.ஜி.ஆரை சந்தித்த காட்சியை விவரித்தார்.

"இவன்களெல்லாம்... வெற்றிலைப் பாக்குக்கடை வைக்கத்தான் லாயக்கு..! வேறு என்ன தெரியும்? என்று நினைத்தார்கள். மிகவும் கேவலமாகப் பேசினார்கள். எவ்வளவோ அடியும், உதையும் பட்டு நடிகர்களாக வாழ்ந்தோம். மிகவும் சிரமப்பட்டு படிப்படியாக வளர்ந்தோம். நடிப்புத் தொழில் செய்பவர்களுக்கு என்ன தெரியும் என்றவர்களுக்குப் பதிலாகத்தான் தம்பி எம்.ஜி.ஆர். நாடாள்கிறார். நாடகத்தில் சிம்மாசனத்தில் ராஜா வேடத்தில் நடித்த எங்களுக்கு, மந்திரியாக இருந்து ஆட்சி புரியவும் முடியும் என்று தம்பி நிரூபித்திருக்கிறார். சத்தியவதி வயிற்றில் பிறந்த சத்தியம் நாட்டை அரசாளுகின்றது." குணச்சித்திர நடிகர் எம்.கே. ராதா அப்போது பூரிப்போடு கூறிய வார்த்தைகள் இவை.

சென்னை ஒற்றைவாடைத் தியேட்டரில் ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியின் நாடகங்கள் நடந்து கொண்டிருந்தன. கம்பெனியின் உரிமையாளர் சச்சிதானந்தம் பிள்ளை. நாடகங்களை எழுதி, இயக்குபவர் எம். கந்தசாமி முதலியார். ஆறு மாதங்களுக்கு மேல் அந்தக் காலத்தில் ஒற்றைவாடைத் தியேட்டரில், மற்ற நாடகக் கம்பெனிகள் நாடகம் நடத்துவதே அரிது. ஆனால் ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியினர், அங்கு மூன்றரை ஆண்டுகள் தொடர்ந்து நாடகங்கள் நடத்தியதிலிருந்தே, மக்களின் பேராதரவைப் பெற்றிருந்தவர்கள் என்று புரிந்து கொள்ளலாம்.

புராண நாடகங்களே அதிகமாக நடந்து கொண்டிருந்த சமயத்தில், சமூக நாடகங்களைத் துணிந்து அரங்கேறச் செய்தவர் எம். கந்தசாமி முதலியார். அது மட்டுமல்ல, பகல் காட்சியாகவும் முதன்முதலில் நாடகம் நடத்தி வெற்றி கண்டார். பி.ஏ. பட்டதாரியான அவருக்கு அச்சுக்கலை, விளம்பரம் செய்வது ஆகியவைகள் நன்கு தெரியும். நாடகத்தில் அவருக்கு ஆர்வம் பெருக, அவர் படித்த கல்லூரி பிரின்ஸ்பால் முல்லர் என்பவர்தான் காரணம்.



கம்பெனியில் உள்ளவர்கள் அனைவரையும் தன்னுடைய பிள்ளைகளாகவே கருதும், பெருங்குணம் கொண்டவர் கந்தசாமி முதலியார்.

ஏ.என். கன்னையா பாகவதர்தான், அங்கு நடிப்பவர்களுக்கு பாடல்களைக் கற்றுக் கொடுப்பார். அவர்தான் அரங்கு நிர்வாகி. நாட்டியம் கற்றுக் கொடுப்பதற்கும், உடற்பயிற்சிக்கும் தனித்தனியே ஒவ்வொருவர் இருந்தனர்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆரையும் சக்ரபாணியையும் - காளி என். ரத்தினம் கவனித்துக் கொண்டார்.

சின்னஞ்சிறு வயதில் சத்தியவதித்தாய், தன் கண்களைப் போன்ற இரு பிள்ளைகளையும் நாடகப் பேராசிரியர் எம். கந்தசாமி முதலியார் கைகளில் பிடித்துக் கொடுத்தார். அவர் கண்களில் கண்ணீர் அருவிகள்!

"கவலைப்படாதீங்கம்மா... நிச்சயமா எதிர்காலம் இவர்களுக்கு நல்ல காலமாகவே வரும். எனக்கு இதுவரை ஒரு பிள்ளைதான். இப்போது உங்கள் பிள்ளைகள் இருவரையும் சேர்த்து எனக்கு மூன்று பிள்ளைகள்", என்று கூறிய எம்.கே. ராதாவின் தந்தையின் வாஞ்சை மிகுந்த சொற்கள், அந்தத் தாய்க்கு அதிக ஆறுதலைத் தந்தன.

இப்படித்தான் எம்.கே. ராதா, எம்.ஜி.ஆர்., எம்.ஜி. சக்ரபாணி ஆகியோர் முதன்முதலில் அறிமுகமானார்கள்.

நாடக ஆசிரியர் என்கிற முறையில், நடிப்பவர் அனைவருமே கந்தசாமி முதலியாரிடத்தில் அதிக பற்று கொண்டிருந்தனர். ஆனால் எம்.கே. ராதாவுக்கு மட்டும் எம்.ஜி.ஆரிடமும், சக்ரபாணியிடமும் தனியாக, தணியாத ஒருவித பாசம். எங்கு பார்த்தாலும் அவர்கள் மூன்று பேரும் ஒன்றாகத்தான் இருப்பார்கள். தந்தையுடன் செல்லும்போதோ, தனியாக வெளியே சென்றாலோ எம்.கே. ராதா மறக்காமல் இனிப்புப் பலகாரம் வாங்கி, தன்னுடைய சூட்கேஸில் திருட்டுத்தனமாக மறைத்து வைத்துக் கொண்டு வருவார். ரகசியமாக எம்.ஜி.ஆருக்கும், சக்ரபாணிக்கும் கொடுத்துச் சாப்பிடச் சொல்வார்.

இது எப்படியோ மற்றவர்கள் கண்களில் பட்டு, அவர்கள் ஆற்றாமையோடு பேசியது கந்தசாமி முதலியார் காதுகளுக்கு எட்டியது.

பிள்ளையை அழைத்தார்.

"உனக்கு ராமுவிடமும், சக்ரபாணியிடமும் அதிக அன்பு இருந்தால் தவறில்லை. ஆனால் நம்மீது அன்பும், நம்பிக்கையும் வைத்துள்ள மற்றவர்கள் மனம் வருந்தும்படி இப்படி வெளிப்ப டையாக இருக்கக்கூடாது. எல்லோரிடமும் பிரியமாக இருக்க வேண்டும். சிலர்மீது மட்டும் அதிக ஈடுபாடு உள்ளதுபோல் காண்பித்தால், பிறரை ஒதுக்குவதுபோல தெரியும்" மகனிடம் தந்தை எச்சரிக்கை செய்தார்.

இதன் பின்பு எம்.கே. ராதா மிகவும் கவனமாக இருக்கத் தொடங்கினார். அவருக்கு எம்.ஜி.ஆர். மீதும் சக்ரபாணி மீதும் அதிக பாசம் ஏற்படக் காரணம் உண்டு.

எல்லோருக்கும் அண்ணன், தம்பி, தங்கை என்று உடன்பிறந் தவர்கள் இருக்கும்போது, தான் மட்டும் தன்னந்தனியாக, ஒரே பிள்ளையாக இருக்கிறோமே என ராதா இதற்கு முன் வருந்திய துண்டு. அவர்கள் இருவரும் வந்தபின்பு அவருடைய அந்தக்குறை இல்லாமல் போனது.

யார் தவறு செய்தாலும் உதை விழுவது ராதாவுக்குத்தான். "இவனை அடித்தால்தான் மற்றவர்கள் தங்கள் தவறை உணர்ந்து திருந்துவார்கள்" என்று கந்தசாமி முதலியார் கூறுவார்.

எம்.ஜி.ஆருக்கும், சக்ரபாணிக்கும் ஆரம்பத்தில் சின்னச்சின்ன வேடங்கள்தான் கொடுத்து வந்தனர்.

நன்றாக நடிக்கக் கூடியவர்களுக்கு நல்ல கேரக்டர்களாகக் கொடுக்க முடியவில்லையே என்று தந்தையும் மகனும் வருந்தினர். அவர்கள் திறமை பளிச்சிடும் வகையில் அதன்பின் சமூக நாட கங்களில், நல்ல வேடங்கள் கொடுத்து உற்சாகம் அளித்தவர் கந்தசாமி முதலியார்தான்.

ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியை விட்டு கந்தசாமி முதலியார், தன் மகன் எம்.கே. ராதாவுடன் பிரிந்து சென்றுவிட்டார். ராமா



னுகுல சபாவில் அவர்கள் இருவரும் இணைந்தனர். உறையூர் மெய்தீன் சாய்பு (ஆர்மோனிஸ்ட்) இதன் உரிமையாளர். பர்மா செல்வதற்குத் திட்டமிட்ட அவர்கள், திருச்சி அருகில் தாழக்குடியில் தங்கியிருந்தனர்.

எம்.ஜி.ஆரும் சக்ரபாணியும் ஈரோடில் பாய்ஸ் கம்பெனி நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்தனர்.

'என் பிள்ளை இருக்கும் இடத்திலேயே அந்தப் பிள்ளைகளும் இருக்க வேண்டும்' என்று கந்தசாமி முதலியார் நினைத்தார். ஒவ்வொரு நாளும் அவர்களைப் பற்றியே பேசிக் கொண்டிருப் பார். அப்போது பர்மாவிற்கு ராமானுகுல சபா குழுவினர் நாடகம் நடத்தச் செல்ல இருந்தனர். தங்களுடன் எம்.ஜி.ஆரையும், சக்ரபாணியையும் அழைத்துச் செல்ல வேண்டுமென்று கந்தசாமி முதலியார் விரும்பினார். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் நம்பிக்கையோடு செய்துவிட்டார்.

சத்தியவதி அம்மையாருக்கு பிள்ளைகளை அனுப்பி வைக்கும்படிக் கடிதம் எழுதினார். அவர்களும் அனுப்பி வைப்பதாக பதில் எழுதிவிட்டார்.

இரவு 2 மணிக்கு பிச்சாண்டவர் கோயில் ரயில் நிலையத்திற்கு புகைவண்டி வந்து சேர்ந்தது. கந்தசாமி முதலியாரும், எம்.கே. ராதாவும், இன்னும் இரண்டு பையன்களும் ஸ்டேஷனுக்குச் சென்று படுத்திருந்தனர்.

ரயில் வந்து நின்றதும் ஒவ்வொரு பெட்டியாகச் சென்று அவர்கள் ஆவலோடு பார்த்தனர். இவர்கள் வருவதைக் கண்டதும், எம்.ஜி.ஆரும், சக்ரபாணியும் ஆவலுடன் ஒரு பெட்டியிலிருந்து குதித்து, ஓடோடி வந்து கட்டி அணைத்துக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டனர்.

சத்தியவதி அம்மையார் அந்த நள்ளிரவில் தன் பிள்ளைகளை அனுப்பியதற்கு அழுத்தமான நம்பிக்கைதான் காரணம். உடனே அவர்கள் தாய்க்கு மறக்காமல் தந்தி கொடுத்தனர். அதன்பின்பு நாடகக் குழுவினர் பர்மா சென்றதும், எம்.ஜி.ஆர். அங்குள்ள மக்களைத் தன் நடிப்புத் திறமையினால் கவர்ந்ததும், பாராட்டுப் பெற்றதும் அவர் வாழ்வில் மறக்க முடியாததாகும்.

"எல்லா நாடகங்களிலும் ராமு (எம்.ஜி.ஆர்.) பிரமாதமாகச் செய்யும். அருமையாக நடனமாடும். நாடகம் நடக்கும்போது தனக்குத்தான் வேலையில்லையே என்று எங்காவது சென்றுவிடாமல், மேடையில் ஒரு ஓரமாக நின்று ஒவ்வொருவருடைய நடிப்பையும் கூர்ந்து கவனிக்கும். கேள்வி ஞானமும், பார்த்துப் பார்த்து தன்னை வளர்த்துக் கொள்ளும் தன்மையும் ராமுவுக்கு அதிகம். பெற்ற வெற்றிகள் அனைத்திற்கும் அதனுடைய கடுமையான உழைப்பும், விடாமுயற்சியும், ஊக்கமும், பண்பும்தான் காரணங்களாகின்றன. தாராள மனப்பான்மை, எளியோருக்கு இரங்கும் தன்மை, தாயை தெய்வமாகப் போற்றுவது ஆகியவைகள்தான் அதைக் கவசமாகக் காத்து நிற்கின்றன. மக்கள் எதிர்பார்க்கத் தகுந்த வகையில், தனித்தன்மையுடன் நாட்டுக்குத் தேவையான அரிய கருத்துக்களைக் கூறி உச்சஸ்தானத்தில் இருந்து நடித்து, தம்பி உன்னதமான புகழைப் பெற்றார். நடிக்கும் இனத்திற்கே பெருமை தேடித் தந்துவிட்டார்" என்று எம்.கே. ராதா அண்ணன் அகத்தை திறந்து காண்பித்தது, என் நினைவில் பசுமையாக உள்ளது.

மூத்த தலைமுறையைச் சேர்ந்த ஒரு குணச்சித்திர கலைஞரின் முதிர்ந்த, முத்தான கருத்துக்கள் இவை!

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். பழமைக்கும், புதுமைக்கும் ஆச்சரியம் தரும் அதிசயமாக விளங்கினார். எல்லா தலைமுறையினருக்கும் அவருடைய ஆற்றல் மலைப்பைத் தந்தது. அதனால்தான் 'வாத்தியார்' என்று செல்லமாக அழைத்தனர்.





## கலை - கலைஞர்கள் நிலை?

ஒரு இளைஞன் தினந்தோறும் திரைப்படம் காணச் சென்றான்.

"நாள்தோறும் தொடர்ந்து பார்க்கும்படி அப்படி அந்தப் படத்தில் என்னதான் இருக்கிறது" என்று அவனது நண்பர்கள் கேட்டனர்.

"அந்தப் படத்தை நானும் தினசரி சென்று பார்த்துக் கொண்டு தான் இருக்கிறேன். ஒரு பெரிய அதிசயம்! படத்தில் ரயில் ஒன்று



போகிறது. நானும் ஒரு நாளாவது ரயில் நிற்காதா என்று ஒவ்வொரு நாளும் போய்ப் பார்க்கிறேன். இதுவரை ரயில் நிற்கவே இல்லை" என்று பதில் கூறினான். அந்த அறிவுக் கொழுந்து.

இந்த சின்னக் கதையைச் சொல்லி சிரிக்க வைத்தவர் 'சின்னவர்' மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.தான்!

"சினிமா பார்ப்பவர்கள் பல ரகத்தினர். இந்தக் கதையில் வரும் இளைஞனைப் போன்ற ஒரு சிலர் இப்போதும் இல்லாமலில்லை" என்றார் எம்.ஜி.ஆர்.

சோவியத் திருநாடு சென்று வந்ததும், அவருடைய பார்வையில் பதிந்தவைகளை விவரித்தார். இதன் மூலம் அவர் இதயத்தின் போக்கைப் புரிந்து கொள்ளலாம். கலை உலகில் உள்ளவர்களுக்கு சூசகமாக அவர் சொல்ல விரும்புவதை அறிந்து கொள்ள முடிகிறது!

"யார் பெரியவர்கள், யார் சிறியவர்கள் என்ற ஏற்றத் தாழ்வு கலைஞர்கள் மத்தியில் அங்கு இல்லை. எல்லாரையும் உன்னிப்பாகக் கவனிக்கும் வகையிலும், அக்கறை செலுத்தும் முறையிலும் அங்குள்ள கலைத் துறை உள்ளது. சிறந்த படம் ஒன்றில் அருமையாக நடித்த நடிகை ஒருவரை, அவருடைய குழந்தையோடு ஒரு ஓட்டலில் பார்த்தேன். மிகவும் எளிமையாக, சாதாரணமாக இருந்தார். சோவியத் யூனியனில் விஞ்ஞானிகளுக்கு அடுத்தபடியாகக் கலைஞர்களுக்கு நல்ல மரியாதை, மதிப்பு என்று அங்கு உள்ளவர்கள் கூறினார்கள்.

நான் எக்ஸ்போ–70 கண்காட்சியைக் காணச் சென்றபோது சோவியத் நாட்டின் பெவிலியனுக்குச் சென்றிருந்தேன். அங்கு லெனின் படங்கள் நிறைய இருந்தன. அதற்கு அடுத்தபடியாக சோவியத் கலைஞர்களுடைய படங்கள்தான் இருந்தன. வேறு அரசியல்வாதிகளின் படங்கள் இல்லை. அரசியல்வாதிகள் ஒரு நாட்டுக்குத் தான் சொந்தம். கலைஞர்கள் உலகத்திற்கே சொந்த

மானவர்கள். அதனால்தான் உலகத்திற்கே சொந்த மான கொள்கையைத் தந்த லெனின் படத்தையும், கலைஞர்கள் படங்களையும் அவர்கள் வைத்திருந்தனர். சோவியத்தில் நான் பார்த்தது கோடியில் ஒன்று – கோடியில் ஒரு கோடி என்று இதனைச் சொல்லலாம்!"

உலகத்திற்கே சொந்தமான கலைமாமன்னனாகவும், நாட்டுக் குச் சொந்தமாகி, உலகத்தை வியக்கச் செய்த உத்தமத் தலைவரா கவும் விளங்கிய மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். தெரிவித்த கருத்துக்கள் இவை!



## தங்கை பத்மா சுப்ரமணியம் பெருமை கண்டு பூரிப்பு!

அவர் உருவத்தை காலம் விழுங்கி ஆண்டுகள் மறைந்துவிட் டன.

சோவியத் கலைஞர்கள் கலை நிகழ்ச்சி (14.12.1987) சென்னை யில் நடைபெற்றது. கலைஞர்களை வரவேற்று வாழ்த்திப் பேச வேண்டிய முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்., நாட்டியமணி செல்வி டாக்டர் பத்மா சுப்ரமணியத்தை அருகில் அழைத்தார்.

"நீதான்... சோவியத் கலைஞர்களை வரவேற்றுப் பேசவேண் டும். தயாராக இரு" என்று கூறினார்.

"அரசு சார்பில்... நீங்கள்தான் வாழ்த்திப் பேசவேண்டும். நான்... எப்படி...?" தயங்கினார் டாக்டர் பத்மா சுப்ரமணியம்.

"அரசு சார்பிலும், என் சார்பிலும், தமிழகக் கலைஞர்கள் சார்பிலும் நீதான் பேசவேண்டும்". அவர் குரலில் இருந்த கண்டிப்பு பத்மாவைப் பணிய வைத்தது.

நிகழ்ச்சியில் டாக்டர் பத்மா சுப்ரமணியம், ரஷ்ய மொழியிலேயே உரையாற்றினார். தமிழ்க் கலையைப் பற்றியும், சோவியத் கலைஞர்கள் சிறப்பினைக் குறித்தும் அவர் பேசிய பேச்சு பெரும் வரவேற்பைப் பெற்றது. அவர் பேசிய ஒவ்வொரு வரிக்கும் சோவியத் கலைஞர்களும், பார்வையாளர்களும் கையொலி எழுப்பினர். அதில் தனித்து நின்றது முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆரின் கையொலிதான்!

அவ்வளவு மகிழ்ச்சி - பூரிப்பு - ஆனந்தம்!

தாய் போன்ற தங்கமான குணம் கொண்ட தலைவர் அவர். டைரக்டர் கே. சுப்ரமணியம் அவர்களைத் தனது வாழ்க்கைக்கு வழிகாட்டி போலவும், தந்தை போன்றும் கருதினார் எம்.ஜி.ஆர்.! அவரிடத்தில் அவ்வளவு மதிப்பு - மரியாதை! அவருடைய பிள்ளைகள், பெண்கள் அனைவரையும் தனது சகோதரர்களாகவும், சகோதரிகளாகவும் கருதினார்.

எம்.ஜி.ஆர். உடல்நலம் சரியில்லாமல் போன பிறகு, கடந்த ஆண்டு பழம்பெரும் நடிகையும், டைரக்டர் கே. சுப்ரமணியத்தின்



துணைவியரில் ஒருவருமான எஸ்.டி. சுப்புலெட்சுமி மரணமடைந் தார். உடனே விரைந்து சென்று கடைசி வரை இருந்து அஞ்சலி செலுத்திவிட்டு, அவரது மகன் அபஸ்வரம் ராம்ஜிக்கு ஆறுதல் கூறிவிட்டுத் திரும்பினார். மறுநாளே இடிபோன்ற இன்னொரு தாக்குதல்! டைரக்டர் கே. சுப்ரமணியத்தின் மனைவி மீனாட்சி அம்மாள் இறந்துவிட்டார்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆருக்கு தகவல் தெரிவித்து, அவரை வரவேண்டாம் என்று எஸ். பாலகிருஷ்ணனும், பத்மா சுப்ரமணி யமும் கூறினர். உடல்நிலை காரணமாக இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

செய்தியறிந்தவுடனேயே அவர் விரைந்து வந்துவிட்டார்.

"அவர்கள் உங்களுக்கு எப்படியோ அதுபோல் எனக்கும் தாய்தான். தாய் இறந்த செய்தி கேட்டுவிட்டு, எந்தப் பிள்ளையா வது ஓய்வாகத் தன் உடல்நலம் கருதி உட்கார்ந்திருப்பானா? இனிமேல் அவர்களை எப்போது பார்க்கப் போகிறேன்? இன்று அஞ்சலி செலுத்தாமல், உங்களுக்கு ஆறுதல் சொல்லி துக்கத்தில் பங்கு கொள்ளாமல் இருப்பது மனிதத்தன்மையல்ல. அதனால் தான் உங்கள் வார்த்தைகளையும் மீறி வந்தேன்" என்றார் எம்.ஜி.ஆர்.

இறந்த தாயே எழுந்து வந்து, எதிரில் நிற்பது போன்ற ஆறுதல் அவர்களுக்கு!

மாண்டவர் மீண்டு வந்தது போல் மலைப்பு!

அந்தப் பாசமிக்க சொற்களில் பாகாகக் கரைந்து அவர்கள் கண்ணீர் விட்டனர். ஒரு மூத்த மகன் செய்யவேண்டிய இறுதி அஞ்சலியைச் செலுத்தி, அனைவருக்கும் ஆறுதல் கூறிவிட்டுக் கடைசியில்தான் சென்றார் எம்.ஜி.ஆர்.

சோவியத் கலைவிழாவில் பத்மா சுப்ரமணியம் தனது சார்பில் ரஷ்ய மொழியில் பேசியதை ரசித்து, மற்றவர் பாராட்டியதைக் கேட்டு அன்னையாக அகமகிழ்ந்தார்.

மேடையில் தன் உடன்பிறவா சகோதரி பத்மா சுப்ரமணியத்திடம், "நான் உன்னை ஏன் பேசச் சொன்னேன் என்பது இப்போது புரிகிறதா?" என்று பூரிப்போடு கூறினார் எம்.ஜி.ஆர்.

அவர் எந்த அளவிற்கு மகிழ்ச்சியில் திளைத்திருக்கின்றார் என்பதை பத்மா சுப்ரமணியம் இரண்டு நாட்களுக்குப் பின்பு ராமாவரம் தோட்டத்திற்குச் சென்றபோது அறிந்து, மெய்சிலிர்த்துப் போனார்.

உடல்நலக்குறைவால் அமெரிக்காவில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, சென்னை திரும்பி ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த திருமதி. ஜானகி எம்.ஜி.ஆரைக் காணச் சென்றபோதுதான் பார் புகழும் வள்ளலின் பளிங்கு மனம் புரிந்தது பத்மாவுக்கு!

"பத்மா... உங்கள் அண்ணன் சோவியத் கலை விழாவில், நீ ரஷ்ய மொழியில் பேசியதையே இரண்டு நாட்களாகத் திரும்பத் திரும்பச் சொல்லிப் பூரித்துப் போகிறார். எனக்கும் கேட்டுக் கேட்டு அலுத்துக்கூடப் போய்விட்டது" என்று வேடிக்கையாக ஜானகி எம்.ஜி.ஆர். கூறினார்.



இப்போதுகூட அந்த நிகழ்ச்சியை நெகிழ்ச்சியோடு கூறிக் கண்கலங்குகிறார் உண்மையான பாசமுள்ள பத்மா சுப்ரமணியம்.

அனைத்திந்திய காவல்துறையினர் விழாவில், வெளி மாநிலத்திலிருந்து வந்தவர் தந்த குல்லாயை பத்மா சுப்ரமணியத்தின் தலையில் வைத்து. "என் தங்கை என்பதற்கு அடையாளம் - இதோ உனக்கும் குல்லாய் வைத்துவிட்டேன்" என்று வேடிக்கையாய்க் கூறி, ஆயிரம் நிலவாய் ஒளிவீசி, அந்த பாரத ரத்னா சிரித்ததை மறக்கத்தான் முடியுமா?

அமெரிக்கா சென்றிருந்த முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பரிசோதனை முடிந்து, ஜானகி எம்.ஜி.ஆரின் சகோதரர் (மணியின்) மகள் வீட்டில் தங்கியிருந்தார். அந்தச் சகோதரியின் பெயரும் ஜானகிதான். அவருடைய பிள்ளைக்குப் பெயரிட்டு முதன்முதலாகத் தன் கையால் பால் உணவு பரிந்தூட்டிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுள்ளார் எம்.ஜி.ஆர்.

விமான நிலையத்தில் முதல்வர் எம்.ஜி.ஆர்., அந்தச் சகோதரியிடம் குழந்தையைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளும்படி கூறியுள்ளார்.

அவர் பேசுவது சரியாகப் புரியவில்லை. இருமுறை கூறியும் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் அந்தப்பெண், தனது 'சாச்சா' எம்.ஜி.ஆரிடம் "முகபாவத்தினால் சொல்லுங்களேன்" என்று கூறியுள்ளார்.

"முகபாவங்களினால் பேச, நான் என்ன பத்மா சுப்ரமணியமா? நடிகர் திலகம் சிவாஜியா?" என்று பதில் சொல்லியுள்ளார் எம்.ஜி.ஆர்.

இதுமட்டும் தெளிவாகப் புரிந்ததாம்.

அமெரிக்காவில் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் நிலையில்கூட கலையைப் பற்றி நினைக்கும்போது, உடனே தன் அருமைத்தம்பி நடிகர் திலகம் சிவாஜியைப் பற்றியும், தங்கை பத்மா சுப்ரமணியத்தைப் பற்றியும் கூறத் தோன்றுகிறதென்றால் அவர்கள் இருவரும் எந்த அளவிற்கு அவர் இதயத்தில் நிறைந்து இருந்தார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இதனை அமெரிக்காவிலிருந்து திருமதி. ஜானகி வந்தபோது பத்மா சுப்ரமணியத்திடம் கூறியுள்ளார். இரு பெண்களின் கண்க ளும் கண்ணீரால் நதிகளை உண்டாக்கின.

டெக்னிக்கலரில் சினிமாஸ்கோப்பில் கல்கியின் படைப்பான சிவகாமியின் சபதத்தை பிரம்மாண்டமான படைப்பாக, திரைக் காவியமாகத் தயாரிக்க வேண்டுமென்று மக்கள் திலகம் மிகுந்த ஆவலுடன் ஏற்பாடுகளைச் செய்தார்.

டாக்டர் பத்மா சுப்ரமணியத்தை அழைத்து, தன் எண்ணத்தை விவரித்தார்.

"நீதான் நடிக்கவேண்டும். இது ஹீரோ சப்ஜெக்ட் அல்ல; ஹீரோயின் சப்ஜெக்ட்! எந்த நடிகை நடித்தாலும் சரியாக இருக் காது. மக்கள் நீ நடித்தால்தான் ஒத்துக்கொள்வார்கள். நீ.. நடிக்க மறுத்தால் இந்தப் படம் எடுக்கும் திட்டத்தையே கைவிட்டுவிடு வேன். சிவகாமியின் செல்வன் படத்தை எடுக்கமாட்டேன்" என்றார்.

"இதற்கு முன்பே... ராஜ்கபூர், சத்யஜித்ரே, ரிஷிகேஷ் முகர்ஜி போன்றவர்கள் படங்களில் நடிக்க அழைத்தும்.. மறுத்துவிட்டேன். ஒரு படத்தில் நடித்தால் அதன் பின்பு தொடர்ந்து இதே துறையில் இருக்கும் கட்டாயம் ஏற்பட்டு விடும். சினிமா மீது எனக்கு வெறுப்போ, மதிப்புக்குறைவோ இல்லை. என் தந்தை இருந்த, சகோதரர்கள் உள்ள கலைத்துறையை நான் எப்படிக் குறைவாக மதிப்பேன்? சினிமாவில் நுழைந்துவிட்டால், நான் செய்ய நினைக்கும் முக்கியமான காரியங்களைச் செய்ய முடியாமல் போய்விடும். சினிமாவில் நடிக்கப் பலர் கிடைக்கலாம் - முன்வ ரலாம்! இறைவன் எனக்கென இட்ட பணிகளை, எனக்கெனக் கொடுத்துள்ள காரியங்களைச் செய்ய எல்லோரும் வரமாட்டார் கள். அதனால் என்னை வற்புறுத்தாதீர்கள். என் போக்கில் விட்டு விடுங்கள்" என்று தெளிவாகவும், துணிவாகவும் அண்ணன் எம்.ஜி.ஆரிடம் டாக்டர் பத்மா சுப்ரமணியம் கூறினார்.

சொன்னதை ஏற்காமல் பத்மா மறுத்துவிட்டார் என்பது வருத்தத்தைத் தந்தாலும், அதனால் கோபம் வரவில்லை



எம்.ஜி.ஆருக்கு! அவர் மீது இருந்த பாசம் பல மடங்காக அதிகரித்தது.

"அப்பா போலவே பெண்ணும் வளர்ந்திருக்கிறது. புகழோ, பணமோ எதுவும் பத்மாவை மாற்றிவிட முடியாது என்று புரிந்து கொண்டு பெருமைப்படுகிறேன்" என்று பிரபல பட அதிபர் ஒருவரிடத்தில் எம்.ஜி.ஆர். கூறியுள்ளார்.

மக்கள் திலகத்தின் பார்வை தன்மீது படாதா என்று ஏங்கியோர் தொகை எத்தனையோ இலட்சம்?

அவர் மனதில் உன்னதமான இடத்தில் இருந்தவர்களுக்கு அதைவிடப் பெரிய செல்வம் எதுவுமில்லை!

'காலத்தை வென்ற கருணைக்கடல்' எம்.ஜி.ஆர்!



## "வழிகாட்டும் வாசகம்" ராஜீவ் பரவசம்!

"கலைத்துறையில் ஈடுபடவேண்டும் என்று பயிற்சி பெற வந்திருக்கும் உங்களையெல்லாம் முழுமனதோடு வரவேற்று, வாழ்த்துகிறேன். செய்யும் தொழிலே தெய்வம் என்கின்ற உணர்வோடு, முயற்சி திருவினையாக்கும் என்கின்ற நம்பிக்கையோடு பாடுபட்டால் வெற்றி நிச்சயம். இந்தப் பருவத்தில் உங்களுடைய தேவைகளுக்காகப் பெற்றோரைத் துன்பப்படுத்தக்கூடாது. உங்கள் ஆசைகளுக்காக அவர்கள் கஷ்டப்படக்கூடாது. நீங்களே உழைத்து, உங்களது விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும். உங்களுக்கு வளமான எதிர்காலம் அமைய நான் வணங்கும் அன்னையை வேண்டுகிறேன்."

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை, திரைப்படத் தொழில்நுட்பக்கூட மாணவர்கள் மத்தியில் 1976ம் ஆண்டு நடந்த நிகழ்ச்சியில் பேசிய அறிவுரை இது.

இன்ஸ்டிட்டியூட் பிரின்சிபாலிடமும், மாணவர்களிடமும் விடைபெற்றுக் கொண்டு, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். காரில் சென்று ஏறுவதற்கே அவர்கள் விடவில்லை.

மாணவர்கள் மாற்றி மாற்றிக் கேள்விகளைக் கேட்ட வண்ணம் இருந்தனர். அவரும் சலிப்படையாமல் சிரித்தபடி பதிலளித்தார். மாணவர்கள் ஒவ்வொருவரும் அவரைக் கட்டித் தழுவினார்கள். அவர் முகம் சுளிக்கவில்லை; புன்முறுவல் மாறாதபடி அவர்கள் அன்பை மதித்து, பாசத்தோடு தனித்தனியே ஒவ்வொருவரிடமும் சொல்லிக்கொண்டு புறப்பட்டார்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். சென்றவுடன், மாணவர்கள் உள்ளே ஓடிச் சென்றனர். அவர் குடித்துவிட்டு மீதம் வைத்திருந்த சோடாவை ஒரு பெரிய பாத்திரத்தில் ஊற்றி, நிறைய தண்ணீரைக் கொண்டு வந்து அதனுடன் கலந்தனர். அந்த நீரை ஆளுக்கு ஒரு குவளை அருந்த, மாணவர்கள் போட்டி போட்டனர்.

திருக்குறளில் ஒரு பாடல்...

தெருவில் புழுதியில் விளையாடிய குழந்தை வீட்டில் நுழைந்து, உண்ணும் கூழில் தன்னுடைய அழுக்குப்படிந்த கையால் துழாவுகின்றது. அந்தக் கூழ் பெற்றோருக்கு அமிழ்தத்தை விட இனிமையைத் தருகின்றதாம்.

திருவள்ளுவர் கூறுகின்றார்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். குடித்துவிட்டு மிச்சம் வைத்திருந்த சோடாவை மாணவர்கள் தாயுள்ளத்தோடு சுவைத்து மகிழ்ந்ததும் அப்படித்தானோ!



அன்பு அதிகமாகும்போது செய்யும் செயலை, சோதனை செய்து பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது.

"அன்று எம்.ஜி.ஆர். சொன்ன வார்த்தைகள்தான் இன்றும் என் வாழ்க்கைக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கின்றன" என்கின் றார், இளைய தலைமுறையின் எழுச்சிமிக்க நடிகர் ராஜீவ்.

இது மட்டும்தானா?

"நான் பெங்களூரில் இருந்தபோது எம்.ஜி.ஆர். படங்கள் வந்த வுடனேயே பார்த்து விடுவேன். சென்னையில் பல நாட்கள் ஓடியபின்புதான் அங்கு திரையிடப்படும். அப்படியிருந்தும் கடு மையான கூட்டமிருக்கும். போலீஸ் அடியை வாங்கிக்கொண்டு, எப்படியோ டிக்கெட் வாங்கித்தான் படம் பார்த்திருக்கிறேன். அவருடைய டிரஸ், ஸ்டைல், நடிப்பு என்றால் எனக்கு உயிர். எம்.ஜி.ஆர். காதல் காட்சிகளிலும், சண்டைக் காட்சிகளிலும் நடிப்பது மிகவும் பிடிக்கும். அவர் பெரிய ஜீனியஸ். படம் பார்ப்பவர்களை வேதனைப்படுத்தி அழ வைக்கமாட்டார்.

சமீபத்தில்கூட டிவி.யில் 'ஆயிரத்தில் ஒருவன்' படம் காண்பித் தபோது, 'தியேட்டர்களில் கூட்டமே இல்லை', என்று என் நண்பர் கள் கூறினர். தெருவில்கூட ஆள் நடமாட்டமில்லை. மக்களுக்கு அவ்வளவு ஆர்வம் அவருடைய படங்களைப் பார்ப்பதில்!

"சத்துணவுத் திட்டத்திற்காக முதலமைச்சர் நிதிக்காக மதுரை, திருச்சி, கோவை போன்ற நகரங்களில் நட்சத்திர இரவு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றபோது அதில் நான் கலந்து கொண்டேன். சென்னையில் நேரு ஸ்டேடியத்தில் நடிகர், நடிகையருக்கெல்லாம் ஆசி கூறி, அவர் மோதிரம் வழங்கினார். அவருடைய ஆசியைப் பெறவேண்டும் என்பதற்காக ஹுப்ளியில் கன்னடப் படப்பிடிப் பிலிருந்த நான், படப்பிடிப்பைக் கேன்சல் செய்துவிட்டு அங்கி ருந்து புறப்பட்டு வந்தேன். தயாரிப்பாளரை செலவு செய்ய வைத்து சிரமப்படுத்தாமல், நானே எட்டாயிரம் ரூபாய் வரையில் செலவு செய்து கொண்டு வந்து அவரைச் சந்தித்து ஆசியைப் பெற்றேன். என் வாழ்வில் கிடைத்த அரிய வாய்ப்பு அது. இப்போதுகூட ஸ்டுடியோவில் டைரக்டர்கள், டெக்னீஷியன்கள் அவரைப் பற்றிப் பேசாத நாட்களே இல்லை. லைட்பாய் போன்ற

சாதாரணத் தொழிலாளர்கள் தங்களுக்கு எம்.ஜி.ஆர். செய்த உதவிகளைப் பற்றிக் கூறும்போது அவருடைய கருணை உள்ளத்தைப் புரிந்துகொள்ள முடிகின்றது."

நடிகர் ராஜீவ் மனம் திறந்து மகிழ்ச்சியோடு கூறிய வாசகங்கள் இவை!



## 'எளியவர்க்கும் எளியவர்' லதா வியந்த நிகழ்ச்சி

'உழைக்கும் கரங்கள்' படத்திற்காக ஒரு காட்சி படமாக்கப் பட்டது. அது ஒரு லாங்-ஷாட்!

ஹிப்மூவ்மெண்ட் எப்படிச் செய்தால் நன்றாக இருக்கும் என்று நடிகை லதாவும், டான்ஸ் மாஸ்டரும் ஒரே மாதிரியான கருத்தைக் கூறினர்.

"அப்படிச் செய்தால் சரியாக மூவ்மெண்ட் வராது. வேறு மாதிரிச் செய்யலாம்" என்று மக்கள் திலகம் யோசனை கூறினார்.

லதாவும், டான்ஸ் மாஸ்டரும் அது சரியாக வராது என்று தெரிவித்தனர்.

லதா சம்பந்தப்பட்ட காட்சியை முதலில் படமாக்கினர். அதன் பின்பு எம்.ஜி.ஆர். தொடர்புள்ள காட்சி எடுக்கப்பட்டது.

எம்.ஜி.ஆர்., தான் கூறியது போலவே ஹிப் மூவ்மெண்ட் கொடுத்தார். அதுவும் ஒரே டேக்கில் படமாக்கப்பட்டுவிட்டது. முன்னால் ஒத்திகை எதுவும் பார்க்கவில்லை!

லதாவும், டான்ஸ் மாஸ்டரும் அயர்ந்து போய்விட்டனர். அப்படி மூவ்மெண்ட் கொடுக்க முடியாது, அது சரியாக வராது



என்று அவர்கள் கருதியதைத்தான் மிகவும் சரியாக, அழகாக, ஒத்திகை பார்க்காமலே செய்து காண்பித்து விட்டார் எம்.ஜி.ஆர்.!

மறுபடியும் லதா சம்பந்தப்பட்டக் காட்சி எடுக்கப்பட்டது. அவர் போலவே லதாவும் ஹிப் மூவ்மெண்ட் கொடுத்தார். அந்தக் காட்சி எம்.ஜி.ஆர். கூறியதைப் போலவே மிகவும் சிறப் பாக அமைந்துவிட்டது.

ஒரு சாதாரண மூவ்மெண்ட் என்றால்கூட அவர் மனதிற்குள் ளேயே, எப்படிச் செய்தால் நன்றாக இருக்கும் என்று திட்டமிட்டு விடுவார். அதனால் எதையும் அவரால் சிறப்பாகச் செய்ய முடிந்தது.

'நீதிக்குத் தலைவணங்கு' படப்பிடிப்பு மைசூர் அருகில் உள்ள சிவசமுத்திரத்தில் நடந்தது. எல்லோரும் படப்பிடிப்பு நடக்கும் இடத்திற்குச் சென்றனர். அப்போது -

ஒரு வயதான மூதாட்டி மெல்ல எம்.ஜி.ஆர். அருகில் வருகி றார். கையில் கொண்டு வந்த சிறிய அலுமினியப் பாத்திரத்தை

அவரிடம் நீட்டுகின்றார். அந்தப் பாத்திரமும், அந்த மூதாட்டியின் தோற்றமும் அருகில் இருந்த நட்சத்திரங்களை முகம் சுளிக்க வைக்கின்றது.

பார்ப்பதற்கே அசிங்கப்பட்டுக் கூசிய அவர்கள் வியப்படையும்படி, அந்தப் பாத்திரத்தில் இருந்ததைச் சர்வ சாதாரணமாக எம்.ஜி.ஆர். எடுத்து உண்கிறார். அதைக் காணக்காண அந்தத் தாய் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை.

அந்தத் தாயின் கையில் நூறு ரூபாய்த் தாள்கள் சில திணிக்கப்படுகின்றன. வாழ்த்தியபடி அவர் செல்கிறார்.



துவக்கத்தில் நடிகை லதாவிடம் எம்.ஜி.ஆரைப்பற்றிப் பெருமையாகக் கூறுவதாக நினைத்துக் கொண்டு, சிலர் பயமுறுத்தினர். புகழ்பெற்றவர்களின் அருகில் இருப்பவர்கள் பலர் இந்த நல்ல காரியத்தைத்தான் இன்னமும் செய்து கொண்டிருக்கின்றனர்.

'மாட்டுக்கார வேலன்' படப்பிடிப்பின் இடைவேளையின் போது, இலங்கேஸ்வரன் ஆர்.எஸ். மனோகர்தான் லதாவை அழைத்துக் கொண்டு வந்து எம்.ஜி.ஆரிடம் அறிமுகம் செய்தார்.

எல்லோரும் மேஜைமுன் அமர்ந்து அமர்க்களமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். எம்.ஜி.ஆரோ மிகவும் எளிமையாகத் தரையில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். லதாவுக்கு ஆச்சரியம்! இந்தக் காட்சி, சினிமா என்றாலே பயந்து நடுங்கிக் கொண்டிருந்த தன் மனதில் ஒருவிதத் தெளிவை ஏற்படுத்தியது என்று லதா கூறினார்.

"சோவியத் ரஷ்யா சென்றிருந்தபோது, அவருக்கு மட்டும் தங்கியிருந்த அறையில் உணவு கொண்டு வந்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், அவர் மற்றவர்களைப் போலவே எல்லோருடனும் சேர்ந்து சென்று சீட்டு வாங்கிச் சாப்பிட்டார். தனக்கென்று தனியாக எந்த வசதியும் வேண்டாம் என்று கூறி விட்டார். அவர் நடிகராக இருந்தபோது All in one என்று கூறும்படி கலைத்துறையில், எல்லா நுட்பங்களும் அறிந்த மேதையாக இருந்தார். அவருடைய வாழ்க்கையில் 'முடியாது' என்ற வார்த்தைக்கே இடமில்லை. முதலமைச்சரான பின்பும், அதே எளிமையோடு ஒரு சின்னக் குழந்தைகூட அவரிடம் தன் கருத்தைக் கூறலாம் என்ற நிலையில் இருந்ததைப் பாராட்டாமல் இருக்க முடியாது." நடிகை லதா வியப்போடு தெரிவித்தார்.



## அண்ணாவுக்காக முதல் சொட்டுக் கண்ணீர்?

பத்திரிகை ஆசிரியர் தமிழ்வாணன் பாராட்டு என்பது சாதாரணமானதல்ல என்கின்ற காலத்தில் (1965), அவர் எழுதிய புத்தகத்தில் குறிப்பிடத்தக்க வரிகள் இவை:

> "சென்னையில் மழையில் நனைந்து குளிர் எடுத்துப் போய், அணு அணுவாகச் செத்துக் கொண்டிருந்த ரிக்ஷாக்காரர்களுக்காக எம்.ஜி.ஆர். மழைக்கோட்டு

கள் கொடுத்தார். மயிலுக்கு போர்வையிட்டு, போர்த்தி விட்டு, மயிலை மூச்சுத்திணற வைத்த வள்ளல் களைத் தான் தமிழகம் சந்தித்திருக்கிறது.

ஆனால், எம்.ஜி.ஆர். நல்ல பகுத்தறிவோடு ரிக்ஷாக்கா ரர்களுக்கு மழைக்கோட்டு கொடுத்தார். அந்தப் பெரிய விழாவையும் அண்ணா அவர்களைத் தம் பக்கம் வைத்துக் கொண்டுதான் நடத்தினார்.

கலைவாணர் என்.எஸ்.கே.யின் புதல்விகளுக்கு எம்.ஜி.ஆர். தம் செலவில் திருமணம் நடத்தியபோதும் அண்ணாவையே தலைமை தாங்க வைத்துப் பெருமைப் பட்டிருக்கிறார். அண்மையில் 'எங்க வீட்டுப் பிள்ளை' படத்தின் வெள்ளி விழாவின்போது கூட அவர் அண்ணாவை மறந்துவிடவில்லை.



இவ்வாறு தன் வாழ்வின் வெற்றிப்படிகளில் ஒவ்வொரு அடியை எடுத்து வைத்து வரும்போதும், மக்கள் திலகம் காஞ்சித்தலைவரை நினைக்கவும், வணங்கவும் தவறியதே இல்லை.

அண்ணாவுக்குச் சென்னை நீதிமன்றத்தில் ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டபோது அங்கேயே எம்.ஜி.ஆர். விக்கி விக்கி சிறு குழந்தைபோல் அழுதுவிட்டார். இந்த நாட்டிலேயே அண்ணா பெற்ற தண்டனையை நினைத்து, முதல் சொட்டுக் கண்ணீர் உருண்டு வந்து விழுந்தது எம்.ஜி.ஆரின் கண்களிலிருந்துதான்.

அண்ணாவைத் தாங்கள் வளருவதற்காக மட்டும் சிலர் பயன்படுத்துவார்கள். ஆனால், எம்.ஜி.ஆர். வளர்ந்த பின்பும் அண்ணாவை மறக்கவில்லை.

எம்.ஜி.ஆரின் அண்ணா பக்தியை யாராலும் கண்களால் பார்க்க முடியாது; காதுகளால் கேட்க முடியாது; இதயத்தால் மட்டுமே உணரமுடியும்."

*கடைசியாகத் தமிழ்வாணன் குறிப்பிட்டுள்ள வரிகள் என் வாழ்க்கையின் அனுபவங்களாயின!*



**பழி சுமத்தப்பட்ட எனக்கு,**
**பக்க பலமாகிக் காத்தவர்!**

*நான் பார்த்தேன்- கேட்டேன்- இதயத்தால் அதனை உணர்ந் தேன்.*

*'அண்ணா... அண்ணா... அண்ணா...' என்றே அவரது எண்ணமும், செயலும் வெளிப்பட்டபோது, நானும் அவரால் அழைக்*

கப்பட்டேன். அவர் துவக்கி, ஆசிரியராக இருந்த இதழில் துணை ஆசிரியராக இருக்கும்படிக் கூறி, தாராளமாக வார்த்தைகளால் நம்பிக்கையளித்தார்.

இந்த நிலையில் –

அவருக்கு நம்பிக்கையாக இருப்பதாக அப்போது கூறிக் கொண்ட சிலர், "நாகை தருமன் கலைஞரின் ஆள். அவரைப் போய் நம் பத்திரிகையில் எப்படி வைத்துக் கொள்வது?" என்று கோள் மூட்டியுள்ளனர். இந்த வேலையை மட்டும் செய்வதற்குப் பிரபலமானவர்கள் பக்கத்தில் என்றும் சிலர் இருக்கத்தான் செய்கின்றனர். அவர்களையும் மீறி நல்லது நடந்தால்தான் உண்டு.

என்மீது உண்மையாக பற்று கொண்ட சிலர், உடனே எம்.ஜி.ஆரைச் சந்திக்கும்படி கூறினர். அவர் டெல்லி செல்வதற் காக விமான நிலையத்தில் பிரமுகர்கள் அறையில் தங்கியிருந்த போது போய்ப் பார்த்தேன். அவர் என்னிடம் கேட்டிருந்த புத்தகங்களை வழங்கிவிட்டு, நான் கேள்விப்பட்டதைத் தெரிவித் தேன்.

நான் சொல்வதை அவர் அமைதியாகக் கேட்டார்.

"கலைஞரிடத்திலே எனக்குப் பற்று உண்டு. அதை மறைக்க விரும்பவில்லை. நீங்கள் அழைத்ததாலும், பத்திரிகையின் பெய ரும் என்னைச் சம்மதிக்க வைத்தன. சந்தேகத்தோடு ஒரு நிறுவ னத்தில் பணிபுரிய நான் விரும்பவில்லை. உங்களைவிடக் கலைஞருக்கு வேண்டியவர்கள் யாரும் இல்லை. நான் சாதாரண மானவன். இருக்கின்ற இடத்திற்கு விசுவாசமாக நான் இருந்தா லும், மற்றவர்கள் என்னை வேற்றுமையாகத்தான் நினைப் பார்கள். இந்த நிலையில்..." நான் முடிக்கவில்லை...

"உங்களைப் பற்றி நான் எதுவும் சொன்னதாகவோ, சந்தேகப் பட்டதாகவோ கேள்விப்பட்டீர்களா?"

"இல்லை!"

"என் இயக்கத்தைச் சேர்ந்த இதழில், எனக்கு நம்பிக்கையான வர்கள் இருக்க வேண்டுமென்ற அக்கறையினாலோ, உங்களைப்

பிடிக்காமலோ எனக்கு வேண்டியவர்கள் என்று கருதப்படுபவர்கள், என்னிடம் எதை வேண்டுமானாலும் கூறலாம். அதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். நான் உங்களை நம்புகிறேன். நீங்கள் போய்த் தொடர்ந்து வேலைகளைக் கவனியுங்கள்." அவர் தீர்மானமாகக் கூறி, முதுகில் தட்டிக்கொடுத்து என்னை அனுப்பி வைத்தார்.



இதழ் தொடங்கிய பின்பு பல மாதங்கள் வரையில் ஒரு சிலர் வினோதமான பிராணியைப் பார்ப்பதைப் போல் என்னைப் பார்த்தனர். இன்னும் சிலர், அச்சத்தோடு விலகிச் சென்றனர். என்னை வேவு பார்த்தவர்களெல்லாம், என்னை விரும்பிக் கொண்டாடும் காலம் வரத்தான் செய்தது. அதற்கு மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். என்மீது வைத்திருந்த அழுத்தமான நம்பிக்கை தான் காரணம்.

ஒருமுறை அவரிடத்தில் கட்டுரை எழுதி வாங்குவதற்காகச் சென்றிருந்தேன். அன்றைய செய்தித்தாளில் டாக்டர் கலைஞர்,

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். இருவரும் ஒரு பிரச்சனையைப் பற்றித் தனித்தனியே கருத்து விளக்கம் அளித்திருந்தனர்.

இரண்டும் ஒரே அச்சில் வார்த்த பொம்மைகள்போல் அமைந் திருந்தன. இதழ்களை மக்கள் திலகத்திடம் காண்பித்தேன். படித்து முடித்துவிட்டு அவர் என்னைப் பார்த்தார்.

நான் மெல்ல சிரித்தபடி, "கலைஞரும் நீங்களும் எப்படி ஒரே கருத்தைத் தனித்தனியே தெரிவித்திருக்கிறீர்கள்? இதிலிருந்து கலைஞருக்கு மிகவும் நெருங்கியவர் நீங்கள்தான் என்று தெரிய வில்லையா?" என்றேன்.

கையிலிருந்த பேப்பரை பந்துபோல் உருட்டி, சிரித்தபடி என்மீது பொய்க் கோபத்தோடு வீசினார். நான் சிறிது தூரம் ஓடிச் சென்றுவிட்டு, மீண்டும் அவர் அருகில் சென்று அமர்ந்தேன்.



## கலைஞர் சூட்டிய பாமாலை!

அவர் அமைதியாக சில மணித்துளிகள் அமர்ந்திருந்தார். ஆழ்ந்த நட்பிற்கு அடையாளமாகத் திகழ்ந்த தங்கள் பிரிவு, அவர் மனதை எந்த அளவிற்கு வேதனைப்படுத்தியிருக்க வேண்டும் என்று புரிந்து கொண்டேன்.

பிரியவில்லை - காலத்தால் பிரிக்கப்பட்டார்கள். அரசியலில் வேறுபட்டு நின்றாலும், இருவரும் ஒருவரைப்பற்றியொருவர் நினைத்து ஆழ்ந்த நட்போடுதான் இருந்தார்கள் என்பது இருவரி டமும் பதவியோ, உதவியோ பெறாமல், அவர்களை நன்கு அறிந்த என்னைப் போன்றவர்களுக்குப் புரியும். அவர்கள் இதய ஒற்றுமையை நேசித்தவன் நான். அதற்கு உதாரணங்கள் எவ்வ ளவோ கூறலாம்.



இருவரும் கலந்து கொண்ட அன்னை அஞ்சுகம் இல்ல விழாவை மறக்க முடியாது.

> "கலைஞருக்கு மட்டுமல்ல. எனக்கும் அன்னையாக விளங்கி, பாசத்தைப் பொழிந்தவர்கள் அஞ்சுகத்தாய். கருணையே இல்லாத இடத்தில் எவ்வளவு நிதி இருந்தாலும் பயனில்லை. கருணையே நிதியாக வந்தது போல் தமிழக முதல்வர் கிடைத்திருக்கிறார். இப்படிப் பட்ட ஒரு தங்கமான பிள்ளையைத் தந்த தாயை தமிழகமே தெய்வமாகப் போற்ற வேண்டும்."

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அன்று கூறியது, கலைஞரை வாழ்த்துவதைப் போல் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. என்னைப் போன்றவர்கள் இப்படி நினைத்துத்தான் ஆறுதல் பெறமுடியும்.

> **"செங்கை மாவட்டம் என்று பெயர் வந்ததற்குக் காரணமே நமது புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்.தான். கொடுத்**

துக் கொடுத்துச் சிவந்த கைகளை உடைய அவர் வாழும் மாவட்டம் என்பதால்தான் செங்கை மாவட்டம் என்று பெயர் வந்திருக்க வேண்டும்."

டாக்டர் கலைஞர், மக்கள் திலகத்திற்குச் சூட்டிய புகழாரம் இது மட்டும்தானா... இன்னும் உண்டு...!

அற்றைத் திங்கள், அவ்வெண்ணிலவில் அழகு தமிழ்ச் சொல் மலர்களால் என்றும் வாடாத கவிதை மாலையைச் சூட்டியிருக் கின்றார் டாக்டர் கலைஞர் – தன் தோழர் மக்கள் திலகத்திற்கு!

"குன்றனைய புகழ் கொண்ட குணக்குன்றே
முடியரசர்க்கில்லாத செல்வாக்கெல்லாம்
முழுமையுடன் பெற்று விளங்கும் முழுமதியே!
படிமிசை நீ பெற்ற கீர்த்தியெல்லாம்
பார்க்கின்றாள் வானிருக்கும் சத்யா அன்னை!
மடிமிசை உனைச்சுமந்த நாள் நினைத்து –
மகிழ்ச்சியினால்
வடிக்கின்றாள் கண்ணீர் தன்னை!
கொன்றாலும் பிழைத்திருக்கும் தருமமென்று
குருடர்களுக் கெடுத்துரைத்த மறுபிறப்பே!
வென்றாரும் வெல்வாரும் இல்லா வகையில்
எந்நாளும் ஒளிவீசும் தண்மதியே!
தென்னாடும் தென்னவரும் உள்ளவரை
மன்னா! உன் திருநாமம் துலங்கவேண்டும்!

இதைவிட பொன்மனச் செம்மலைப் புகழ்ந்து, உள்ளம் உருக இன்னொருவரால் பாட இயலாது!

செம்புலப் பெயல் நீர்போல் கலந்த அன்புடைய நெஞ்சம் ஒன்றின் குரல் இது!

அன்னை சத்யா அவர்கள், கலைஞர் தன் வீட்டிற்கு வருகின் றார் என்றால், அவருக்குப் பிடித்தமான உணவு வகைகளைச் சமைத்து வைத்துக்கொண்டு காத்திருப்பாராம். அவர் வந்த பின்பு பிள்ளைகளோடு பிள்ளையாக கலைஞரையும் அமரவைத்து அமுது படைத்து அகமகிழ்வாராம். அஞ்சுகத்தாயும் மக்கள் தில



கத்தைத் தனது அருமை மகனாகத்தான் கருதினார். இரு குடும்பங்களுக்கும் மத்தியில் இருந்த ஆழ்ந்த பாசத்தை உணர்ந்தவர்கள் இன்றும் இருக்கின்றார்கள். தாயைப் போற்றி தரணிமெச்ச வாழ்ந்தவர்கள், வாழ்பவர்கள் இருவரும்!

வள்ளுவர்க் கோட்டம் அமைத்ததையும், சுதந்திரநாள் அன்று கோட்டையில் முதலமைச்சர் கொடியேற்ற கலைஞர் வாதாடிப் பெற்ற உரிமையையும், அவரது சாதனைகளையும் மக்கள் திலகம் விழாக்களில் வெளிப்படையாகவே பாராட்டியுள்ளார். கலைஞரைக் கேவலமாகப் பேசிய ஒருவரை நடு வழியிலேயே காரிலிருந்து இறக்கிவிட்டு, நெடுந்தூரம் நடக்க வைத்தவர் எம்.ஜி.ஆர்.!

எத்தனையோ நிகழ்ச்சிகள் நினைவில் வலம் வந்து, கண்களைப் பனிக்க வைக்கின்றன!

கண்கள் இரண்டு என்றாலும் பார்வை ஒன்றுதான்! இதயமும் ஒன்றுதான்!

இதயம் - அண்ணா!

இரு கண்கள் - அண்ணாவை நேசிக்கும் தலைவர்கள்!

இந்தப் பார்வை எந்த காலத்திலும் என்னைப் போன்றவர் களுக்குப் பழுதுபடாது. ஏனென்றால் நாங்கள் எப்போதும் ஏமாற் றத்தின் பிரதிநிதிகள். அதனால் எதிர்பாராமலே எதையும் செய்ப வர்கள்! வரவு கருதி, உறவு கொள்ளும் வியாபாரவித்தை தெரியாதவர்கள்.

இன்னும் சொல்லச் சுவையான கட்டிவெல்லம் போன்ற எத்தனையோ சம்பவங்கள் உள்ளன.

அவைகளின் மூலம் எம்.ஜி.ஆர். பலம் தெரிகின்றது. பண்பு தெரிகின்றது. அவர் உயர்ந்து கொண்டே சென்றதன் காரணம் விளங்குகின்றது.

தெய்வத்தாய் தந்த திருமகனின் புகழ்ப் பாதைக்கு, இந்தச் சிறு விளக்கும் வழிகாட்டிக் கொண்டிருக்கும்.

प्रथम दिवस आवरण FIRST DAY COVER






डा. एम. जी. रामचन्द्रन DR. M. G. RAMACHANDRAN



## விழியிழந்தோரும் பார்த்த விந்தை மாமனிதர்!

கர்நாடக மாநிலத்தில் பெங்களூரில் கண் ஒளி இழந்தோர், காது கேளாதோர் பள்ளி நடத்திய ஒரு விழாவில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆரும், கன்னட சூப்பர் ஸ்டார் ராஜ்குமாரும் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி துவங்கியது.

வரவேற்புரை - வாழ்த்துரை - பாராட்டுரைகள் முடிந்தன!



சிறப்புரையாற்ற பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். எழுந்தார்.

வெறும் வார்த்தைகளால் கண்ணொளி இழந்தவர்களுக்கு வழி காட்ட இயலுமா?

செவியின் சுவையுணராத செல்வங்களுக்கு விருந்து கிடைக்கச் செய்வது எப்படி?

இதயம் கருணைக்கடலாக இருந்தால்தான்,வார்த்தைகள் முத்துக்களாக வடிவம் கொள்ளும்.

பொன்மனம் கொண்டவர் எம்.ஜி.ஆர். பேசத்துவங்கியவுடனேயே, அந்தப் பள்ளியின் வளர்ச்சிக்காக 50 ஆயிரம் ரூபாய் நிதி வழங்குவதாக அறிவித்தார்.

அப்படித் தான் வழங்குவதற்கான காரணத்தை அவர் தெரிவித்தபோது, விழாவில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களும் அசையாத பதுமைகளாக மாறினர். அவர்களது இதயம் பாகாய் உருகியது. கண்கள் கண்ணீரைச் சொரிந்தன.

"கால் முறிந்து சிகிச்சை பெற்று, படுக்கையில் நான் கிடந்த போது இரண்டு பார்வையற்றவர்கள் என்னைச் சந்திக்க வந்தனர்.

'எங்கே... இவ்வளவு தூரம் மிகவும் சிரமப்பட்டு வந்திருக்கிறீர்கள்?' என்று கேட்டேன்.

'உங்களைப் பார்க்கத்தான் வந்தோம்' என்று பதில் வந்தது.

'என்னைப் பார்க்கவா?' வியப்போடும், வேதனையோடும் அவர்களை நோக்கினேன்.

'ஆமாம். உங்களைப் பார்ப்பதற்குத்தான் வந்தோம். கண்களில்லாத நாங்கள் உங்களை எப்படிப் பார்க்க முடியும் என்றுதானே ஆச்சரியப்படுகின்றீர்கள்? எல்லோரையும் போல் வெளி உலகைப் பார்ப்பதற்கு புறக்கண் இல்லையே தவிர, அகக்கண்ணில் நீங்கள் ஆழமாகப் பதிந்திருக்கின்றீர்கள். உங்களை எங்களுடைய கரங்களால் தொட்டு ஸ்பரிசித்து, ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்துவிட்டுச் செல்வதற்காகத்தான் வந்தோம்' என்று அவர்கள் தெரிவித்ததும் அன்பைவிட உலகத்தில் உயர்ந்தது எதுவுமே இல்லையென்று எனக்குத் 'தோன்றியது.

இதுபோல அன்பு செலுத்துவதற்கு லட்சோப லட்சம் மக்கள் இருக்கின்றார்கள் என்கின்ற எண்ணமே எனக்கு அதிக தன்னம்பிக்கையைத் தந்தது.

கண்களை இழந்து தவிக்கும் அவர்கள், என்மீது காட்டிய வாஞ்சை என்றென்றும் மறக்க முடியாத நிகழ்ச்சியாக மனதில் பதிந்துவிட்டது. அவர்களுக்கெல்லாம் என் வாழ்நாளில் ஏதாவது செய்ய வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தேன். இன்று அந்த நல்வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை நினைத்து மகிழ்கிறேன்."

எம்.ஜி.ஆர். பேசி முடித்ததும் எழுந்த கரவொலி, அந்த நிகழ்ச்சியை நேரில் கண்டு, கேட்டு நெக்குருகிய இதயங்களின் வாழ்த்தொலியாக பெங்களூரில் பொங்கிப் பெருகியது.

எளியோரைக் கண்டு இரக்கம் வருவது இயற்கை! இயன்ற அளவு உதவி புரிந்துவிட்டு, அதனை அத்துடன் மறந்துவிடுவது தான் பெரும்பாலோர் குணம்!

கண்டும் காணாமல் செல்வோரை, இதயம் உள்ள மனித இனத்திலேயே சேர்க்க நான் விரும்பவில்லை!

கோடியில் ஒருவருக்கு மட்டுமே - என்றோ கண்ட காட்சியானாலும், இல்லாமையால் துன்பப்படுவோர் குறையை எப்படி நீக்குவது, என்கின்ற சிந்தனை வளர்ந்து கொண்டே இருக்கின்றது.

காலம் கனியும்போது தாங்கள் உதவி செய்கின்றனர்.

அந்த வகையில் ஆயிரத்தில் ஒருவர் என்றல்ல - கோடியில் ஒரு குணக்குன்று என்று எம்.ஜி.ஆரைக் கூறவேண்டும்.

உள்ளத்தாலும், உயர்ந்த செயல்களாலும் மக்கள் மனதில் உன்னதமான இடத்திற்கே சென்று விடலாம்; சிகரத்தைத் தொட்டுவிடலாம். ஆனால், எப்போதும் எல்லோராலும் அதே இடத்தில் இருந்து மதிப்பையும், மரியாதையையும் பெற்றுவிட முடியுமா?

'என்னால் முடியும்' என்று நிரூபித்து, நிலைத்து நிற்க எம்.ஜி.ஆரால் முடிந்தது. அதனால்தான் அவர் மக்கள் திலகமாக

மட்டுமின்றி, மக்களின் இதயத் திலகமாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.



## கவிதைக்கு... 'விதை' ஆனார்

'நினைத்ததை முடிப்பவன்' படத்திற்காக கவிஞர் திலகம் மருதகாசியை அழைத்து எம்.ஜி.ஆர். ஒரு பாடலை எழுதும்படி கூறினார்.

"கண்ணை நம்பாதே
உன்னை ஏமாற்றும்"
என்ற பாடல் பிறந்தது.

"பொன் பொருளைக் கண்டவுடன்
வந்தவழி மறந்துவிட்டுத்
தன் வழியே போகிறவர்
போகட்டுமே..."

என்று திரைப்படத் துறையில் பல காலம் அனுபவம் பெற்ற கவிஞர் மருதகாசி பாடலின் முடிவில் எழுதியிருந்தார்.

"தன் வழியே என்று சொல்கிறீர்களே... அது ஏன் நல்லவழியாக இருக்கக் கூடாது? நல்வழியாக இருந்தால் ஒருவன் ஏன் தன் வழியில் போகக் கூடாது? அதைத் தவறு என்று எப்படிச் சொல்லமுடியும்?" சிந்தனை ஏரைக் கவிதை நிலத்தில் ஆழமாக உழுதார் எம்.ஜி.ஆர்.

மருதகாசியின் முகம் மலர்ந்தது. அறுவடை அமோகமாக இருப்பதற்குத்தான் அந்த விவசாயி, ஆடிப்பட்டம் தேடி விதைக்கிறார் என்று புரிந்து கொள்கின்ற மேதை அவர்.



"தாங்கள் விரும்புவது என்ன? இந்த இடத்தில் எப்படி இருந்தால் நன்றாக இருக்கும் என்று கூறுகின்றீர்கள்?" கவிஞர் வினவினார்.

"தீய வழி என்ற அர்த்தம் தொனிக்கும் வகையில் இருக்க வேண்டும்" என்றார் எம்.ஜி.ஆர்.

*'தன் வழியே போகிறவர்*
*போகட்டுமே'*
*என்ற வரிக்குப் பதிலாக...*
*'கண் மூடிப் போகிறவர்*
*போகட்டுமே' என்று எழுதி நீட்டினார்.*

"படித்துச் சொல்லுங்கள்" என்றார் எம்.ஜி.ஆர்.

*"பொன் பொருளைக்*
*கண்டவுடன்*
*வந்தவழி மறந்துவிட்டு*
*கண்மூடிப் போகிறவர்*
*போகட்டுமே..."*

மருதகாசி வான் மழையாய்க் கவி மழை பொழிந்தார்.

கார் மேகம் கண்ட கலாபமயில் தோகை விரித்து ஆடுவது போல் பூரிப்பு பொன்மனச் செம்மலுக்கு!

புன்னகை மலர்ந்தது.

"ஆகா... பொருத்தமான வரி...! அற்புதம்!" என்று எம்.ஜி.ஆர். அகமகிழ்ந்தார்.

கவிஞர் மருதகாசி ஒருமுறை இதனைக் குறிப்பிட்டுவிட்டு, "ஒவ்வொரு வார்த்தையையும் எவ்வளவு நுட்பமாக எம்.ஜி.ஆர். கூர்ந்து கவனிக்கிறார் என்பதை அறிந்து கொண்டேன். இத்தகைய அறிவாற்றல் மிக்கவர்களோடு பணிபுரிவது பெரும் பாக்கியம்" என்று தெரிவித்தார்.

முதல்வர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆலோசனை கூறவும், ஆதரவு காட்டவும், அன்பு செலுத்தி அரவணைக்கவும் இருக்கின்ற நம்பிக்கையை மட்டுமே வாழ்க்கைக்கு ஆதாரமாகக் கொண்டவர்கள், என்னைப் போல் ஏராளமானவர்கள் இருந்தார்கள், இருக்கின்றார்கள், இதயத்தில் அவரை நிலை பெறச் செய்து! பணம் ஒன்றே வாழ்வின் நோக்கம்; பதவியால்தான் உயர்ந்திட முடியும் என்பதல்ல!

செல்வம் நிறையச் சேர்ந்தாலும் நிம்மதியின்றி தவிப்போர் எத்தனை பேர்?





## 'எங்கிருந்தோ வந்த குரல்...' ஜெயசித்ராவுக்கு மணவாழ்த்து

கலையுலகில் தங்களுக்கு எத்தகைய பிரச்னை ஏற்பட்டாலும் உடன்பிறவா சகோதரர் ஒருவர் இருக்கின்றார் என்று, எம்.ஜி.ஆரிடம் உள்ளன்போடு கூறி, ஆலோசனை பெற்றோர் ஏராளம்.

ஜெயசித்ரா சிறந்த குணச்சித்திர நடிகை. திரையுலகில் பல வெள்ளிவிழாப் படங்களிலும், வெற்றிப் படங்களிலும் நடித்துப் புகழ்பெற்றவர். நல்ல நடிகை என்று முன்னணிக் கலைஞர்களால் பாராட்டப்பட்டவர். அவருக்கு சில ஆண்டுகளுக்கு முன்பு சில பிரச்னைகள் வந்து திக்குமுக்காட வைத்தன. துணிச்சல்காரரான ஜெயசித்ரா சோதனைகளைச் சந்தித்துத் துவண்டு போயிருந்தார். இவைகளெல்லாம் எம்.ஜி.ஆருக்கு எப்படித்தான் தெரியுமோ?

தொலைபேசி மணி ஒலித்தது!

ஜெயசித்ரா பதட்டத்தோடு ரிசீவரை எடுத்து, காதில் வைத்தார்.

"நான்தான் எம்.ஜி.ஆர். பேசுகிறேன். எல்லாம் கேள்விப்பட்டேன். இதுபோல் சோதனைகள் வந்தால் பின்னாலேயே சுகம் தேடி வரும். சிரமங்களைக் கண்டு மனம் இடிந்துவிடக் கூடாது. தைரியமாக இரு. எதுவாக இருந்தாலும், என்ன நடந்தாலும் கவலைப்படாதே. நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நினைத்துக்கொள்." தெய்வத்தின் திருக்குரல் போல் ஒலித்தது.

அவர் கூறியதைப் போலவே ஜெயசித்ராவின் வாழ்வில் சூழ்ந்த கருமேகங்கள் விலகி, ஒளி வெள்ளம் பரவியது.

"சக்தி லீலை நாட்டிய நாடகம் அரங்கேற்றத்துக்கு வருகை தந்து வாழ்த்த வேண்டும்" என்று ராமாவரம் தோட்டம் சென்று எம்.ஜி.ஆரை அழைத்தார் ஜெயசித்ரா.

"ஜப்பான் செல்லுகிறேன். நேரில் வந்து வாழ்த்துவதை இப்போதே வாழ்த்தி விடுகிறேன்" என்று எம்.ஜி.ஆர். முன்பே ஆசி கூறி அனுப்பி வைத்தார்.

திருமணம் செய்து கொள்ள ஜெயசித்ரா தீர்மானித்திருந்த நேரம்!

திடீரென்று ஒரு நாள் எங்கிருந்தோ டெலிபோனில் பேசினார்.

"திருமணம் என்பது சாதாரணமாக வாழ்வில் நடக்கும் ஒரு நிகழ்ச்சி என்று அலட்சியமாக இருந்து விடாதே. எதிர்காலத்தில் உனது நிம்மதிக்கு அதுதான் அஸ்திவாரம். கவனமாகப் பார்த்து முடிவு செய். ஒன்றைத் தீர்மானித்த பின்பு எதற்காகவும் அச்சப் படாதே! உனக்கு எனது நல்வாழ்த்துக்கள்."

சிங்கப்பூர் செல்ல இருந்த எம்.ஜி.ஆர். எங்கிருந்தோ கேபிளில் பேசினார். அவரிடம் சென்று திருமணத்தைப் பற்றிக் கூறி ஆலோ சனை பெற வேண்டுமென்று ஜெயசித்ரா நினைத்துக் கொண்டி ருக்கும்போதே, அவர் ஆலோசனையும், ஆசியும் அட்வான் சாகவே கிடைத்துவிட்டது. கணேஷ் அவர்களை ஜெயசித்ரா திருமணம் செய்துகொண்டு, நல்ல துணைவியாகவும், தாயாகவும் வாழ்கிறார்.

எப்போது ராமாவரம் தோட்டம் சென்றாலும், "சாப்பிட் டாயா?" என்ற கேள்விதான் தாயுள்ளம் கொண்ட எம்.ஜி.ஆரிட மிருந்து முதலில் பிறக்கும்.

"இருந்த இடத்திலிருந்தே சமையல் அறைக்கு போன் செய்து, சூடாக முதலில் பொங்கல் கொடுத்துவிட்டு, அப்புறம் என் னென்ன பரிமாற வேண்டும் என்று சொல்லுவார். சாப்பிட்ட பின்புதான் பேசுவார். ஜானகி அம்மாவும் அப்படித்தான்" என்றார் ஜெயசித்ரா.

அமெரிக்காவிற்கு மீண்டும் மருத்துவப் பரிசோதனைக்காக எம்.ஜி.ஆர். சென்று திரும்பி வந்திருந்தார்.



திருப்பதிக்குச் சென்று ஏழுமலையான சந்நிதானத்தில் நெஞ் சுருக வேண்டிக்கொண்டு, ஜெயசித்ரா குடும்பத்துடன் சென்னை திரும்பினார். திருப்பதி பிரசாதங்களை எடுத்துக் கொண்டு, பழங் கள் வாங்கிக் கொண்டு, எம்.ஜி.ஆரைப் பார்ப்பதற்கு ராமாவரம் தோட்டத்திற்குச் சென்றார். உள்ளே சென்றதும் திகைத்துப்போய் நின்றுவிட்டார்.

சாதிமத பேதமின்றி பலர், குடும்பம், குடும்பமாக அங்கே கூடியிருந்தனர்.

வயதான மூதாட்டிகள், பிராமண குலத்தைச் சேர்ந்த மாமிகள்...

"இதோ... இந்தக் கஷாயத்தைச் சாப்பிடுங்கோ... ஒரு குறையும் வராது."

"தம்பி... இந்த மருந்து உனக்காகவே தயார் செய்தது. மறக்காம தினந்தோறும் சாப்பிடு. ஆயிரம் வருஷத்துக்கு ஆரோக்கியமா இருப்பே..."



இவ்வாறு மருந்துகளை மிகவும் பாசத்தோடு நீட்டிய தாய்மார்கள் பலரையும், பழங்களையும் கோவில் பிரசாதங்களையும் வழங்கிய சகோதரிகளையும், சகோதரர்களையும், குழந்தைகளையும் கண்ட ஜெயசித்ராவுக்குக் கண்கள் கலங்கின. அவரே கூறினார்...

"ஒவ்வொருவரும் போட்டி போட்டுக்கொண்டு, உண்மையான வாஞ்சையோடு, அவருக்காகத் துடித்த காட்சி, இன்னமும் என் நெஞ்சத்திரையில் அப்படியே தெரிகின்றது. இதைப்போல் அன்பைப் பொழிந்ததை நான் அதுவரையில் கண்டதில்லை. அவர்கள் அனைவரையும் முகமலர்ச்சியோடு தனித்தனியே விசாரித்து அனுப்பி வைத்தார். அதன் பின்பு நான் பிரசாதத்தையும், பழங்களையும் கொடுத்தேன்."

"நான் என்ன குழந்தையா? இதெல்லாம் எதற்கு?" என்று பழங்களைப் பார்த்தபடி எம்.ஜி.ஆர். கேட்டார்.

பின்னர் எம்.ஜி.ஆரே அங்கிருந்த புகைப்படக்காரரை அழைத்துப் படம் எடுக்கும்படி கூறினார்.

அந்தப் புகைப்படத்தை இப்போது பொக்கிஷம்போல் ஜெய சித்ரா பாதுகாத்து வருகிறார்.

"மக்களோடு ஒன்றுகலந்து, மக்கள் இதயத்தில் நீக்கமற நிறைந்து, நிலைத்து வாழுகின்ற உயர்ந்த தலைவராக மட்டுமின்றி, எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாகவும் அண்ணன் எம்.ஜி.ஆர். வாழ்ந்தார். அவரைப்போல ஒருவரைப் பார்க்க முடியுமா?" ஜெயசித்ரா விழிகள் பனிக்க என்னைப் பார்த்து கேட்டார்.

நான் கற்ற தமிழ் எனக்குக் கை கொடுக்கவில்லை. இந்த அனாதையின் வாய், பேச்சை மறந்து ஊமையாகிவிட்டது.

அடுத்து - 'நல்லவர் போற்றும் வல்லவர்' எம்.ஜி.ஆரைச் சந்திப்போம்!



## தன்னலமின்றி வாழ வைத்து தமிழ் மண்ணைப் போற்றியவர்!

கடந்தகால நினைவுகள் என் நெஞ்சில் வலம் வருகின்றன.

வரிபாக்கிக்காக மத்திய அரசிடம் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். தன்னுடைய வீட்டை அடகு வைத்திருக்கிறார் என்கின்ற செய்தியைக் கேட்டு ஒரு தொண்டர் பதறிப் போனார்.

"தங்கள் மீது உயிரையே வைத்திருக்கும் நாங்கள் நொடிப் பொழுதில் அந்தக் கடனை அடைத்து விடுகிறோம். நீங்கள் எங்களுடைய அன்புக்குரிய அருமை அண்ணன். உரிமையோடு கேட்கிறேன். தயவுசெய்து சரி என்று ஒரு வார்த்தை கூறுங்கள், போதும். தங்களுக்காக எந்தத் தொல்லையாக இருந்தாலும் ஏற்றுக் கொள்கிறோம்" என்று மன்றாடினார்.

அமைதியாக, உறுதியாக, தெளிவாக புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். புன்முறுவலோடு பதில் கூறினார்.

"என் உடம்பில் இன்னும் உழைக்கும் சக்தி எனக்கு இருக்கிறது. வேலையும் அதற்கு உரிய பணமும் கிடைக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் இருக்கும் என் கடனைத் தீர்க்க நீங்கள் விரும்புகிறீர்கள். உங்கள் அன்பிற்கு நன்றி! நான் தமிழ்நாட்டில் மூன்று நான்கு வயதில் அடியெடுத்து வைத்தபோது இன்று உள்ளது போல் எனக்கு வீடும் இல்லை, காரும் இல்லை. வேறு எந்தவிதமான வசதியும் எனக்கு இல்லை. ஒருவேளை எனக்கு இருப்பதாகச் சொல்லப்படுகின்ற வீட்டையோ, சொத்துக்களையோ இந்தியப் பேரரசு எடுத்துக் கொண்டு, பின்பு அந்த வீட்டில் குடியேறுபவர்கள், என்னை வாழவைத்த தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் எனக்கு அதிக மகிழ்ச்சிதான் ஏற்படும். எனவே ஏமாற்றம் அடையும் நிலையில் நானில்லை.



**லட்சக்கணக்கான விவசாயிகள், தொழிலாளர்கள், கடன் சுமையால், துன்பச் சூழ்நிலையில் உழன்று கொண்டு இருக்கின்றார்கள். அவர்களைப் பற்றித் தான் நாம் சிந்திக்க வேண்டும்."**

இன்னொரு முறை ஒரு நண்பர் வினா தொடுத்தார்.

"உங்களைப்போல் புகழ்பெற என்ன செய்யவேண்டும்?"

பலத்த சிரிப்புக்குப் பின் பதில் கூறினார். புகழுக்குரிய எம்.ஜி.ஆர். அடக்கமாக...

**"எனக்குப் புகழ் இருக்கிறதா ? நான் பெற்றிருப்பதாக நீங்கள் கூறும் இந்தப் புகழ் போதாது. ஒரு மனிதன் மறைந்த பிறகு அவனை அந்த நாடு மறக்காமல் போற்றினால்தான் அவன் புகழ்பெற்றவனாகிறான். இப்போது எனக்குச் சூட்டப்படுகின்ற மாலைகள், தரப் படுகின்ற பாராட்டுகள் இவைகளை வைத்துக் கொண்டு புகழின் எல்லைக்கோட்டைப் பற்றி முடிவுக்கு வராதீர்கள். அண்ணல் மகாத்மாவைப் போல், அண்ணாவைப்போல புகழ் பெற விரும்புகிறவர்கள், தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழவேண்டும். அதுதான் நிறைவான வாழ்வு."**

அடக்கமாகக் கூறிய பண்பாளர், நீலத் திரைக்கடல் ஓரத்திலே, அண்ணாவின் அருகிலே, அடக்கம் செய்யப்பட்டு விட்டார். ஆனால், அவர் வார்த்தைகள்... எண்ணங்கள்... கோடானகோடி உள்ளங்களில் கொலுவிருக்கின்றன.





## அன்றொரு நாள் 'வெண்ணில'வாய் அவர் இருந்தார் என் அருகில்!

இதயக் கோவிலில் குடிகொண்ட அந்த அன்பு தெய்வத்தை முதன்முதலாகக் கண்குளிரத் தரிசித்த அந்தப் பொன்னாளை எண்ணிப் பார்க்கிறேன்.

1953ஆம் ஆண்டு என்று நினைவு!

ஆரூருக்கு மக்கள் திலகம் எம்.ஜி.ஆரும், நடிகர் திலகம் சிவாஜியும், கலைஞர் கருணாநிதியும் வந்து பேபி திரையரங்கில் சிறப்புரையாற்றினார்கள்.

மீண்டும் ஒரு முறை ஆரூர் வந்தார்.

இரு முறையும் செவிக்கு செந்தமிழ் விருந்து படைத்தார்.

நாகையில் வண்டிக்காரத் தெருவில் பெரும்பாலும் குடிசைகள்தான்! ஒரு நாள் அந்த ஏழைகளின் குடிசைகள் அக்னியின் அரசாட்சியில் சிக்கின. விளைவு -

ஏழை மக்கள் குடியிருக்க இடமின்றி நடுத்தெருவில் நின்றனர்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆருக்குத் தெரிவிக்கப்படுகின்றது. அபயக்குரல் கேட்டு அவர் சிறப்புக் கூட்டத்திற்கு வருகின்றார்.

அப்போது -

வரவேற்பு வளைவிற்கு நான் எழுதிய வாசகங்கள்கூட இன்னும் மறக்கவில்லை!

மக்களுக்குத் துயரென்றால்
அக்கணமே அங்கிருக்கும்

*பக்திக்குரிய வள்ளல் நீங்கள்!*
*இக்கணமும் அதற்கே வந்தீர்! வருக!*

சிறப்புக் கூட்டத்தில் வசூலான தொகையைவிட, மக்கள் திலகம் தந்த நிதி அதிகம்! அந்தப் பெருநிதியால் ஏழை மக்கள் பலருக்குக் குடியிருப்புகள் உருவாகின! கடையெழு வள்ளல்களை கண்முன்னே கண்டதில்லை. எழுவரும் ஒருருவில் எழுந்து வந்தது போல் எம்.ஜி.ஆர். இருந்தார்.



நாகையில் தேர்தல் கூட்டம். நாகூர் அனிபா சட்டப்பேரவைக்கும், நாஞ்சில் மனோகரன் நாடாளு மன்றத்திற்கும் போட்டியிட்ட சமயம்! 1957ஆம் ஆண்டு!

அவுரித்திடல் என்று சொல்லப்படும் காந்தி மைதானம் - அப்படிப்பட்ட மக்கள் வெள்ளத்தை அதுவரை சந்தித்ததில்லை!

மேடைக்குள் கூட்டம் புகுந்துவிடும் என்று நானும் சில தோழர்களும் கைகோர்த்துக் கொண்டு நிற்கின்றோம்.

திடீரென்று -

நாங்கள் நெருக்கித் தள்ளப்படுகின்றோம் - எனினும் சமாளித்துக் கொண்டு நிற்கின்றோம்.

"வந்துவிட்டார்... வந்துவிட்டார்" என்று குரல்கள் ஒலிக்கின்றன.

சலசலப்பு அடங்கி... மீண்டும் அமைதி!

காரில் வந்த அவர் மேடைக்கு வர இயலாமல், திரும்பிச் சென்று, ஜீப்பில் ஏறி வருகிறார்.

பரபரப்பு...! வாழ்த்தொலி முழக்கம் கேட்டு, நாங்கள் உறுதியாக நிற்கின்றோம்.

எங்கே வருகிறார் என்று திரும்பிப் பார்ப்பதற்குள்...

எனது கைமீது ஒரு வலுவான பிடி... இரும்புப் பிடியாக விழுகிறது! வலி தாங்கமுடியாமல் பார்க்கிறேன் - புரட்சித்தலைவர்தான் நின்று கொண்டிருக்கிறார்! அவருடைய பிடிதான் அது! அதன்பின் வலி தெரியவில்லை. அதனை நினைக்க நினைக்க சுகமாக இருக்கிறது.

அவரது பிடியில் அன்றே நான் 'அக'ப்பட்டு விட்டேன். அவருக்குப் பாதுகாப்பு அளிக்கச் சென்ற எனக்கு, அவர் பாதுகாப்பு தந்து மேடைக்கு அழைத்துச் சென்றார்.



## காலமெல்லாம் கட்டிப்போட்டார்

படப்பிடிப்பு அரங்கு ஒன்றில், நண்பர் ஒருவர் அறிமுகப் படுத்தினார்.

"இவர்தான்... நாகை தருமன்..."

அவ்வளவுதான் -

நான் எதிர்பாராத, கலைத்துறையினர் பலரிடம் காணமுடியாத பண்பைக் கண்டு பிரமித்துப் போய்விட்டேன்.

அந்த எவரெஸ்ட் சிகரம் எழுந்து நின்றது.

"நான்தான் எம்.ஜி.ஆர்." என்று தன்னைத்தானே அறிமுகப் படுத்திக் கொண்டார்.

"எனக்காக நீங்க எழுந்து நிற்க வேண்டுமா?" என்று பரபரப் போடு கேட்டேன்.

"உங்களை முன்பே தெரியும். உங்கள் எழுத்துக்களைப் படித் திருக்கிறேன். இருந்தாலும் நெருங்கிப் பழகியதில்லை. இனிமேல் தான் நெருங்கப் போகிறோம்...! இந்த சமயத்தில் முறைப்படி நடந்து கொள்வதுதான் சரி. நீங்கள் ஏன்... உங்களையே குறைவாக நினைத்துக் கொள்கிறீர்கள்?" என்றார்.



அவரை உயர்வாக மதிப்பதைத் தடுக்கவில்லை. அதே சமயம் நம்மைத் தாழ்த்திக் கொள்வதை அவர் அனுமதிப்பதில்லை!

என்ன உயர்வான பண்பு-ஒழுங்கு! இவைகள்தான் காலமெல் லாம் அவர்வசம் என்னைக் கட்டிப்போட்டுவிட்டன.



## உயிருக்குப் போராடும்போதும் மற்றவர் நலம்நாடும் உத்தமர்!

மக்கள் திலகம் வெளிநாடு சென்று வந்ததும் பத்திரிக்கையா ளர்கள் சிலர் சந்தித்தோம். கேள்விக்கணைகளுக்கு சளைக்காமல் சுவையாக அவர் பதில் கூறிக் கொண்டிருந்தார்.

திடீரென்று -

"உங்களைக் கவர்ந்தது என்ன?" என்று எதனையோ எதிர் பார்த்து, ஒரு மாதிரியாக நண்பர் ஒருவர் கேட்டார்.

"தருமன்... கவர்வது என்றால் என்ன...?" அவரிடம் பேச விரும்பாமல், கேள்வி கேட்ட முறை பிடிக்காமல் மக்கள் திலகம் என்னிடம் வினவினார்.

இதுதான் தர்மசங்கடம்!

"காந்தம் இருக்கும் இடம் நோக்கித்தான் இரும்பு செல்லும். உங்களைக் கவர முடியாது" - இது என் சமாளிப்பு.

"நான் கேட்டதற்குப் பதில் சொல்லுங்கள்! அல்லது வேறு வகையில் அவர் கேட்ட கேள்வியைக் கேளுங்கள்" அவர் என்னை விடுவதாக இல்லை. சரியாக அகப்பட்டுக் கொண்டு விட்டேன்.



"வெளிநாட்டில் பிடித்தமானது... உங்களை ஈர்த்த அம்சம் என்ன?" என்றேன்.

அவ்வளவுதான்! எழுந்து வந்து என்னை வாரி அணைத்துவிட்டார். வாய் மொழிகள் பாராட்டு மலர்களைக் கொட்டின.

எனது தாய், என்னை அரவணைத்து உச்சிமோந்து ஆசி வழங்கியது போன்ற உணர்வு! அந்த உணர்வுக்கு - அதைத் தந்தவருக்கு அஸ்தமனம் ஏது?

1967ஆம் ஆண்டு ஜனவரி 12ம் தேதி துப்பாக்கியால் சுடப்படுகின்றார். சுட்டவர் இன்னொரு நடிகர்.

இராயப்பேட்டை மருத்துவமனையில் மக்கள் திலகம் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார். ரத்தம் கொட்டிக் கொண்டிருக்கும் அவருக்கு டாக்டர்கள் அனைவரும் சூழ்ந்து கொண்டு சிகிச்சையளிக்கின்றனர்.

"எல்லோரும் என்னையே கவனித்துக் கொண்டிருக்கின்றீர்களே...! அண்ணனைப் போய்ப் பாருங்கள். அவர் எப்படி இருக்

கிறார்...?" புரட்சித்தலைவர் அந்த நிலையிலும், தன்னைச் சுட்ட வரைக் கவனித்து சிகிச்சையளிக்கும்படி வேண்டுகிறார்.

உயிரோடு போராடிக் கொண்டிருக்கும் நிலையிலும், தன்னை அப்படிப்பட்ட நிலைக்கு ஆளாக்கியவரைக் காப்பாற்ற வேண்டு மென்று ஒரு சராசரி மனிதனால் எண்ண முடியுமா?

சுடப்பட்டவரின் வேண்டுகோளின்படி சுட்டவருக்குச் சிகிச்சை யளிக்க சில டாக்டர்கள் செல்கின்றனர்.

துப்பாக்கிக் குண்டை பரிசாகக் கொடுத்தவரும், அதனைப் பெற்று கழுத்திலே பதித்துக் கொண்டவரும் சில ஆண்டுகளுக்குப் பின் சந்திக்கின்றனர்.

பகை கக்கும் பார்வையில்லாமல் குத்திய ஈட்டியைப் பார்த்து, குத்துப்பட்ட நெஞ்சம் "அண்ணே" என்று நலம் வினவியபோது, நான் அதிசயமாகப் பார்த்தேன்.

தனக்குச் சாவைப் பரிசாகத் தர விரும்பியவர் இயற்கையாக மரணத்தைத் தழுவியபோது, அவருடைய நடிப்புத் திறமையை



வானளாவப் புகழ்ந்து கண்ணீர் அஞ்சலி செலுத்திய மாபெரும் மனிதர் மக்கள் திலகம்.

புரட்சித்தலைவர் 'ஸ்ட்ரோக்' வந்து 'அப்பெல்லோ' மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றார். டாக்டர்கள் குழு போராடி, அவருக்கு நினைவு வரச் செய்கின்றது. நினைவு வந்ததும் முதன் முதலாக மருத்துவமனை முதல்வர் ரெட்டியிடம், "எனக்கு வைத்தியம் செய்ததுபோல் எல்லோருக்கும் செய்வீர்களா?" என்று கேட்டிருக்கின்றார்.

நெருக்கடியான நிலையில் தம் உயிருக்குப் போராடும் போது கூட, மற்றவர்கள் நலத்தை நாடும் உயர்ந்த தன்மை எத்தனை பேருக்கு இருக்கும்?

அதனால்தான் அவர் பொன்மனச் செம்மல்!

பேரறிஞர் அண்ணா காலமானபோது, கடற்கரையில் சந்தனப் பெட்டியில் அவரது உடலை வைத்துக் கயிற்றினால் கட்டி, குழிக்குள் இறக்கும்போது, "அண்ணா... அண்ணா..." என்று கதறி மயக்கம் போட்டு விழுந்தார் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆரின் பொன்னுடல் - பேரறிஞர் அண்ணாவின் சமாதிக்கு தென்புறத்தில் சந்தனப் பெட்டியில் வைத்து நல்லடக்கம் செய்தபோது மயங்கி விழுந்தோர், மரணத்தையே அணைத்துக் கொண்டோர் பலர்.

> "இந்த கனி கிடைக்காதா என்று பலர் ஏங்கிக் கொண்டிருந்னர். அது என் மடியில் விழுந்தது. அதனை என் மார்பில் எடுத்து வைத்துக் கொண்டேன்" என்றார் அண்ணா!

அந்த அண்ணனின் பெயர் விளங்க வைத்த மன்னன் மக்கள் திலகம். அவர் சமாதிக்குத் தென்புறத்தில் சந்தனப்பெட்டியில் வைத்து நல்லடக்கம் செய்யப்பட்டு விட்டார்.

'தங்கத்தின் நிறமெடுத்து
சந்தனத்தில் செய்த உடல்'

சந்தனப்பெட்டியில் கண்ணுறங்குகிறது.

தந்தை பெரியார் மறைந்த நாளில், அண்ணாவின் சமாதியருகே உறங்கப்போன உத்தமத் தலைவர் எம்.ஜி.ஆர். வரலாற்றில் முடிவிலும், பொன் முடி தரித்த பூமானாக புகழுடன்தான் சென்றார். எந்த மாநில முதல்வருக்கும் கிட்டாத அரிய மரியாதை பெற்று தேசத்தலைவர்களில் ஒருவராக, இறுதி யாத்திரை செய்த மக்கள் திலகம் வரலாற்றில் புதிய சாதனை படைத்துள்ளார்.

இந்தியக் குடியரசுத் தலைவர், துணைத்தலைவர், பிரதமர், மத்திய அமைச்சர்கள், மாநிலங்களின் முதல்வர்கள், இலங்கை அமைச்சர்கள் அஞ்சலி செய்ததும், தேசத்தலைவருக்கு உள்ள எல்லா அந்தஸ்துக்கும் உரியவராக இந்தியாவே துக்கத்தில் மூழ்கியதும் அவர் தூய தொண்டுக்கு தேடிவந்த கௌரவம்.

அண்ணா கடைசியாகக் கலந்து கொண்டது கலைவாணர் என்.எஸ்.கே. சிலை திறப்பு விழா நிகழ்ச்சி!

கலைவாணர் இறுதியாகப் பங்கு கொண்டது அண்ணாவின் படத்திறப்பு விழா!



மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். கடைசியாகப் பங்கு கொண்ட பொதுநிகழ்ச்சி ஆசியாவின் ஜோதி பிரதமர் நேரு சிலை திறப்பு விழா!

பண்டித நேருவிடம் சீனப் படையெடுப்பின்போது நிதி அள்ளித்தந்த முதல் மனிதர் மக்கள் திலகம்தானே!

கலையுலக வரலாற்றில் 63 ஆண்டுகளும், திரையுலக வரலாற்றில் 51 ஆண்டுகளும் சாதனை புரிந்த மக்கள் திலகம், தமிழகத்தில் தொடர்ந்து 11 ஆண்டு காலம் ஆட்சிபுரிந்த முதல்வர் என்ற முத்திரை பதித்துவிட்டார்.

இயற்கையாக அந்த உருவம் படைத்த உணர்வுகள், கொள்கைகள், பண்புகள், திட்டங்கள் என்றும் அழிவதே இல்லை. அவைகளைத் தாங்கிய இதயங்கள், அவைகளைச் சொல்லி, செயல்பட்டுக் கொண்டே இருக்கும். அவரை ஏற்றுக்கொண்ட பட்டாளம் பெருகிக் கொண்டே இருக்கும்.

இதயங்கள் இருக்கும்வரை, அதில் இனிய பண்புகள் இருக்கும் வரை அவர் வாழ்வார்.

புரட்சித்தலைவர், டாக்டர் எம்.ஜி.ஆர். நம் கண் எதிரில் இல்லையே தவிர, நாட்டு மக்கள் ஒவ்வொருவருடைய இதயத்திலும் இயக்கமாய் இருக்கின்றார்.

இப்போது -

காலமெல்லாம் பம்பரம் போல் சுற்றி வந்த அந்தக் கால்கள் இளைப்பாறுகின்றன!

எத்தனையோ திட்டங்களைத் தந்து, ஏழை எளிய மக்களின் கண்ணீரைத் துடைத்த கரங்கள் ஓய்வு பெறுகின்றன!

அவர் உறங்கிய நேரம் மிகமிகக் குறைவு! நாட்டுக்கு உழைத்த நேரம் அதிகம்!

அந்த உத்தமத் தலைவரின் உன்னதக் கலைஞரின் அயர்வு நீங்கட்டும் - அமைதி பெறட்டும்!

*வங்கக் கடலும், அண்ணாவின் தமிழும் அந்தத் தங்கத் தமிழனை தாலாட்ட அவர் கண் துயிலட்டும்.*

*நீலக்கடல் அலைபோல நீடுழி வாழ்க!*
*நெஞ்சமெனும் கங்கையிலே நீராடி நீ வாழ்க!*
*காஞ்சி மன்னன் புகழ்போல் காவியமாய் நீ வாழ்க!*
*கடவுளுக்கும் கடவுள் என் கண்மணியே வாழ்க!*

*வாழும் நாளெல்லாம் அன்னை மனங்கொண்டு அருகிலிருந்த அந்த இதய தெய்வத்தை வணங்கி, வாழ்த்துப்பாடி தாலாட்டு வோம்! அவர் நெஞ்சில் நிறைவார்.*

*வாழ்க எம்.ஜி.ஆர்.!*

*வெல்க அவர் இலட்சியங்கள்!*



**புறத்தில்... அகன்று...**
**அகத்தில்... நிறைந்தவர்!**



**ராமன் இல்லாத அயோத்தியா...?**
**கண்ணன் இல்லாத கோகுலமா...?**
**விடிவெள்ளி தோன்றாத விண்வெளியா...?**
**வெண்ணிலவு பவனிவராத விரிவானமா...?**
**இமயம் இல்லாத இந்தியாவா...?**
**அலைகள் ஒலிக்காத கடலா...?**
**இதயம் இல்லாத உடலா...?**
**இன்பம் தரும் கருத்தில்லாத தமிழ்க்கவிதையா...?**
**எம்.ஜி.ஆர். இல்லாத தமிழகமா...?**

*எண்ணிப்பார்க்க முடியாத ஒன்று. இதயம் எரிமலையாய் வெடிக்குதே இன்று!*

அந்த தசரதராமன் அயோத்தியை விட்டுக் கானகம் செல்கின்றான் என்று அறிந்தவுடன் மக்கள் அடைந்த துயரத்தைக் கவிச் சக்கரவர்த்தி கம்பன் கூறுகின்றான்:

*ஆவு மழுதவதன் கன்றழுத வன்றலர்ந்த*
*பூவு மழுதபுனற்புள்ளழுத கள்ளொமழும்*
*காவு மழுத களிறழுத கால்வயப் போர்*
*மாவு மழுதனவம் மன்னனை மானவே*
*விழுந்தனர் சிலர்; சிலர் விம்மி*
*விம்மி மேல் எழுந்தனர்;*
*முகத்திழி கண்ணீரிடை அழுந்தினர் சிலர்.*
*மக்களை மறந்தனர் மாதர் தாயரைப்*
*புக்கிட மறிந்திலர் புதல்வர் புசலிட்*
*டுக்கன ருயங்கின ருருகிச் சோர்ந்தனர்*
*துக்க நின் றறிவினைச் சூறையாடவே.*

அன்றைய அந்த அயோத்தியின் நிலையில் இன்று தமிழகம்...

தமிழ்த்தாயின் கண்களில் கங்கையும், காவிரியும் கண்ணீராய்க் கொட்டுகின்றன.

*நந்தா விளக்கனைய நாயகனே நானிலத்தோர்*
*தந்தாய் தனியறத்தின் றாயே தயாநிலையை*
*எந்தாயிகல் வேந்தரேறே யிறந்தனையே*
*அந்தோவினி வாய்மைக் காருளரே...*

கலைத்தாய் வேதனையோடு குமுறினாள்... அழுதாள்; விழி நீர்ப் பெருக்கினாள்.

தமிழக மக்கள் கண்ணீரால் கடலுக்கு நீர் பாய்ச்சினர்!

*மக்கள் திலகம்...*
*புரட்சி நடிகர்...*
*பொன்மனச் செம்மல்...*
*பாரத்...*
*புரட்சித்தலைவர்...*
*வாத்தியார்...*



*நடிக மன்னன்...*
*கலைமன்னன்...*
*மக்கள் நடிகன்...*
*மக்கள் கலைஞன்...*
*நிருந்திய சக்கரவர்த்தி...*

இன்னும் எத்தனையோ பட்டங்களையும், மக்களின் அன்பு மொழிகளையும், அடைமொழிகளையும் பெற்று தன்னிகரற்று விளங்கிய தனிப்பெரும் கலைஞர்; அரசியல் தலைவர் எம்.ஜி.ஆர்.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்போல் இனிதாவது எங்கும் காணோம்' என்றார் தேசிய கவி பாரதியார்.

'யாமறிந்த கலைஞர்களிலே, அரசியல் தலைவர்களிலே, மக்கள் திலகம்போல் திறன்பெற்றோர் எங்கும் காணோம்!' என்று மனம்திறந்து கூறலாம்!

ஒவ்வொரு துறையிலும் சிறப்பான இடம் பெற்றவர்கள் பலர் உள்ளனர். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். போல், எல்லா துறைகளி

லும் பேராற்றல் பெற்று, ஈடு இணையற்றவராகத் திகழ்பவர் வேறு எவரேனும் இருக்கிறார்களா?

பதில் 'இல்லை' என்று வருவது மட்டுமா? 'எம்.ஜி.ஆர். இன்று நம்மிடையே இல்லை' என்றும் வருகின்றதே!

இது உண்மையா?

பேரறிஞர் அண்ணா மறைந்தபோது, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். பேசிய வார்த்தைகள் நெஞ்சுப் பெட்டகத்தில் பொக்கிஷமாக பாதுகாக்கப்பட்டுள்ளன.

> **"அண்ணா அவர்கள் புறத்தில் வேண்டுமானால் நம்மை விட்டு அகன்று இருக்கலாம். அகத்தில் நாம் சாகும்வரை இருந்துகொண்டு தான் இருப்பார்."**

அவரது பொன்மொழிகள் அவருக்கும் பொருந்தும் அல்லவா?

'இருள்விலக அகல் விளக்காக இருந்தாவது பயன்பட வேண்டும்' என்பது பேரறிஞர் அண்ணா எனக்குக் கற்றுத்தந்த பாடம்.



விழிநீரைத் துடைத்துக் கொள்வோம்; வேதனையை மறப் போம்!

எம்.ஜி.ஆர். மண்ணுக்குள் போகும் சாதாரண மனிதரல்ல; மக்கள் மனதிற்குள் வாழும் அற்புதத் தலைவர்!

புரட்சித்தலைவர்...

இந்த ஒன்பது எழுத்துக்களின் ஊர்வலம்...

இரு சொற்களில் அற்புத இணைப்பு...

தமிழகத்தின் நம்பிக்கை உருவம். கோடான கோடி மக்களின் உள்ளங்களில் கொலுவிருக்கும் ஈடு இணையற்ற தலைவர்.

எம்.ஜி.ஆர். என்றால் - வெற்றி, புகழ், தன்னம்பிக்கை, விடா முயற்சி, உழைப்பு, தியாகம், தொண்டு, ஈகை, எளிமை, பண்பு என்று பொருள்!

இந்தச் சொற்கள் வாழும் வரை, அந்த புனிதரின் பெயர் வாழும்!

தமிழகத்தில் கலை, அரசியல் இரு துறைகளிலும் புரட்சித்த லைவர் எம்.ஜி.ஆர். பெற்ற வெற்றிகளுக்கும், குவித்த புகழுக்கும் காரணம் என்ன? ·

வாக்கினிலே வாய்மை, கொண்ட கொள்கையைக் கடைப் பிடித்து செயல்படுத்துகின்ற நேர்மை, இதயத்தால் அன்பைப் பொழியும் தூய்மை, மக்களுக்காகப் பசி நோக்காது, கண்துஞ்சாது பாடுபடுகின்ற தன்னலமற்ற தியாக மனப்பான்மை ஆகியவைகள் தான்.

தன்னை உருவாக்கிக் கொண்டு, அடுத்தவர்களையும் நெஞ்சார நேசித்து பண்படுத்தினால் உயர்ந்து கொண்டே போக முடியும் என்பதற்கு உதாரண புருஷர் அவர்!

'அவர் ஒரு சரித்திரம்' என்கின்ற போது முடிவேது? சரித்திரம் முடிவதில்லை! கவிச்சக்கரவர்த்தி கண்ணதாசன் கூறியதுபோல்

**இது முடிவல்ல!**
**இன்னொரு தொடக்கம்!**



நாடு போற்றிட... நல்லறிஞர் பாராட்டிட... முக்கனிச்சுவையில்
முத்தமிழில் எழுதி... முத்திரை பதித்திடும் எழுத்தாளர், பத்திரிகையாளர்..

## நாகை தருமன் எழுதிய

படிக்க... ரசிக்க... பரவசப்பட... பாதுகாக்க வேண்டிய –
அரிய படைப்புகள்... அற்புதமான புத்தகங்கள்...

'பாரத ரத்னா எம்.ஜி.ஆர்.' . . . . . . . . . . . . . . . . ரூ. 15.00

'இதயக்கனி எம்.ஜி.ஆர்.' . . . . . . . . . . . . . . . . . ரூ. 12.00

('பொம்மை' இதழில் வெளிவந்த புதுமைத்தொடர்...
பல புதிய செய்திகள்... ஏராளமான படங்கள்...
வண்ண முகப்புடன் இரு நூல்களாகின்றன)

'புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.' . . . . . . . . . . . . . . ரூ. 10.00

'சந்திரனைப் போற்றும் நட்சத்திரங்கள்' . . . . . . . . ரூ. 30.00

'பொன் விழா' (ரஜினிகாந்த், சிவகுமார், பாரதிராஜா
நட்சத்திரக்கதைகள், உருவகக்கதைகள், குறுநாவல்கள்) ரூ. 18.00

'அறிவு விளக்கு' (ஆத்திச்சூடி சிறுவர் கதை) . . . . . . . . ரூ. 9.00

'கல்விக்கண்' (ஆத்திச்சூடி சிறுவர் கதை) . . . . . . . . . ரூ. 10.00

## விரைவில் வெளிவருபவை...

'தெய்வீக மணம்' (பக்தர்களுக்குப் பரவசமூட்டும்
திருத்தலங்கள் மகிமை) . . . . . . . . . . . . . . . . . ரூ. 15.00

'கவியரசர் சொல் கேளீர்' (கண்ணதாசன் கருத்தாரம்,
பேட்டி, நெஞ்சைத் தொடும் நிகழ்ச்சிகள்) . . . . . . . . ரூ. 15.00

'புரட்சித்தலைவர் மணிமொழிகள்' . . . . . . . . . . . . ரூ. 10.00

'வெள்ளித் திரையில் தங்கத் தமிழ்க்கலைஞர்கள்'

'வீரப்பெண்மணிகளின் வெற்றிச் சுவடுகள்'

பேரறிஞர் அண்ணா பதிப்பகம்,
'தமிழ்ச்சோலை', 16/1, பீட்டர்சு சாலைக்குடியிருப்பு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.
தொலைபேசி எண்: 8520621


பாரத ரத்னா
எம்.ஜி.ஆர்